Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 115 • 22.10.2017

இலங்கையின் முதல் தர தமிழ் வார இதழில் உங்கள் வணிக விளம்பரங்கள் நியாயமான விலைகளில் இடம்பெற வேண்டுமா

உடனே அழையுங்கள்
0768255563, 0214927561

தீபம் எப்பொழுதும் உங்களுக்கான தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்

## இந்தோனேசியாவில் சி.ஐ.ஏ அமுக்கிய புலிகளின் முக்கியஸ்தர்

ஆயுதக்கப்பல்கள் மூழ்கியதற்கு இது மட்டுமா காரணம்?

## மாடியில் இருந்து இறங்கி வராத முதலமைச்சர்

காத்திருந்து விட்டு மைத்திரியிடம் போன அமைச்சர்

பணக்காரர் ஆக 12 கோல்டன் ரூல்ஸ்

ஒரேயொரு கடிதம்... எம்.பி மீது பாய்ந்த அதிகாரி!

மட்டக்களப்பில் நடக்கும் இழுபறி அரசியல்... பிரச்சனையாகும் அரசஅதிபர் நியமனம்

## இராணுவத்தின் பொறிக்குள் வான்புலிகள் எப்படி சிக்கினார்கள் என்பது தெரியுமா?




S.K Karan
Director
0777442846

கிளிநொச்சியில் சகல வசதிகளுடன்

HOTEL SELLA Rest

A/C, Non A/c Rooms Conference
ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

அத்துடன் யாழ்ப்பாணம் - கொழும்பு பயணத்திற்கான A/c, Non A/c பேருந்து ஆசனப்பதிவுகளையும் மேற்கொள்ளலாம்.

No. 46, Uthayanagar West,
Kanagapuram Road,
Kilinochchi
021 228 5613
hotelsella@yahoo.com
021 492 5865, 021 228 5613

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வதிரி திரு இருதய கல்லூரி மாணவி செல்வி தீபன் திரிஷிகா 2017 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 177 புள்ளிகளை பெற்று சித்தியடைந்தமையை பாராட்டி பல்கலையும் கற்று பல பட்டங்களை பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்

**வாழ்த்துவோர்**


க. செல்லத்துரை (தாத்தா)
செ. தேம்பாமலர் (அம்மம்மா)
சு. சிவசந்திரபோஸ் (பெரியப்பா)
சி. செல்வராணி (பெரியம்மா)
சி. சகிஷ்னா (அண்ணா)
சி. சகிஷ்மனா (அக்கா)

துன்னாலை தெற்கு
கரவெட்டி



## யாழ் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் அதி உயர்தர வலம்புரி ஹோட்டல்.







Green Grass

**The Valampuri**





NO 1 TOPAZ

**TOPAZ**

No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை சுடிதார் மற்றீயல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No 72, Grand Bazaar Jaffna Tel 021 222 4743 Fax 021 222 7645 | No 80/24, Kasthuriyar Road Jaffna Tel 021 222 4643 | No 195, Power House Road Jaffna Tel 021 222 4933 021 221 9933 |

Email : topazagn@gmail.com



# நோர்சி மீடியா நிறுவனத்தின்

- தீபம் தொலைக்காட்சி
- தீபம் வார இதழ்
- தீபம் இணையத்தளம் (www.deepamtv.asia)

ஆகிய ஊடகங்களில் உங்கள் பிரதேச செய்திகள், ஆலய நிகழ்வுகள், விளையாட்டு நிழ்வுகள் போன்றவை இடம்பெறவேண்டுமெனில்

தொடர்புகளுக்கு

**தீபம்**

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு
நல்லூர், யாழ்ப்பாணம். (கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிடத்தொகுதி)







5

# ராஜிவ் காந்தி கொலை

## எப்படி... என்ன நடந்தது?



கே.ராகோத்தமன்



**சுபா சுந்தரம்**

போட்டோகிராபர் சுபா சுந்தரம், தமிழ் மீடியா உலகில் பிரபலமானவர்.

எண்பதுகளில் அவரைத் தெரியாதவர்கள் பத்திரிகை உலகில் இருக்கமாட்டார்கள். பிரபலமான போட்டோகிராபர் என்பதுடன் பல அரசியல் கட்சித் தலைவர்கள், அதிகாரிகள், சினிமா உலகத்தினர், வேறு பல்வேறு துறைகள் சார்ந்த வி.ஐ.பிக்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவர்.

அவர் நெருக்கமான தொடர்பில் இருந்தவர்களுள் ஒருசாரார், விடுதலைப் புலிகள். எண்பதுகளில் தமிழகத்தில் பல முக்கியஸ்தர்களுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உண்டு. தமிழகத்தை அவர்கள் தமது இரண்டாம் தாயகமாகவே கருதி வந்தார்கள். விடுதலைப் புலிகள் மட்டுமல்லாமல், இலங்கையில் செயல்படும் பல்வேறு போராளி இயக்கங்களுக்கும் தமிழகம் அடைக்கலம் அளித்திருந்தது. அரசியல் தலைவர்களின் ஆதரவும் உதவிகளும் அவர்களுக்குக் கிடைத்து வந்தன. பொதுமக்கள் அனுதாபமும் இருந்தது.

**மே 21ம் திகதி குண்டு வெடிப்பு நடந்து மக்கள் கன்னாபின்னாவென்று சிதறி ஓடத் தொடங்கி, பிராந்தியமே அதகளமானதல்லவா? அன்றிரவு சென்னையிலிருந்து பொதுக்கூட்டத்துக்குச் சென்றவர்கள் யாரும் அத்தனை சுலபத்தில் சென்னை திரும்ப முடியாத சூழ்நிலை.**

ஆனால் சுபா சுந்தரத்துக்கு விடுதலைப் புலிகளுடன் இருந்த தொடர்பு என்பது வெறும் அனுதாபம் அல்ல. உள்ளார்ந்த தொடர்பு. புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களுடன் அவருக்கு நெருக்கமான உறவு இருந்தது.

அரசியல் பணியாற்றிக்கொண்டிருந்த பேபி சுப்பிரமணியத்துக்கு அவர் மிக நெருங்கிய நண்பர். இலங்கையிலிருந்து தமிழகம் வரும் விடுதலைப் புலிகளுக்கு சுபா ஸ்டூடியோ ஒரு முக்கியமான ஜாயிண்ட்.

இந்த விவரமெல்லாம் உளவுத்துறைக்குத் தெரியும்.

காவல் துறையில் அனைத்துப் பிரிவினருக்கும் தெரியும். இருப்பினும் ராஜிவ் கொலை வழக்கில் சுபா சுந்தரமும் ஒரு 'தொடக்கப்புள்ளியாக' இருக்கக்கூடும் என்று யாரும் நினைத்திருக்கமாட்டார்கள்.

ஏனெனில் பல அரசியல் கட்சிகளுடன் அவருக்கு இருந்த தொடர்பினைப் போலவே காங்கிரசிலும் அவருக்குத் தொடர்புகள் இருந்தன.

வாழப்பாடி ராமமூர்த்தியின் வலக்கரம் போல் இருந்த கிள்ளி வளவனுக்கு அவர் மிகவும் நெருக்கமானவர்.

அன்றைய தமிழ்நாடு காங்கிரசில் அநேகமாக அனைத்து முக்கியஸ்தர்களுடனும் அவருக்குப் பழக்கம் உண்டு.

ஒரு விநோதம், சி.பி.ஐ.க்கேகூட சுபா சுந்தரம் மீது முதலில் சந்தேகம் வரவில்லை.

அவரே தனது சொந்தப் பதற்றத்தால் மூன்று விதங்களில் தன்னை வெளிக்காட்டிக்கொண்டு பிடிபட்டதுதான் இதில் முக்கியமான அம்சம்.

இதனை முதலில் விளக்கிவிடுகிறேன்.

சைதாப்பேட்டையில் இருந்த ஹரி பாபுவின் வீட்டுக்கு விசாரிக்கச் சென்றபோது, அவரது தந்தை வி.பி. சுந்தரமணி சொன்ன முதல் விஷயம், தன் மகன் சுபா ஸ்டூடியோவில் வேலை பார்த்துக்கொண்டிருந்தான் என்பது.

முதல்முதலில் சிபிசிஐடி பொலிசார் ஹரி பாபுவின் உடலருகே கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டையைப் பார்த்து சுந்தரத்துக்கு போன் செய்தபோது அவர் ஏன் தனக்கு அவனைத் தெரியாது என்று சொல்லவேண்டும்?

முதல் சந்தேகம் அங்கே விழுந்தது.

தொடர்ந்த விசாரணைகளில் மேலும் பல தகவல்களை ஹரி பாபுவின் தந்தை சொன்னார்.

மே 21ம் திகதி இரவு ஸ்ரீபெரும்புதூரில் 'ஒரு போட்டோகிராபர்' இறந்துவிட்ட விவரத்தை, சென்னையைச் சேர்ந்த தினசரிப் பத்திரிகை நிருபர் ஒருவர் மூலம் கேள்விப்பட்டு, ஹரி பாபுவின் தந்தை முதலில் சுபா சுந்தரத்தைப் பார்க்கத்தான் ஓடியிருக்கிறார்.

உடனே ஸ்ரீபெரும்புதூருக்குப் போக வேண்டும். உங்கள் காரைக் கொடுங்கள். இந்த நேரத்தில் நான் வேறு யாரைப் போய்க் கேட்க முடியும்?

'யோவ், தேவையில்லாத பிரச்னை வரும்யா. நீ வேற வண்டி புடிச்சிப் போயிடு' என்று சொல்லி சுபா சுந்தரம் வண்டி தர மறுத்திருக்கிறார். மகன் இறந்த பதற்றத்தில் மேற்கொண்டு பேசிக்கொண்டிராமல் அவர் வேறு ஏற்பாடு செய்துகொண்டு ஸ்ரீபெரும்புதூருக்கு விரைந்திருக்கிறார்.

காஞ்சிபுரம் சென்று பொது மருத்துவமனையில் அடையாளம் தெரியாதிருந்த ஓர் ஆண் உடலைப் பார்த்து, அது தன் மகன் என்று காவல் துறையினரிடம் கூறி, உடலைப் பெற்றுக்கொண்டு, அங்கேயே இடுகாட்டில் எரித்துவிட்டுச் சென்னைக்குத் திரும்பியிருக்கிறார்.

'ஹரி பாபுவா? எனக்கு அப்படி யாரையும் தெரியாதே' என்று சொன்ன சுபா சுந்தரம். தன்னிடம் வேலை பார்த்த ஒருவன் நேரே சுந்தரமணியிடம் சென்று, 'இதோ பாருங்கள். விசாரணை எங்கெங்கோ போகிறது. உங்கள் மகனுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாகவெல்லாம் பேசுகிறார்கள். அதெல்லாம் இல்லை என்று நீங்கள் ஒரு மறுப்பு அறிக்கை கொடுத்து விடுங்கள்.

இல்லாவிட்டால் பெரிய பிரச்னையாகி விடும்' என்று சொல்லி மறுப்பு அறிக்கை எழுத வைத்ததும் பின்னால் நடந்தது.

ஹரி பாபுவின் தந்தை சொன்ன இந்தத் தகவல்கள் சுந்தரத்தின் மீது சந்தேகத்தை உண்டாக்கினாலும் அவரை நாங்கள் முதலில் கைது செய்யவில்லை.

கைது செய்யுமளவுக்கு அவை வலுவான காரணங்களாகத் தோன்றவில்லை. ஆனால் அத்தகைய வலுவான காரணம் வேறொரு இடத்திலிருந்து எங்களுக்குக் கிடைத்தது.

மே 21ம் திகதி குண்டு வெடிப்பு நடந்து மக்கள் கன்னாபின்னாவென்று சிதறி ஓடத் தொடங்கி, பிராந்தியமே அதகளமானதல்லவா? அன்றிரவு சென்னையிலிருந்து பொதுக்கூட்டத்துக்குச் சென்றவர்கள் யாரும் அத்தனை சுலபத்தில் சென்னை திரும்ப முடியாத சூழ்நிலை.

வண்டி கிடையாது. எங்கும் கலவரம், களேபரம். பொதுக்கூட்டத்துக்கு வந்திருந்த பத்திரிகையாளர்களில் பலர் பூந்தமல்லிவரை சென்று, அங்கிருந்த பொலிஸ் ஸ்டேஷனில் அன்றிரவு தங்கவேண்டிய சூழ்நிலை.

சென்னைக்கு போன் செய்யவும் தத்தமது பத்திரிகைகளைத் தொடர்புகொள்ளவும் அதுவே சிறந்த வழி. செல்போன்கள் புழக்கத்துக்கு வராத காலம் என்பதால் எங்காவது ஓரிடத்தில் நின்றுதான் போன் செய்தாக வேண்டும்.

அப்படி பூந்தமல்லிக்குச் சென்ற பத்திரிகையாளர்கள் புகைப்படக்காரர்களுள் ஒருவர் தேள்கடி ராமமூர்த்தி என்பவர்.

அவருக்கு ஹரி பாபு இறந்துவிட்ட விஷயம் தெரிந்திருந்தது. ஹரி பாபுவையும் அவரது முதலாளியான சுபா சுந்தரத்தையும் நன்கு அறிந்தவர் ராமமூர்த்தி.

சுபா சுந்தரம் பூந்தமல்லி காவல் நிலைய தொலைபேசி மூலம் இந்த ராமமூர்த்தியை தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்.

ஹரி பாபு இறந்துவிட்டான் என்று அவர் சொன்னதுமே சுபா சுந்தரத்திடமிருந்து வந்த முதல் ரியாக்ஷன்,'அவன் போகட்டும். முதலில் அந்த கமராவை எடுக்க வேண்டும்.' தேள்கடி ராமமூர்த்திக்கு இது முதல் அதிர்ச்சி. (தொடரும்)

# அதிகாரிகளை உலர வைக்கப்போகும் பஷீர்!

முஸ்லிம்காங்கிரசின்முன்னாள்தலைவர் அஷ்ரஃப்பின் மரணம் தொடர்பாக, உண்மையைக் கண்டறிய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடக் கோரி, தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவுக்கு மேன் முறையீடு செய்திருந்த முன்னாள் அமைச்சர் பசீர் சேகுதாவூத், கடந்த திங்கட்கிழமை, ஆணைக்குழு முன்னிலையில் வாய்மொழி மூலமான விளக்கமொன்றினை வழங்கினார்.

அஷ்ரஃப்பின் மரணம் தொடர்பான அறிக்கையினை வெளியிடுமாறு கோரி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஜனாதிபதி செயலகத்துக்கு பசீர் சேகுதாவூத் விண்ணப்பம் ஒன்றினை சில மாதங்களுக்கு முன்னர் அனுப்பி வைத்திருந்தார்.

ஆயினும்,குறித்த அறிக்கையானது தேசிய சுவடிக் கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், தற்போது அந்த அறிக்கையினை தேடிப் பெற முடியாதுள்ளதாகவும், ஜனாதிபதி செயலகத்திலிருந்து பசீருக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து, தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவுக்கு பசீர் மேன்முறையீடு செய்திருந்தார்.

இதற்கிணங்க, குறித்த ஆணைக்குழு, அழைத்தமைக்கு அமைவாக,திங்கட்கிழமை அங்கு சென்ற அவர், வாய்மொழி மூல விளக்கமொன்றினை வழங்கினார்.

இது குறித்து பசீர் சேகுதாவூத் தெரிவிக்கையில்;

“ஜனாதிபதி செயலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதிச் செயலாளர் ஒருவர் வாக்குமூலம் அளிப்பதற்காக இன்று வந்திருந்தார். அவர் ஆணைக்குழு உறுப்பினர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில்; அந்தக் ‘கோவை’ தேசிய சுவடிக் கூடத்துக்கு 2007 ஆம் ஆண்டு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்தார்.

மேலும், சேகுதாவூதின் விண்ணப்பத்துக்கு பதிலனுப்புவதற்காக, அந்தக் கோவையை மீண்டும் சுவடிக் கூடத்திடமிருந்து ஜனாதிபதி செயலகம் பெற்றது. ஆனால், அந்தக் கோவைக்குள் உண்மையைக்கண்டறிவதற்கான ஆணைக்குழுவின் அறிக்கை இருக்கவில்லை என்று, பிரதிச் செயலாளர் சட்ட நுணுக்கத்தோடு அங்கு பதிலிறுத்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் எனது விண்ணப்பத்தை நிராகரித்து அனுப்பிய கடிதத்தில், அவ்வறிக்கையைத் தங்களால் தேடி எடுக்க முடியவில்லை என்றுதான் கையை விரித்திருந்தார். பின்னர் தகவலறியும் ஆணைக்குழுவுக்கு நான் நேரடியாக மேன்முறையீடு செய்தேன்.

மேன் முறையீட்டையொட்டி ஜனாதிபதி செயலகத்திடம் ஆணைக்குழு எழுத்து மூலம் விளக்கம் கேட்டது. ஆணைக்குழுவுக்கு விலாசமிட்டும் எனக்குப் பிரதியிட்டும் செயலகம் அனுப்பிய பதில் கடிதத்தில், தேசிய சுவடிக்கூடத் திணைக்களம் தங்களுக்கு அனுப்பிய ‘கோவையில்’ அறிக்கை காணப்படவில்லை. ஆதலால் அறிக்கையை வழங்க முடியாதிருக்கிறது என்று கூறி, வெற்றுக் கோவை விளையாட்டை ஆடியிருந்தது.

ஜனாதிபதி செயலகமும், தேசிய சுவடிக்கூடத் திணைக்களமும் இணைந்து அஷ்ரஃபின் மரணத்துக்கான காரணத்தை பகிரங்கப்படுத்துவதைத் தடுப்பதற்காக, ஒழித்து விளையாடுவதை அனுமானிப்பது அவ்வளவு கடினமாக இருக்கவில்லை.

தேசிய சுவடிக்கூடத் திணைக்களம் குறைந்தது 30 வருடங்களுக்குக் கட்டாயமாக ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்று, சட்டம் மிகத் தெளிவாகக் கூறுகிறது.

2007 இல் அறிக்கைக் கோவை சுவடிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் ஒத்துக்கொள்கிறது. ஆக, அந்த அறிக்கையை சுவடிக் கூடம் பெற்று பத்து வருடங்கள்தான் கடந்திருக்கிறது. சட்டப்படி இன்னும் 20 வருடங்களுக்காயினும் திணைக்களம் இவ்வறிக்கையைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும் என்பது கட்டாயமாகும்.

சட்ட நுணுக்கத்தைப் பாவித்து எங்கள் தலைவனின் மரணத்துக்கான காரணத்தை மண் போட்டு மூடுவதற்கு நினைத்தால், அதே சட்டத்தால் ‘கிண்டி’ வெளியில் எடுத்து குற்றவாளிகளின் தோள்களில் போட்டு, அவர்களை வெய்யிலில் நிற்க வைத்து உலர வைப்போம்” என்றார்.

அடுத்த விசாரணையை நவம்பர் மாதம் 20 ஆம் திகதி மீண்டும் நடத்துவது என்றும், அன்றைய தினம் தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியை விசாரணைக்கு அழைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இது அவுஸ்திரேலிய மேற்றர்!

பிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவில் 780 மில்லியன் ரூபா பெறுமதியாக சொத்துக்களை மனைவியின் பெயரிலும், தனது பெயரிலும் கொள்வனவு செய்துள்ளார் என்றும், இதற்கான பணம் எங்கிருந்து கிடைத்தது என்றும் கேள்வி எழுப்பியுள்ளார் சட்டத்தரணி நாமல் ராஜபக்ச (மகிந்த ராஜபக்சவின் மகன் அல்ல). கம்மன்பில அதிக பெறுமதியில் சொத்து சேர்த்தமைக்கான தரவுகளுடன் பொலிஸ் விசேட விசாரணைப்பிரிவில் கடந்த மாத இறுதியில் முறைப்பாடு செய்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள், சமன் அன்ட் அபாய பிரைவேற் கொம்பனி என்ற நிறுவனத்தின் பெயரில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார். அவுஸ்திரேலியாவில் வசிக்கும் வைத்தியர்களான இரண்டு நண்பர்களுடன் இணைந்து இந்த நிறுவனத்தை பதிவுசெய்துள்ளாராம். இதில் ஒரு வைத்தியரின் அவுஸ்திரேலிய வீட்டிலேயே கம்மன்பிலவின் மனைவி தினேஷா தற்போது குடியிருக்கிறார் என்றும், கம்மன்பில, மனைவி, இரண்டு பிள்ளைகளும் அவுஸ்திரேலிய குடியுரிமையை கொண்டவர்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சொத்துக்களை மோசடியாக விற்றமை தொடர்பான குற்றச்சாட்டுக்களும், விசாரணைகளும் கம்மன்பில மீது உள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

2014 இல் அப்போதைய அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியை பயன்படுத்தி ஊழல் செய்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. கம்மன்பிலவின் நண்பியான சிட்னி ஜெயசிங்கவுடன் இணைந்து இரண்டு சூரியசக்தி மின்சார திட்டங்களிற்கு அனுமதி பெற்றுள்ளார். எனினும், திட்டமதிப்பீட்டில் இரண்டும் தோல்வியடைந்த திட்டங்களாக அறிக்கையிடப்பட்டுள்ளன.

பின்னர் இந்த திட்டங்கள் 7 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இங்கிலாந்து நிறுவனம் ஒன்றிற்கு விற்கப்பட்டதாகவும் நாமல் குற்றம்சுமத்தியுள்ளார்.

இவ்வளவு பெருந்தொகை பணத்தை கம்மன்பில எப்படி பெற்றார் என்பது குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார். எனினும், தன் மீதான குற்றச்சாட்டுக்களை கம்மன்பில மறுத்துள்ளார். நாமல் மீது மானநஷ்ட வழக்கு தொடுக்கப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

## சிங்கார சென்னைக்கு இராத்திரியில் போகும் எம்.பி

ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட ஒருநாளில் மட்டும் இந்தியாவிற்கு சென்றுவரும் எம்.பி ஒருவர் குறித்து இராஜதந்திரரீதியில் விசாரணை செய்யப்பட்டு வருவதாக செய்தி வெளியாகியுள்ளது.

தனது இராஜதந்திர கடவுச்சீட்டை பயன்படுத்தி கடந்த சில வருடங்களாகவே மாதாந்தம் சென்னைக்கு இவர் சென்று வருகிறார். சென்னையில் சில மணிநேரம் மட்டுமே தங்கியிருந்து விட்டு உடனே இலங்கைக்கு திரும்பி வருகிறார்.

இரவுநேரத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக சென்னைக்கு செல்கிறார். மறுநாள் பகல் சென்னையிலிருந்து புறப்படும் விமானத்தின் ஊடாக இலங்கைக்கு வந்து சேர்ந்து விடுகிறார். என்ன நோக்கத்திற்காக இரவுவேளையில் சிலமணி நேர சென்னை பயணம் செய்கிறார் என்ற குழப்பம் அதிகாரிகளிற்கு ஏற்பட்டுள்ளது.

இவரது இரவுநேர பயணங்கள் குறித்து இந்திய இராஜதந்திர பிரிவுகள் அறிந்து வைத்திருக்கின்றனரா என்பதும் தெரியவில்லை. இந்த விவகாரம் பாதுகாப்பு, இராஜதந்திர சிக்கல்களை ஏற்படுத்தலாம் என்பதால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த பயணங்கள் தனிப்பட்ட பயணங்களாக இருக்கலாமென்ற போதும், இதுகுறித்து உத்தியோகபூர்வமாக பயணம் செய்யும் நாட்டிற்கு அறிவிக்கப்பட வேண்டுமென்ற போதும், இந்த விவகாரத்தில் தகவல் வழங்கப்படவில்லையென கூறப்படுகிறது.

அனேகமான சமயங்களில் இந்த பாராளுமன்ற உறுப்பினர் தனித்தே பயணம் செய்கிறார். மிகச்சில சந்தர்ப்பங்களில் மட்டுமே இன்னொருவர் கூட பயணம் செய்கிறார்.மலையக்கத்தை சேர்ந்த இவர், கடந்த ஆட்சிக்காலத்தில் அமைச்சராக இருந்தவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மகனதிகாரம்!

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அத்தனகல்ல தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளது சுதந்திரக்கட்சிக்குள் கடுமையான விவாதத்தை கிளப்பியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியொருவர் தொகுதி அமைப்பாளராக அரசியலுக்கு திரும்பி வந்தது கிடையாதென்பதால், இந்த நியமனத்தை கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் சிலர் விரும்பவில்லையென தெரிகிறது. புதியவர்களிற்கு வாய்ப்பளிக்க சந்திரிகா ஒதுங்கிக் கொள்ளலாமென அவர்கள் ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் கேட்டுக் கொண்டுள்ளனர். எனினும், அவர்களின் கோரிக்கையை மைத்திரி சிரித்தபடி கடந்து சென்றுள்ளார்.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், அரசியலில் நீடித்ததை சந்திரிகா கடுமையாக விமர்சனம் செய்ததையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மகிந்த ராஜபக்ச அரசியலில் நீடிப்பதற்கு என்ன காரணமோ, அதே காரணத்திற்காகவே சந்திரிகா தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். சந்திரிகாவின் மகன் விமுக்தி குமாரதுங்க விரைவில் அரசியலில் குதிக்கவுள்ளார். உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அவர் களமிறங்குவதற்கு வாய்ப்பாக, சந்திரிகாவிடம் தொகுதி அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

விமுக்தி இங்கிலாந்தில் இருந்து குடிபெயர்ந்து இலங்கைக்கு வருவதற்கு தயாராகி கொண்டிருப்பது தீவிர அரசியலில் விமுக்தி குதிப்பதை உறுதி செய்யும் விதமாக உள்ளது.

## நீதிமன்றம் போகிறார்!

தன்னைக் கைதுசெய்வதைத் தடுப்பதற்காக தடை உத்தரவு கோரி உயர் நீதிமன்றத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ச மனுவொன்றைத் தாக்கல் செய்ய தயாராகி வருகிறார்.



வெலிகடை சிறைச்சாலையில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூடு, கொலைச் சம்பவங்கள் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளமையே கோதாபய ராஜபக்ச இந்த மனுவைத் தாக்கல் செய்ய காரணம் எனத் தெரியவருகிறது.

தன்னைக் கைதுசெய்வதைத் தடுப்பதற்காக கோபதாய கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருவதாக அறிய முடிகிறது. சமகாலத்தில் தனக்குத் தெரிந்த உயர் பொலிஸ் அதிகாரிகளைத் தொடர்புகொண்டு இதுபற்றி கோதாபய உரையாடுவதாக தெரியவருகிறது.

2012ஆம் ஆண்டு நம்வபர் மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் வெலிக்கடை சிறைச்சாலையில் 27 கைதிகள் கொலை செய்யப்பட்டனர்.இதுகுறித்து பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வுப் பிரிவு இயக்குனர் என பல தரப்பு விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்படுகிறன.

இந்த விசாரணைகளினால் அச்சமடைந்துள்ள கோதாபய ராஜபக்ச, தன்னைக் கைதுசெய்வதைத் தடுப்பதற்காக நீதிமன்ற உதவியை நாட தயாராகி வருவதாக தகவல் கிடைத்துள்ளது.


விழ்த்தப்பட்ட புலிகளின் விமானம்

# நடுவானில் வான்புலிகளிற்கு வைக்கப்பட்ட பொறி

## புலிகளின் வான்படையின் எழுச்சியும் வீழ்ச்சியும் 1

ஹிருத்திக் போஸ் நிஹாலே

**2007**ம் ஆண்டு மார்ச் 25ம் திகதி அதிகாலை.

கட்டுநாயக்கா விமானப்படை தளத்தின் மீது விடுதலைப்புலிகளின் முதலாவது விமானத்தாக்குதல் நடந்தது. புலிகளின் இரண்டு சிறிய விமானங்கள் கட்டுநாயக்க விமானப்படை முகாம் வான்பகுதிக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தன.

அப்பொழுது இலங்கை வான்படையின் பயன்பாட்டில் இருந்தது இந்திய ராடர்கள். புலிகளின் விமானங்கள் வந்த விவகாரம் இந்திய ராடர்களிற்கு தெரிந்திருக்கவேயில்லை.

புலிகளின் விமானங்கள் குண்டுவீசிய தையடுத்து, இருண்ட வானத்தை நோக்கி விமானப்படையினர் துப்பாக்கிகளால் சுட்டார்கள். சாதாரண துப்பாக்கிகள், கலிபர்கள் கொண்டு தாக்குதல் நடத்தி னார்கள். இரவு நேரமாகையால் விமானத்தை அடையாளம் கண்டு தாக்குதல் நடத்த முடியவில்லை.

வான்புலிகளிற்கும் குண்டுவீசுவதல் சிக்கல்கள் இருந்தன. அவர்களிற்கு இது முதலாவது தாக்குதல். வன்னியிலிருந்து நீண்டதூரம் பயணித்து வந்து தாக்கும் பதட்டம், இலக்கை துல்லியமாக அடையாளம் காணும் தொழில்நுட்ப வசதிகள் இல்லாமை போன்ற காரணங் களால் அவர்களிற்கும் விமானங்கள் தரித்து நிற்கும் பகுதியை (ஹங்கர்கள்) அடையாளம் காண்பதில் சிக்கலிருந்தது.

வான்புலிகளின் அந்த இரண்டு விமானங்களையும் ஓட்டியவர்கள் கரன், சிரித்திரன். இவர்கள் இருவரும் கடைசியாக கொழும்பில் தாக்குதல் நடத்த முயன்றபோது, 2009 இல் உயிரிழந்திருந்தனர். அதுதான் புலிகளின் கடைசி வான் தாக்குதல்.

விடுதலைப்புலிகள் ஒரு விமானம் வீசிய இரண்டு குண்டுகள் விமானப்படை பொறியியல்பீடத்தின் கட்டிடத்தின் மீது விழுந்தது. மற்றைய விமானம் வீசிய இரண்டு குண்டுகளும் ஹெலிகொப்டர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹங்கரின் மீது விழுந்தது. இதில் 3 விமானப்படையினர் கொல்லப்பட்டனர். சிலர் காயமடைந்தனர். விமானத்தளத்தின் கட்டிடங்களிற்கு சேதம் ஏற்பட்டதே தவிர, விமானங்களிற்கோ, ஹெலிகொப்டர்களிற்கோ சேதம் ஏற்பட வில்லை.

இந்த தாக்குதலின் பின் புலிகளின் இரண்டு விமானங்களும் பத்திரமாக வன்னியில் வந்து தரையிறங்கி விட்டன. புலிகளின் விமானம் பாதி தூரம் வந்ததன் பின்னர்தான் இலங்கை விமானப்படை மிகையொலி விமானங்களான கிபிர் விமானங்கள் விரட்ட தொடங்கின. ஆனால் புலிகளின் விமானங்கள் பத்திர மாக புதுக்குடியிருப்பில் தரையிறங்கி விட்டன.

புலிகளின் விமானங்கள் எந்த ரகம் என்று இலங்கை விமானப்படையினரால் அடையாளம் காண முடியவில்லை.

மறுநாள் புலிகள் ஒரு புகைப்படத்தை வெளியிட்டனர். அப்பொழுதுதான் புலிகளிடம் என்ன விமானம் இருக்கிற தென்பது உலகத்திற்கு தெரிய வந்தது. தாக்குதலிற்கு உபயோகித்த விமானத்தின் படத்தையே வெளியிட்டு கெத்து காட்டியிருந்தனர் புலிகள்.

புலிகள் காண்பித்த விமான ரகங்கள் குண்டுவீச்சிற்குரியவை அல்ல. அவற்றை தயாரிக்கும் நிறுவனங்களால் ணிஙிஸி (Electrical Bomb Release) வசதி அமைக்கப்படுவதில்லை. புலிகள் பின்னர் விமானங்களில் ணிஙிஸி சிஸ்டத்தை அமைத்து, குண்டு வீச்சு விமானங்களாக மாற்றியிருந்தனர்.

புலிகளின் வான்படை பற்றிய ஆராய்ச் சியில் மொத்த உலகமும் இறங்கியிருக்க, வான்படையினர் வேறு ஒரு ஆய்வில் இறங்கினர். புலிகளின் விமானங்கள் எந்த வழியால் கொழும்புக்கு வந்தன என்பதை கண்டறிய வேண்டும். அந்த பாதையை அறிந்தால் போதும். மீண்டும் வரும்போது இலகுவாக குறிவைக்கலாம். எதிர்பாராத விதமாக திடீரென வந்துவிட்டாலும், திரும்பி போகும்போது தாக்கலலாம்.


புலிகளின் சிறிய, வேகம் குறைந்த விமானங்கள் இலங்கையின் நவீன தொழில்நுட்பத்திற்கு ஈடுகொடுக்க முடியாதவை. இது புலிகளிற்கும் தெரியும். நன்றாக கவனித்தவர்களிற்கு புரியும், ஒருமுறை தாக்குதல் நடத்திய இடத்தில் புலிகள் இரண்டாவது முறை தாக்குதல் நடத்தியதில்லை. புதிய புதிய இலக்குகளைதான் தாக்கினார்கள். ஒருமுறை கொழும்பை தாக்கினால் அடுத்தமுறை அதற்கு நேர் எதிர்திசையில் பலாலியில் தாக்குதல் நடத்தினார்கள். அடுத்தமுறை திருகோணமலையில் தாக்குதல் நடத்தினார்கள். இப்படியே போக்குகாட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், யுத்தத்தின் இறுதி சமயத்தில் மீண்டும் கொழும்பிற்கு வந்தார்கள். அதாவது முதல் தாக்குதல் நடத்திய இடத்திற்கு. தம்மிடமிருந்த விமானங்களை வைத்து ஏதாவது அழிவை ஏற்படுத்த வேண்டுமென திட்டமிட்டதால் இந்த தாக்குதல் முயற்சியை மேற்கொண்டார்கள். இந்த சமயத்தில்தான் இரண்டு விமானங்களும் வீழ்த்தப்பட்டன.

அதாவது புலிகளிற்காக காத்திருந்த அரசின் பொறிக்குள் இரண்டு

தொடர்ச்சி 23-ம் பக்கம்...


குண்டு பொருத்தப்பட்ட புலிகளின் விமானம்



## கருடன் பக்கம்

# சிவாஜிலிங்கத்தில் சந்தேகம்... மாடியிலிருந்து இறங்கி வராத முதலமைச்சர்!


கருடன்

குறிப்பிட்ட நேரத்திற்கு வருவதாக சொன்ன கருடர் வரவில்லை. வட்ஸ்அப்பில் ஒரு மெசேஜ் தட்டிவிட்டிருந்தார் "ontheway". சொன்ன நேரத்திற்கு எப்போதுதான் வந்திருக்கிறார் என அலுத்துக்கொண்டு கொஞ்சம் கண்ணை மூட, எங்கிருந்தோ சீறிக்கொண்டு வந்து முன்னால் உட்கார்ந்தார் கருடர்.

"கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் மாறிமாறி பறந்து திரிந்ததில கொஞ்சம் லேற் ஆகிவிட்டது. அரசியல் என்றால் இதெல்லாம் சகஜம்தானே" என்றார் சிரித்தபடி.

"ஒருநாள் கொழும்பிற்கு பறந்து விட்டு இவ்வளவு பில்டப் கொடுக்கிறீர்கள். ஜனாதிபதி கடந்த வாரம் யாழ்ப்பாணம், கிளிநொச்சியென சூறாவளியாக பறந்து விட்டு போயிருக்கிறார்" என்றோம்.

"ஜனாதிபதி சூறாவளியாகவந்துபோனது இருக்கட்டும். ஜனாதிபதியின் பயணம் கிளப்பிய சூறாவளியில் இங்கே பலர் கிடுகிடுத்துப் போய்விட்டார்கள்" என்றார்.


யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்மொழி தின விழாவில் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன், சிவாஜிலிங்கம், கணேஸ் வேலாயுதம்

"யார் கிடுகிடுத்தார்கள்... கொஞ்சம் விபரமாக சொல்லுங்கள்"

"14ம் திகதி ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்தார். ஜனாதிபதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு வருவதற்கு முன்னர் வரை, போராட்டம் பற்றிய பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. ஜனாதிபதியை துணிந்து எதிர்க்கிறார்கள், அரசாங்கத்துடன் இருக்கும் தமிழ்தேசிய கூட்டமைப்பினரை தவிர்த்துதான் இனி தமிழர்களின் எதிர்ப்பரசியல் இயங்கும் என்ற அபிப்பிராயத்தை இந்த போராட்டம் வலுவாக்கிக் கொண்டிருந்தது. ஆனால், மைத்திரி அதை சுலபமாக தகர்த்து விட்டார்"

"எப்படி"

"தனக்கு கறுப்புகொடி காண்பிப்பவர்களிற்கு இருட்டடி கொடுப்பவர்கள்தான் இதுவரை ஜனாதிபதியாக இருந்தவர்கள். மைத்திரி இறங்கி வந்து, உங்கள் பிரச்சனை என்னவென கேட்டு, வாருங்கள் இதைப் பற்றி கலந்துரையாடலாம் என்று சொல்லியுள்ளார். போராட்டம் நடந்த இடத்தில் ஜனாதிபதி இறங்கி வந்து பேசியது, பேசிய முறை எல்லாம் மக்களிடம் நன்றாக எடுபட்டுள்ளது. அதாவது தனக்கு பாதகமான இடத்திலும் ஸ்கோர் செய்துவிட்டார்.

ஜனாதிபதி பேசியது போராட்டத்தில் முன்னின்ற தலைவர்களுடன். அரசியல் கைதிகளின் பெற்றோர்களை சந்தித்திருந்தால், அந்த இடத்தில் உணர்வுபூர்வமான நிலையேற்பட்டிருக்கும். ஜனாதிபதியால் சுலபமாக பொறுப்பிலிருந்து விடுபட்டிருக்க முடியாது. தலைவர்களே பேசியதால் மைத்திரி தப்பித்தார், அவரது அணுகுமுறையும் வரவேற்பை பெற்றது. மைத்திரி சந்தித்த பின்னர் போராட்டத்தை எப்படி நடத்துவதென தெரியாமல் ஏற்பாட்டாளர்களும் திண்டாடினர். மொத்தத்தில் மைத்திரியின் வியூகங்களை எதிர்கொள்ளக்கூடிய வலுவான கூட்டணியல்ல இது".

"இது எப்படி வலுவில்லாத கூட்டணி என்கிறீர்கள்" என்றோம்.

"12ம் திகதி ஆளுனர் அலுவலகத்தின் முன்னால்ஒருபோராட்டம்நடத்தினார்கள். பத்தொன்பது சிவில் அமைப்புக்களின் பெயரில் அந்த போராட்டம் நடந்தது. திடீரென போராட்ட ஏற்பாட்டில் சம்பந்தமில்லாத வடமாகாணசபை உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், கஜதீபன் குழுவினர் ஆளுனருடன் பேச சென்றார்கள். இந்த போராட்டத்திற்கான ஏற்பாட்டு கூட்டங்களிலும் இவர்கள் கலந்துகொள்ளவில்லை.ஏற்பாட்டு குழுவில் இல்லாதவர்கள், போராட்ட களத்தில் உள்ளவர்களின் சம்மதத்துடன் செல்லாதவர்கள் எப்படி பேச செல்லலாமென்ற குழப்பம் அங்குஏற்பட்டது.போராட்டத்தை குழப்ப ஆளுனருடன் முன்னரே பேசி திட்டமிட்டு சிவாஜிலிங்கம் அணி இப்படி செய்ததென்றுதான் ஏற்பாட்டாளர்கள் குற்றச்சாட்டுகிறார்கள்".

"அப்ப உள்ளுக்குள்ளேயே குத்து வெட்டா"

"பிறகு ஆளுனர் தொலைபேசியில் சிவாஜிலிங்கத்தை தொடர்பு கொண்டு, ஜனாதிபதியை சந்தித்து உங்கள் கோரிக்கையை தெரிவிக்கிறீர்களா என கேட்டுள்ளார்.அதாவதுயாழ்ப்பாணத்திற்கு மைத்திரி வரும்போது நடக்கும் எதிர்ப்பு போராட்டத்தில் ஜனாதிபதியுடன் பேச ஜனாதிபதி வருகிறார், வந்து கதையுங்கள் என சிவாஜிலிங்கத்தை கூப்பிட்டார். காவல்த்துறை உயரதிகாரியொருவர் கஜேந்திரகுமாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ஜனாதிபதியை சந்தித்து உங்கள் பிரச்சனையை பேசுங்கள் என கேட்டார். ஆனால் கஜேந்திரகுமார் மறுத்துவிட்டார்".

"அப்ப இனி இந்தக்கூட்டணிக்குள் சிவாஜிலிங்கத்தின் பங்கு என்னவாக இருக்கும்?"

"பங்கு எப்படியிருக்குமென தெரியவில்லை. ஆனால் பரஸ்பரம் அதிருப்தியை கொண்டவர்கள்தான் இந்த கூட்டில் இருக்கிறார்கள். ஆளுனருடன் பேசி, சிறைக்கைதிகளின் உறவினர்களையும் ஆளுனருடன் சந்திக்க வைத்து, ஜனாதிபதியையும் சந்திக்க வைக்க சிவாஜிலிங்கம் முயற்சிக்கிறார். ஒரு கூட்டணியாக போராட்டத்தை செய்ய, சிவாஜிலிங்கம் தன்இஸ்டப்படி நடந்து, பெயர் புகழை சம்பாதிக்க முயற்சிக்கிறார் என கூட்டில் உள்ளவர்கள் நினைக்கிறார்கள். ஜனாதிபதிக்கு எதிராக கறுப்புகொடி காட்டிய பின்னர், போராட்டத்தில் ஒருவர் செற் பண்ணப்பட்டதாகவும் இருக்கலாம்"

"கறுப்பு கொடி காட்டிய இடத்தில் ஜனாதிபதியுடன் சிவாஜிலிங்கம் பேசியதும் ஏற்பாட்டாளர்களின் சார்பில் இல்லையா?"

"இந்த போராட்டத்தின் ஏற்பாட்டாளராக சிவாஜிலிங்கம் இருக்கவில்லை. ஜனாதிபதி போராட்டக்காரர்களை நோக்கி வந்தபோது, உயர்காவல்த்துறை அதிகாரியொருவர் முன்னால் ஓடிவந்து, விவகாரம் திடீரென பூதாகரமானது. ஜனாதிபதி கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளை புறக்கணிக்க வேண்டிய நெருக்கடி தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு ஏற்பட்டது".

"புறக்கணிக்க வேண்டிய நெருக்கடியா? இதென்ன புதுக்கதை கருடரே"

(சிரிக்கிறார்) "ஜனாதிபதியுடன் மேடையேற அவர்களிற்கும் விருப்பம்தான். அரசியல்கைதிகளிற்காக உள்ளூரில் போராட்டங்கள் நடக்கும்போது அவர்களால் மேடையேற முடியாது. கறுப்பு கொடி காட்டப்படும் நிகழ்வில் கலந்து கொள்வதால் என்ன நடக்குமென்பது அவர்களிற்கு தெரியும். இந்த போராட்டங்களும் அவர்களால் ஏற்பாடு செய்யப்படாதவை. அவர்களிற்கும் கொஞ்சம் அசௌகரியம் கொடுக்க கூடியவை. அரசியல்கைதிகளிற்கு ஆதரவாக 12ம் திகதி ஆளுனர் அலுவலகத்திற்கு முன்னால் நடந்த போராட்டத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் சார்பில் சித்தார்த்தன் எம்.பி மட்டும்தான் வந்திருந்தார். ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்த போராட்டம் நடந்த 14ம் திகதி கூட்டமைப்பின் எந்த

ஈடுபட்டவர்கள் ஒன்றாக சந்தித்தனர். அதில் சிவாஜிலிங்கத்தை கடுமையாக விமர்சித்தனர். மொத்தத்தில் எப்படி முடியும், என்ன செய்யுமென்றே ஊகிக்க முடியாத கூட்டு"

"அதுசரி... ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்தை தமிழ்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் மொத்தமாக பகிஸ்கரிக்க, கூட்டமைப்பில் உள்ள வடக்கு விவசாய அமைச்சர் கலந்து கொண்டிருக்கிறாரே" என பேச்சை வேறு திசைக்கு மாற்றினோம்.

"அதுவும் ஒரு பெரிய கதை" என பீடிகை போட்டபடி ஆரம்பித்தார் கருடர்.

"சிவநேசன் வடக்கு விவசாய அமைச்சராக பதவியேற்ற சிறிதுநாளில் ஜனாதிபதி தலைமையில் நடந்த விவசாய உற்பத்தி மேம்பாடு பற்றிய கூட்டத்தில் கலந்து கொண்டார். அப்போதே யாழ்ப்பாண விவசாய நிகழ்ச்சி திட்டம் தீட்டப்பட்டு ஜனாதிபதி, மத்தியமாகாண விவசாய அமைச்சர்கள் கலந்து கொள்வதென முடிவும் எடுக்கப்பட்டிருந்தது.

இந்த சமயத்தில்தான் அரசியல் கைதிகள்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

எம்.பியும் வீட்டு வாசலை கடக்கவில்லை.

விவசாய அமைச்சர் சிவநேசனுக்கு இது சங்கடமான சூழல். மத்திய அரசை பகைக்காமல் வேலை செய்ய வேண்டுமென நினைக்கிற ஆள் அவர். அதனால்தான் திருநெல்வேலி அம்மாச்சி உணவகம் இன்னும் பெயர் வைக்கப்படாமல் இருக்கிறது.

13ம் திகதி ஜனாதிபதி கலந்து கொள்ளும் நிகழ்வில் கறுப்புகொடிகாட்டப்படும் எனற செய்தி வெளியானதையடுத்து, நிகழ்விற்கு செல்வதில்லையென கூட்டமைப்பினர் முடிவெடுத்தனர். புத்தூர் நிகழ்வில் கலந்து கொள்வதா விடுவதா என்ற குழப்பம் சிவநேசனிற்கு. அன்று மாலை முதலமைச்சரிடம் சென்றார். கோவில் வீதியிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்திற்குள் சிவநேசனை சந்தித்து பேசியது, முதலமைச்சரின் செயலாளர். மறுநாள் காலையில் நடக்கும் ஜனாதிபதியின் நிகழ்வை புறக்கணிப்பதா இல்லையா என்ற முக்கிய அரசியல் முடிவை எடுக்க வேண்டியிருந்ததால், முதலமைச்சரை சந்திக்க வேண்டுமென அமைச்சர் கேட்டிருக்கிறார். முதலமைச்சர் மாடியில் ஓய்வில் இருக்கிறார், அவரை யாரும் குழப்பக்கூடாதென செயலாளர் மறுத்துவிட்டார்.

அமைச்சரை கீழ் தளத்தில் உட்கார வைத்துவிட்டு, மேல்மாடிக்கு சென்று வந்த செயலாளர், “நாளைய நிகழ்விற்கு உங்களை போகட்டாம்” என கூறி அனுப்பியுள்ளார். மறுநாள் புத்தூரில் ஜனாதிபதியை வரவேற்றார் விவசாய அமைச்சர் சிவநேசன்“

“ஏன் முதலமைச்சர் இப்படி நடக்கிறார்... அவரது உடம்பிற்கு முடியாமல் உள்ளதா?”

“முதலமைச்சரிற்கு உடம்பிற்கு முடியாமல் உள்ளதோ இல்லையோ, அரசியலில் பலவற்றை கற்க முடியாமல் சிரமப்படுகிறார். எனக்கும் நேரமாகி விட்டது. கூட்டமைப்பினரால் முடியாமலுள்ள இன்னொருவிடயத்தையும் சொல்லிவிட்டு புறப்பட போகிறேன்”

“சொல்லுங்கள்”

“மட்டக்களப்பு அரசாங்க அதிபர் நியமனத்திலும் கூட்டமைப்பினரால் எதுவும் முடியவில்லை” “புதிய அரசாங்க அதிபர் நியமனம் தொடர்பாக எதிர்கட்சி தலைவர் சம்பந்தன், பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சர் விஜிர அபேகுணவர்த்தனவை சந்தித்து பேசியதாக சொன்னார்களே. புதிய அரசஅதிபர் கூட்டமைப்பின் சிபாரிசு என்றார்களே”

“ம்.. சந்தித்து பேசினார்தான். அந்த சந்திப்பை விட பலமான முயற்சிகள் திரைமறைவில் நடக்கின்றன. அதை யெல்லாம் சொன்னால் தலைசுற்றும். மேலோட்டமாக சொல்கிறேன். முன்னைய அரசஅதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அதிகரித்ததையடுத்து, அவர் பாதுகாப்பாக இடமாற்றம் செய்யப்பட்டார். அவரது இடமாற்றத்திற்கு மூன்று மாதங்கள் முன்னர் மட்டக்களப்பு தமிழ்தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் எஸ்.வியாழேந்திரன், எஸ்.யோகேஸ்வரன், சிறிநேசன் மூவரும் புதிய அரசஅதிபர் பற்றிய சிபாரிசை பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரிடம் எழுத்துமூலம் தெரிவித்தனர். அதில் மாவட்டத்தின் மூத்த அதிகாரி பாஸ்கரனின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. சி.பாஸ்கரன் ஊழல் மோசடிகளிற்கு துணைபோகாத நேர்மையான அதிகாரியென பெயரெடுத்திருந்தவர்.

பின்னர் கூட்டமைப்பின் தலைவருக்கும் மூன்று எம்.பிக்களும் கடிதம் எழுதினர். அதில் சி.பாஸ்கரன்,க.மகேசன், மா.உதய குமார் ஆகிய மூன்று பெயர்களை சிபாரிசு செய்திருந்தனர். பின்னர் மீண்டும் வஜிர அபேகுணர்த்தனவிற்கு எழுதிய கடிதத்தில் பாஸ்கரனை சிபாரிசு செய்திருந்தனர்.

பாஸ்கரன் 2013இல் மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டவர். முன்னைய அரசஅதிபரின் நடவடிக்கைகளால் முரண்பட்டுக் கொண்டு வெளியேறியவர். இப்போது சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற, இந்துமத அமைச்சின் மேலதிக செயலாளராக பதவி வகிக்கிறார். அடுத்தவர் மகேசன். பிரதமரின் கீழுள்ள கொள்கைதிட்டமிடல் அமைச்சின் மேலதிக செயலாளராக பதவிவகிக்கிறார். மூன்றாமவர் உதயகுமார். மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளராக பதவியில் உள்ளார். உதயகுமார் முன்னாள் அரசஅதிபர் சார்ள்ஸிற்கு நெருக்கமானவர் என்ற அபிப்பிராயம் உள்ளது. இப்படியான அபிப்பிராயம் மாவட்டத்திலுள்ள அரசஅதிகாரிகளிடமும் பரவலாக உள்ளது. பாஸ்கரன் அரசஅதிபராக நியமிக்கப்பட்டால், முன்னைய காலத்தில் மாவட்ட நிர்வாகத்தில் ஏதேனும் தில்லுமுல்லு நடந்திருந்தால் அதை நேர்மையாக விசாரிக்க பொருத்தமானவர் என்றும் பரவலாக அபிப்பிராயம் உள்ளது.

ஆனால் உதயகுமாரிற்கு சாதகமான சூழல்தான் உள்ளது. இதுதான் ஆச்சரியமாக உள்ளது. இவரை விட பாஸ்கரன் ஐந்து வருட சேவை மூப்புடையவர். பாஸ்கரன் தொடர்பாக அரசஅலுவலர்கள் மத்தியிலும் நல்ல பெயருள்ளது. ஆனால் பாராளுமன்றத்தில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரை இரா.சம்பந்தன் சந்தித்து பேசியபோது, பாஸ்கரனை மட்டக்களப்பு அரசஅதிபராக நியமிக்க முடியாதென செயலாளர் கூறிவிட்டார். சேவைமூப்பின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் என முதலில் செயலாளர் கூறியிருக்கிறார். அப்படியானால் பாஸ்கரன்தானே நியமிக்கப்பட வேண்டுமென கூட்டமைப்பினர் கேட்க, இந்த பட்டியலில் இல்லாத ஒருவரின் பெயரை செயலாளர் கூறினார். அரசஅதிபர் பதவிக்கு இவர்கள் மூவரும்தானே விருப்பம் தெரிவித்தார்கள், இதில் சேவைமூப்பின் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட வேண்டுமென கூட்டமைப்பினர் வலியுறுத்த, அவர் மதுப்பாவனை உள்ளவர் என செயலாளர் சொன்னாராம்.

இப்பொழுது மட்டக்களப்பு அரசஅதிபர் நியமனத்தை வைத்து பனிப்போர் ஒன்று நடக்கிறது. கடந்தகால குற்றச்சாட்டுக்கள் கிளறப்படகூடிய ஒருவர் வர வேண்டுமா, வரக்கூடாதா என்பதுதான் பிரச்சனை.”

“அரச அதிபர் நியமனத்தில் இவ்வளவு பிடுங்குப்பாடா?”

“மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தக் காரர்கள், மணல் விநியோகத்தர்கள் பலர் நேர்மையான அதிகாரியொருவர் வருவதை விரும்பவில்லை. தமக்கு தோதான ஒருவரை நியமிக்க அரசஉயர்பீடத்திற்கு தாராளமாக வாரி இறைப்பதாகவும் ஒரு தகவலுண்டு”


“கேட்க நமக்கே கண்ணை கட்டுது... தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்த்தும் மட்டக்களப்பில் ஒரு நியமனம் நடக்கிறதா?”

“தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு விருப்பமில்லாத நியமனம் என சொல்ல முடியாது. ஆனால் யார் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பதுதான் பிரச்சனை”

“புரியும்படி சொல்லுங்கள் கருடரே”

“அரசஅதிபர் பிரச்சனை வந்து, மாவட்டத்தில் உள்ள கூட்டமைப்பின் மூன்று எம்.பிக்களும் சம்பந்தருடன் இணைந்து பாஸ்கரனின் நியமனத்திற்கு முயன்று கொண்டிருக்க, மறுஅணியினர் கூட்டமைப்பில் பிடிக்க வேண்டியவரை பிடித்துள்ளனர். கூட்டமைப்பின் பலமான குரலொன்று உதயகுமாரை சிபாரிசு செய்துள்ளது. இதில் எது கூட்டமைப்பு என்பதை அரசாங்கம் தீர்மானித்து விட்டது.

அரசஅதிகாரிகள் அரசியல்வாதிகளை போல செயற்பட்டு, அரசியல்வாதிகளும் அதிகாரிகளின் நியமனங்களில் தலையிட்டால், ஒன்றும் உருப்படாது” என்றபடி கருடர் பறந்து சென்றார்.


පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

PARLIAMENT

Very Urgent and Important

12.10 2017

S.Yoheswaran.M.P

Batticaloa District

S.Srineshan.M.P.

Batticaloa District

Honorable Wajira Abeywardana

Honorable Minister

Ministry of Home Affairs

Colombo.

Dear Minister

Appointment of Govt. Agent/ District Secretary Batticaloa- Mr.S.Baskaran S.L.A.S. (Special) Grade

We the under signed TNA Parliamentarians of Batticaloa District, We would like to bring together your kind Concern regarding above Subject of District Secretary / Govt. Agent appointment in Batticaloa District

In this Connection, We send several requests to appointment of G.A./District Secretary Batticaloa and Opposition Leader also accepted to Appoint Mr.S.Baskarn S.L.A.S (Special) Grade as Batticaloa District Secretary following Reasons.

01. He is the most Seniority in the S.L.A.S. (Special) Grade service than other S.L.A.S Officers in Batticaloa

02. His Past work Experience was very Good and serviced in several Divisional secretariats in Batticaloa District, Addl. District Secretary too in Batticaloa District and Several Addl. Secretaries in the Ministries in Colombo and There are no Charged on him and very dedicates officer for Good Governance Government .

03. Most of the Political Parties including Government Ruling Party and Opposition Leader Honorable R.Sampanthan also recommended and like to come as District Secretary and our Rest of the Batticaloa District TNA parliamentarian Hon.S.Viyalanderan also accept in this Appointment Matter.

பாஸ்கரனை அரசஅதிபராக்க கோரி யோகேஸ்வரன், ஸ்ரீநேசன் எம்.பிக்கள் எழுதிய கடிதம்

## பபா வந்தாலும் சபா இல்லையே!

பபா விடுதலையானாலும், சபா மீண்டும் கம்பி எண்ண சென்றது, கூட்டு எதிர்கட்சிக்குள் புகைச்சலை கிளப்பியுள்ளது. அனேக சிங்கள மக்களால் பபா (பேபி) என அழைக்கப்படுபவர் நாமல் ராஜபக்ச. ஹம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் நடத்திய குற்றச்சாட்டில் அண்மையில் கைது செய்யப்பட்டார். மொத்தம் 37 பேர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கடந்த 16ம் திகதி வழக்கு விசாரணைக்கு வந்தபோது, நாமல் ராஜபக்ச உள்ளிட்ட எட்டு பேருக்கு பிணை வழங்கப்பட்டது. ரஷ்யாவில் நடக்கும் உலக இளைஞர் மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென்றுதான் பிணை விண்ணப்பம் செய்தார். அவருக்கு உடனடியாக பிணை கிடைத்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தவர்களில் நாமல் முக்கியமானவர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களையும் தாறுமாறாக உற்சாகப்படுத்தியிருந்தார். இப்படியிருக்க, செல்வாக்கை பயன்படுத்தி அவர் மட்டும் எப்படி பிணையில் வரலாமென கூட்டு எதிர்க்கட்சிக்குள் புகைச்சல் கிளம்பியுள்ளது.

நாமல் ராஜபக்சவின் பேச்சை கேட்டு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பலர் இன்னும் களி சாப்பிட்டு கொண்டிருக்கிறார்கள்.

நாமல் தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சிலர் சாட்சியமளித்தும், அவர் விடுதலையாகி விட்டார் என முணுமுணுக்கிறார்கள். களனி பிரதேசசபையின் முன்னாள் தலைவரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணவீர ஆர்ப்பாட்டத்தில் அவ்வளவாக ஈடுபாடு காட்டாத போதும், நாமல் ராஜபக்சவினால் உற்சாகப் படுத்தப்பட்டு களமிறக்கப்பட்டவர். இவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார். இவரை சுருக்கமாக சபா என அழைப்பார்கள். ஆர்ப்பாட்டத்திற்கு பின்னணியில் இருந்தவர்களில் டளஸ் அழகப்பெருமவும் முக்கியமானவர். பிரசன்ன ரணவீர, உபாலி கொடிகார, மேஜர் அஜித் பிரசன்ன உள்ளிட்ட முக்கியஸ்தர்களை பிணையில் எடுக்க முயற்சிக்காமல், நாமலை மட்டும் பிணையில் எடுத்தது ஏன் என டளஸின் தொண்டையை பிடிக்கிறார்களாம் பலர். இந்த விவகாரம் மஹிந்தவின் காதிற்கு போக, நாமல் அரசியலில் கற்பதற்கு இன்னும் அதிகமிருக்கிறதென அதிருப்தியாளர்களை சமாளித்து வருகிறார்.

## சிவாஜியும் சுமந்திரனின் ஆளா?

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக வடக்கில் நடக்கும் போராட்டங்களின் “உரிமை” யாருக்கு சேர்வது என்பதில் பெரிய சிக்கல் எழுந்துள்ளது. இம்முறை போராட்டத்திங்கு அழைப்பு விடுத்த பத்தொன்பது அமைப்பில் பெரும்பாலானவை ஓரிரண்டு பேரை கொண்ட அமைப்புக்கள். அதனால்தானோ என்னவோ, ரெலோ அமைப்பின் சிவாஜிலிங்கம் தனித்தவில் வாசிக்க ஆரம்பிக்கிறார். ரெலோவை சேர்ந்த சிவாஜிலிங்கமும், கஜேஸ் வேலாயுதமும் அரசியல்கைதிகள் விடயத்தில் தன்னிச்சையாக நடந்து எதிர்ப்பை சம்பாதிப்பதை கட்சி தலைமையும் இரசிக்கவில்லை.

கடந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமை முதலமைச்சரிற்கும், அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராட்டத்திற்கு அழைப்பு விடுத்த அமைப்புக்களிற்குமிடையில் சந்திப்பு நடந்தது. சனிக்கிழமை சந்திப்பில் சிவாஜிலிங்கம் கலந்து கொண்டார். ஞாயிற்றுக்கிழமை அவர் அழைக்கப்படவில்லை. அரசியல் கைதிகளின் வழக்கை இடமாற்றம் செய்வதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வது பற்றி இதில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன்போது, முதலமைச்சரிடம் சிவாஜிலிங்கத்தை பற்றி கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, தமது போராட்டத்தை செயலிழக்க செய்கிறார் என கலந்துகொண்ட அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். தாறுமாறான குற்றச்சாட்டுகளின் பின் முதலமைச்சர் சிரித்தபடி கேட்டார் “சிவாஜிலிங்கம் சுமந்திரனோட சேர்ந்து வேலை செய்யிறாரோ?” என.

# என்ன செய்தார்கள் நமது பிரதிநிதிகள்?

## வடமாகாணசபை உறுப்பினர்களின் ஸ்கான் ரிப்போர்ட் - 11

தீபம் குழு

வடமாகாணசபை அமர்வுகளை கவனித்து வருபவர்கள், அது ஒரு சண்டைக்காரர்களின் கூடாரமென நினைப்பார்கள். உண்மை அதுவல்ல. அங்கு சாதுக்களும் உள்ளனர். அப்படியான ஒருவரே இந்தவார மக்கள் பிரதிநிதி.


வடமாகாணசபையில் உள்ள பல அணிகளில், எதிலும் இல்லாமல் எல்லாவற்றிலும் இருப்பதை போல தோன்றும் உறுப்பினர்கள் வெகு சிலரே. அவர்களில் ஒருவர் தமிழரசுக்கட்சியை சேர்ந்த கணபதிப்பிள்ளை தர்மலிங்கம்.

வடமராட்சியின் கரணவாயை சேர்ந்த தர்மலிங்கம் பாடசாலை அதிபராக இருந்து ஓய்வின் பின்னர் அரசியலிற்கு வந்தவர். 2013 வடமாகாணசபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைய முடியாமல் போனவரிற்கு, 2015 இல் வேறொரு வடிவத்தில் வாய்ப்பு வந்தது.

யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டு மாகாணசபை உறுப்பினராக இருந்த புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டார். அவர் பாராளுமன்றத்திற்கு தேர்வானால், மாகாணசபையில் ஏற்படும் வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட வேண்டியவர் தர்மலிங்கம்.

2015 பாராளுமன்ற தேர்தலில் வடமராட்சியில் பலத்த போட்டியிருக்குமென எதிர்பார்த்ததால், உள்ளூரில் இருந்த தமிழரசுக்கட்சி பிரமுகர்களை தீவிரமான தேர்தல் பிரசாரத்தில் இறக்கினார்கள். ஆனால் தர்மலிங்கம் போட்டது வேறு கணக்கு. சித்தார்த்தனை பாராளுமன்றம் அனுப்பினால், மாகாணசபைக்கு செல்லலாமென்பதால், அவர் சித்தார்த்தனிற்கே அதிகமாக வேலை செய்தார். இந்த அதிருப்தி தமிழரசுக்கட்சி தலைமைக்கு இன்றும் இருக்கிறது.

வடமாகாணசபைக்குள் நுழைந்த பின்னர் எந்த சர்ச்சை, அணிகளிற்கும் சிக்கிக்கொள்ளாமல் இருக்கிறார். மாகாணசபைக்குள் இருப்பது தெரியாமல் இருக்கிறார். பெரும்பாலும் விவாதங்களில் கலந்துகொள்வதில்லை. இதனால் மாகாணசபைக்குள் உள்ள எல்லா அணிகளும் அவரை தமது ஆளாக நினைத்துக்கொள்கிறார்கள்.





இந்தவாரம்
க.தர்மலிங்கம்
யாழ் மாவட்டம்

பேச்சுத்தான் அரசியலின் அளவுகோலோ, அவசியமோ கிடையாது. மாகாணசபை விவாதங்களில் அனல்பறக்க பேசுபவர்கள் பெரும்பாலும் நல்ல களசெயற்பாட்டாளர்களாக இருப்பதில்லை. தர்மலிங்கம் அரசியலிற்கு வருவதற்கு முன்னரே தீவிர செயற்பாட்டாளராக வடமராட்சி பகுதியில் அறியப்பட்டுள்ளார். விடுதலைப்புலிகளின் கல்வி செயற்பாட்டு பிரிவுகளுடன் 1990களின் பின்னர் இணைந்து அதிகமாக பணியாற்றியிருக்கிறார். என்றாலும் பிரதேசத்தில் தவிர்க்கவியலாத ஆளுமையாக அப்போது மாகாணசபைக்குள் குறிப்பிடும்படியான ஆளுமையாக தன்னை நிரூபிக்கவில்லை. மிகச்சில சந்தர்ப்பங்களில் மட்டும்தான் அங்கு பேசியிருக்கிறார். ஆனால் பொதுமக்களுடனான அவரது அணுகுமுறை வரவேற்பை பெற்றுள்ளது. மாகாணசபை உறுப்பினரான பின்னரும் உள்ளூரில் அதிருப்தியை சந்திக்காத மிகச்சில மாகாணசபை உறுப்பினர்களில் இவரும் ஒருவர்.

தன்னை மாற்ற தவறிவிட்டார்.

இன்று விவசாயியாகவும், அரசியல்வாதியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். காலையில் தோட்டம் செய்துவிட்டு, பின்னர் அரசியல் செய்கிறார். தற்போதும், நீண்ட அரசியல்நோக்கத்துடனான அடித்தளங்களை இடுவதாக தெரியவில்லை.

வடமராட்சியிலிருந்து மாகாணசபைக்கு வந்தவர்களில் மக்கள் மத்தியில் எதிர்மறையான அபிப்பிராயம் குறைந்தவர் இவர்தான். அவரை இன்னும் அரசியல்வாதியாக பார்க்காமல், ஊரிலுள்ள ஒருவராக பார்ப்பவர்கள்தான் அதிகம். எளிமையாக எல்லோருடனும் பழகுவார். வீட்டிலும் சந்தித்து பேசலாம், தோட்டத்திலும் சந்தித்து பேசலாம் என்கிறார்கள் பிரதேச மக்கள்.

வடமாகாணசபையில் முதலமைச்சரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை, இவரது அரசியல் கரெக்டருக்கு சத்திய சோதனையாக அமைந்திருக்க வேண்டும். ஏதாவதொரு அணியில் இருந்திருக்க வேண்டும். அந்த சமயத்தில் ஏதோ அதிர்ஸ்டத்தால் பிரித்தானியாவிற்கு சென்றுவிட்டார். நம்பிக்கையில்லா பிரேரணை தயாரிக்கப்பட்டபோது, அவரை தொடர்புகொண்டு கையெழுத்து வைக்க சம்மதம் பெற்றிருந்தனர். பிரித்தானியாவில் இருந்து திரும்பியதும் இவர் கையெழுத்திடுவார் என்றுதான் ஆளுனரிடமும் சொல்லப்பட்டிருந்தது. தர்மலிங்கத்தின் அதிர்ஸ்டம், அவர் வருவதற்குள் பிரச்சனையெல்லாம் தீர்ந்து சமரசமாகி விட்டது. அதனால் சத்தியசோதனையில் இருந்து தப்பித்தார்!

மாகாணசபைக்குள் மிக அமைதியாக இருந்து, உள்ளூரில் மக்களுடன் நெருக்கமாக இருக்கும் வடமாகாணசபை மக்கள் பிரதிநிதிகள் பெரும்பாலானவர்கள் செய்யாத பாணி அரசியல் செய்கிறார்.







▶ சர்வதேச கூட்டுறவு தின நிகழ்வுகள் தேவநாயகம் மண்டபத்தில் இடம்பெற்றன. மட்டக்களப்பு கூட்டுறவாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுசபை தலைவர்இ. ராஜப்பு தலைமையில் இடம்பெற்றது. இலங்கை தேசிய கூட்டுறவு தலைவர் லலித் ஏ.பீரிஸ் பிரதமஅதிதியாக கலந்து கொண்டார். கூட்டுறவு தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள், சிறப்பாக செயற்பட்ட கூட்டுறவு கிளைகளிற்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## போராட்டமல்ல, சரியான போராட்டமே தேவை!

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கில் பரவலான போராட்டங்கள் நடந்து வருகிறது. கடந்த பதினைந்து நாட்களாக இந்த போராட்டங்களின் உச்சபட்ட காட்சிகள் அரங்கேறி வருகின்றன.

சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல்கைதிகள் விவகாரம் ஒரு அரசியல் விவகாரமாக கையாளப்படுவதே முறையானது. ஆனால் அதற்கான வாய்ப்பில்லை. அரசியல் கைதிகள் விடயத்தை மாத்திரமல்ல, அன்றாட பிரச்சனைகள் பலவற்றையே அரசியல் விவகாரமாக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு தயாராக இல்லை. இனப்பிரச்சனை தீர்வை மட்டுமே அரசியல் விவகாரமாக தமிழ்தேசிய கூட்டமைப்பு அணுகுகிறது.

தமிழ் சூழலில் மாற்று தலைமை குறித்த உரையாடல்கள் சில வருடங்களாக நடந்து வருகின்றன. இந்த உரையாடல்களும், செயற்திட்டங்களும் ஆள் மாற்றத்தையே தலைமை மாற்றமாக கொள்கின்றன. இந்த பலவீனமான பார்வையால்தான் தமிழ் சூழலில் மாற்று தலைமையை வேடிக்கையான சொல்லாக மாற்றியுள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நடந்து வரும் தற்போதைய போராட்டங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பை ஒரு பங்காளியல்ல. அரசை நெருக்கடிக்குள்ளாக்க அவர்கள் விரும்பவில்லை. கடந்த பதினைந்து போராட்டங்களும் கூட்டமைப்பிற்கு மாற்றான "மாற்று தலைமை" அணியால் ஒழுங்கமைப்பட்டவை.


இந்த அணி வலுவான அரசியல் அணியாக திரள முடியாமல் இருப்பது இந்த போராட்டங்களில் தெரிகிறது. அதை சொல்வது, அவர்களின் போராட்டத்தை, நோக்கத்தை குறைகூறுவதாக ஆகாது. மக்கள் போராட்டங்களை ஒழுங்கமைப்பவர்களின் பலவீனங்களை குறிப்பிட்டு காண்பிக்க வேண்டியது அவசியம். இந்த போராட்டங்களின் பிரதான பலவீனம், கைதிகளிற்கு ஆதரவான உணர்வலையை ஒருமுகப் படுத்த முடியவில்லை. மைத்திரியை சந்திப்பது போராட்டத்தின் முடிவல்ல என ஒரு தரப்பு கருத, மைத்திரியை சந்திப்பதே போராட்டத்தின் இலக்காக இன்னொரு தரப்பு கருதுகிறது.

**தீபம்**

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0214927562
அலுவலகம்: 0214927561
விநியோகம்: 0214927542
விளம்பரம்: 0768255560
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com

மைத்திரியை சந்திக்காமல் விடுவதால் கோரிக்கையை நிறைவேற்ற முடியாதென்பது எவ்வளவு உண்மையோ, அதைவிட உண்மையானது மைத்திரியை சந்திப்பதால் மாத்திரமே கோரிக்கைகளை நிறைவேற்றி விட முடியாதென்பதும். பலமான அரசியல் சக்தியாக உருவெடுத்தால் மாத்திரமே அந்த கோரிக்கையை அடையலாம். அப்படியொரு நிலையை எட்டினால் மைத்திரியை சந்திக்காமலேயே கூட இந்த தரப்புக்களால் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

அரசியல்கைதிகள் தொடர்பான பொதுமக்கள் பார்வையை திரும்பச்செய்தார்கள் என்பதற்கு அப்பால், அரசியல் கைதிகளிற்கான போராட்டத்தை அரசியல்மயப்படுத்த அரசியல் வலுவுடையதாக்க இந்த தரப்புக்களால் முடியவில்லை. காலை தொடக்கம் மாலை வரை சாகும் வரை உண்ணாவிரதம், ஆளுனரை சந்திக்கும் வரை வாசலில் போராட்டம் என்பதையெல்லாம் ஒரு காலத்தில் நகைச்சுவை காட்சிகளாக மாற்றும் வல்லமை காலத்திற்கு உள்ளதென்பதையும் போராட்ட காரர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும்.போராடுவது மட்டுமே முக்கியமல்ல, மிகச்சரியாகவும் போராட தெரிவதுதான் முக்கியம்.



# மீண்டு வருவாரா முதலமைச்சர்?

### அடுத்தடுத்த சத்திரசிகிச்சைகள்... வைத்தியசாலையின் மூடிய அறை மர்மங்கள்

## முதலமைச்சரின் அறிக்கையும்... தீபத்தின் பதிலும்!

கடந்த 15.10.2017 (இதழ் 114) அன்று பிரசுரமான தீபம் வார இதழில் வெளியான, "வைத்தியசாலையிலிருந்து மீண்டு வருவாரா விக்னேஸ்வரன்?" என்ற செய்திக் கட்டுரை தொடர்பாக, அன்றைய தினமே முதலமைச்சர் மின்னஞ்சல் மூலம் பதிலொன்றை அனுப்பியுள்ளார். முதலமைச்சரின் மின்னஞ்சல் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

"தீபம்"பத்திரிகை யாரால் நடாத்தப்படுகின்றது என்பதை நான் அறியேன். எனினும் அதில் இன்று என்னைப் பற்றி வந்த செய்தி மிகவும் ஹாஸ்யமாக அமைந்திருக்கின்றது. "வைத்தியசாலையில் இருந்து மீண்டு வருவாரா விக்னேஸ்வரன்" என்றொரு கேள்வி கேட்கப்படுகின்றதென்றால் அது என் மீதான அனுதாபத்தில் அல்ல என்பது தெளிவு.

வழக்கமாக "முதலமைச்சர் நோய்வாய்ப்பட்டுள்ளதாக அறிகிறோம். அவர் சீக்கிரமே உடல் நிலை தேறித் தமது கடமைகளை மீண்டும் நல்லபடியாக செய்ய இறைவன் அருள்புரிவாராக" என்றுதான் கூறுவார்கள். விக்னேஸ்வரனின் முடிவு இந்தா வந்துவிட்டது என்பதுபோல் இருக்கின்றது நம்மாழ்வாரின் நகைச்சுவைக் கட்டுரை. ஓடிக்கொண்டிருக்கும் வேளையில் காலில் முள் தைத்தால் தேங்கி நின்று முள்ளை பிடுங்கிவிட்டே ஓடவேண்டும். முள்ளைப் பிடுங்கிக் கொண்டிருக்கும் வேளையில் "இனி அவரால் ஓட முடியாது. இத்துடன் அவர் கதி அதோ கதிதான்" என்று கூறுவது போல் இருக்கின்றது இந்த சுவாரஸ்யமான கட்டுரை. இவ்வாறான சுவாரஸ்யமான ஹாஸ்யமிக்க கட்டுரையை என் படத்துடன் பிரசுரித்தமைக்காக தீபத்திற்கும் நம்மாழ்வாருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்! உங்கள்நகைச்சுவைக் கட்டுரைகள் தொடர்வதாக!

*முதலமைச்சரின் அவசரகதியிலான இந்த அறிக்கை தேவையற்றது. தீபம் யாருடைய பத்திரிகை என்ற ஆராய்ச்சியைதான் முதலமைச்சர் தனது அறிக்கையில் செய்துள்ளாரே தவிர, செய்தி தொடர்பான முழுமையான தெளிவுபடுத்தலை செய்திருக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. செய்திகளை தவிர்த்து, பத்திரிகைகளின் பின்னணியை பற்றி பேசும் போக்கு அண்மைக்காலமாக தமிழ் சூழலில் அதிகரித்து வருகிறது. இது தமிழ் அரசியல், பத்திரிகை சூழலின் வீழ்ச்சியை குறிக்கிறது.*

*அரசியல் நோக்கங்களுடன் பத்திரிகைகள் இயங்குவதும், அந்த பத்திரிகைகளிற்கு தோதாக நடக்க அரசியல்வாதிகள் முற்படுவதுமாக ஒரு அவலக்காட்சியை சம காலத்தில் கண்டு வருகிறோம். இந்த அரசியல் சூழலில் இயங்கும் முதலமைச்சரும் இப்படியான ஒரு விபத்தில் சிக்கிவிட்டாரா?*

*எனினும், தீபம் இந்தவகையான 'அரசியல் எடுபிடி" ஊடகமல்ல. கடந்த பதினாறு வருடத்திற்கும் அதிகமான ஊடக பாரம்பரியத்தை கொண்ட நிறுவனத்தின் வெளியீடு தீபம் வாரஇதழ். அது யாருடைய எடுபிடி ஊடகமுமல்ல. "நெற்றிக்கண்ணை திறப்பினும் குற்றம் குற்றமே" என்ற முப்பாட்டன் நக்கீரனின் நியாயமான விமர்சன மரபில் இயங்கும் ஊடகம்.*

*எனினும், முதலமைச்சரின் அறிக்கையில் தீபம் வெளிப்படுத்திய விடயங்கள் தொடர்பான மறுப்பு இருக்கவில்லையென்பதையும் குறிப்பிட வேண்டும். காலில் முள் தைத்தால் தேங்கி நின்று முள்ளை பிடுங்கிவிட்டே ஓடவேண்டும் என தீபத்தின் செய்தியை முதலமைச்சர் அங்கீகரித்திருக்கிறார் என்றே அர்த்தப்படுகிறது. அவர் சீக்கிரமே உடல் நிலை தேறித் தமது கடமைகளை மீண்டும் நல்லபடியாக செய்ய இறைவன் அருள்புரிவாராக என்றுதான் கூறுவார்கள்.*

*விக்னேஸ்வரனின் முடிவு இந்தா வந்துவிட்டது என்பதுபோல் இருக்கின்றது என கட்டுரையின் அர்ந்தத்தையே முதலமைச்சர் திரிபுபடுத்தியுள்ளார். முதலமைச்சரின் உடல்நிலை குறித்த அனுதாபத்தை ஏற்படுத்துவதோ, வனமத்தை விதைப்பதோ தீபத்தின் நோக்கம் நோக்கமல்ல. நிலைமையை உள்ளபடி வெளிப்படுத்தியுள்ளது. அந்த வெளிப்படுத்தலில் ஏதும் கருத்து வேறுபாடு இருக்கிறதா என்பதை முதலமைச்சரும் சொல்லவில்லை.*

*யாருடைய வலியிலும், துயரத்திலும் மகிழ்ச்சியடையும் நபர்களின் இருப்பிடமல்ல தீபம். எனினும், முதலமைச்சராக பொதுவாழ்வில் உள்ளவரின் உடல்நிலை குறித்து அறியும் உரிமையும், ஆர்வமும் மக்களிடம் இருக்கிறது. ஒரு ஊடகமாக தீபம் அதை வெளிப்படுத்தியிருக்கிறது. அவ்வளவுதான்.*

*தீபம் ஒரு மத நிறுவனமல்ல, ஒரு ஊடக நிறுவனம். செய்திகளை வெளியிடுமே தவிர, பிரார்த்தனைகளை நடத்தாது. இதை முதலமைச்சர் புரிந்துகொள்ள வேண்டும்.*

*ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் நிதியுதவியுடனான திட்டமொன்றில் தனது ஆலோசகரையும் இணைக்குமாறு கோரி முதலமைச்சர் கடிதம் எழுதி, அந்த திட்டம் சிக்கலான சமயத்தில், முதலமைச்சர் எழுதிய கடிதத்தை முதலில் பிரசுரித்த ஊடகம் தீபம். முதலமைச்சரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையின் பின்னாலிருந்த அசிங்க அரசியலையும் தீபம் அம்பலப்படுத்தியது. தீபத்தின் ஊடக அறத்தை வாசகர்கள் தெளிவாக அறிந்திருப்பார்கள். அரசியல் நோக்கங்களை கடந்து, ஊடக அறத்தையே நிறைவேற்றி வருகிறது.*

*அணிகளாக இயங்கி பழக்கப்பட்ட தமிழ் ஊடக, அரசியல் சூழலிற்கு பழக்கப்பட்டதாலோ என்னவோ முதலமைச்சரால் இதை புரிந்துகொள்ள முடியாமல் போயிருக்கலாம். முதலமைச்சரின் தற்போதைய உடல்நிலை குறித்த தகவல்கள் மாத்திரமே அந்த செய்திக்கட்டுரையில் உள்ளன. உள்ளதை உள்ளபடி வெளியிட்டதை, தன்மீதான அரசியல் எதிர்ப்புணர்ச்சியென முதலமைச்சர் கருதுவாராக இருந்தால், அதற்கு தீபம் எப்படி பொறுப்பேற்க முடியும்?*

*ஒரு முதலமைச்சர் பலநாள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சூழலில், முதலமைச்சரின் உடல்நிலை என்னஞ் மாகாண நிர்வாகம் எப்படி இயங்குகிறதென்பதை அறிந்துகொள்ள உள்ள மக்களின் உரிமைக்கு முதலமைச்சர் மதிப்பளிக்க வேண்டும். தீபம் அதை வெளிப்படுத்தியமைக்கு குறிப்பிட்ட எந்த உள்நோக்கமும் கிடையாதென்பதை பொறுப்புடன் தெரிவித்து கொள்கிறோம். இந்த சர்ச்சையை மேலும் வளர்த்து செல்லும் ஆர்வமும் தீபத்திற்கு கிடையாது.*

**- தீபம்**



## பயணம் ஆரம்பம் - 1



# நான் அகதி

மருதன்

தாலா பானுவால் ஒரு வார்த்தைகூடப் பேசமுடியவில்லை என்பதால் அவர் கணவர் முகமது மூலமாகவே அவர்கள் கதை வெளியுலகுக்கு வந்திருக்கிறது. அவர்கள் பர்மாவைச் சேர்ந்தவர்கள். பர்மா என்று சொல்லும்போதே அவர் கண்கள் மினுமினுப்போடு விரிகின்றன. பர்மா என்பது அவரைப் பொறுத்தவரை ஒரு நாடல்ல, குட்டி சொர்க்கம். கனவில் மட்டுமே காணக்கூடிய மயக்கமூட்டும் காட்சிகளை ஒருவர் பர்மாவில் அசலாகக் காணமுடியும்.

விக்டோரியன் கட்டடங்களும் அடுக்குமாடிக் குடியிருப்புகளும் நவீன வர்த்தக வளாகங்களும் நிரம்பியிருந்தாலும் பர்மாவை நவீனத்துவம் இன்னமும் முழுக்க முழுங்கிவிடவில்லை. அழகிய ஓடைகள், பச்சைப் பசேலென்று விரிந்திருக்கும் கானகப் பகுதிகள், ஒருவேளை பொம்மையோ என்று திகைக்கவைக்கும் ஜொலிக்கும் பகோடாக்கள், திரும்பும் பக்கமெல்லாம் அடர்த்தியான காவி அங்கி தரித்த பௌத்தர்கள் என பர்மா இதயத்துக்குள் இடம் கேட்கும் கனவுப் பகுதி.

பெரும்பான்மை பௌத்தர்களால் நிரம்பியிருக்கும் ஒரு நாட்டில் ஓர் இஸ்லாமியராக இருப்பதை அவர் ஓர் உறுத்தலாகவே நினைக்கவில்லை. பௌத்தம் என்றால் அன்பு. பௌத்தம் என்றால் சகோதரத்துவம். பௌத்தம் என்றால் புழு, பூச்சியையும் உயிர்களாகக் கருதி மதிப்பளித்து வாழ்வது. சொர்க்கம் என்பதும் இதுதான் அல்லவா? மனநிம்மதி மட்டுமல்ல செல்வமும் இருந்தது. ஒரு பண்ணை, ஐந்து பசுமாடுகள், மூன்று காளைகள். ஆடுகளும் நிறையவே இருந்தன. சந்தேகமின்றி இது பெருஞ் செல்வம். இதுதான் வாழ்வு என்று பூரித்துக் கிடந்தார் முகமது.

எங்கே, எப்போது, யாரால் இந்த நிலைமை மாறியது என்பதை முகமதுவால் இப்போது நினைவுகூரமுடியவில்லை. 'நீ பர்மாவைச் சேர்ந்தவன் அல்ல என்று ஒரு நாள் திடீரென்று எனக்குச் சொல்லப்பட்டது. நீ, உன் மனைவி, உன் மகள் மூவரும் அந்நியர்கள் என்று சொன்னார்கள். எனக்குப் புரியவில்லை. என் தாத்தா பர்மாவைச் சேர்ந்தவர். என் தாத்தாவின் தாத்தாவும் இங்கிருந்தவர்தான். நான் எப்படி அந்நியனாவேன்?'

முகமதுவோடு தர்க்கம் செய்யத் தயாராக இல்லை ஒருவரும். ஒரு நாள் அவருடைய ஆடுகள் மொத்தமும் காணாமல் போயின. மாடுகள் மறைந்துபோயின. பர்மிய ராணுவ வீரர்களுக்குப் பணியாற்றும்படி முகமது கட்டாயப்படுத்தப்பட்டார். பணி என்று சொன்னாலும் ஓர் அடிமையாகவே அவர் அங்கு நடத்தப்பட்டார். அவர் கண் முன்னால் அவருடைய பண்ணை சிறிது சிறிதாக அழியத் தொடங்கியது. பசுமை அனைத்தையும் தொலைத்துவிட்டு ஒரு பாழ்நிலமாக அது மாறிப்போனது.

ஏன் இப்படித் தனக்கு நேர்கிறது என்பதை முகமதுவால் கண்டறிய முடியவில்லை. இதற்கெல்லாம் யார் காரணம் என்றும் அவரால் திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. பர்மிய ராணுவம் தான் தவறிழைத்தது என்று சில சமயம் நினைத்துக்கொள்வார். அவர்களால்தானே என் பண்ணையும் வாழ்வும் அழிந்தன? அவர்கள்தானே என்னை அடிமைப்படுத்தினார்கள்? ஆனால்,நிதானமாகயோசிக்கும் போது சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் தான் குற்றவாளிகள் என்று நினைக்கத் தோன்றும். ராணுவம் மிருகத் தனமாகத் தான் நடந்து கொள்ளும். அக்கம் பக்கத்தினர் மனிதர்கள்தானே? அவர்கள் ஏன் ஆடுகளையும் மாடுகளையும் அபகரித்துக்கொள்ள வேண்டும்?

இல்லை, ஒரு சில்ரை நொந்து பயனில்லை. ஒட்டுமொத்த பர்மிய சமூகமும் சேர்ந்துதான் எங்களை இப்படி ஆக்கியிருக்கிறது என்னும் முடிவுக்கு வந்துசேர்ந்தார் முகமது. ராணுவத்தில் பணிபுரிபவர்களும் அக்கம் பக்கத்துக் குடியிருப்புகளில் வசிப்பவர்களும் இந்தச் சமூகத்தின் அங்கத்தினர்கள்தான் இல்லையா? எனில், இது ஒரு சமூக நோயாகத்தான் இருக்கவேண்டும். அந்த நோய் வெடித்து அதன் கிருமிகள் பர்மா முழுக்கப் பரவியிருக்கவேண்டும். இதுவரை என்னிடம் தோழமையுடன் பழகியவர்கள் அனைவரையும் அந்தக் கிருமி தொற்றிக்கொண்டு விட்டது. அது அவர்களுடைய அடிப்படைக் குணங்களை மாற்றிவிட்டது. அவர்களிடமிருந்து மனிதத்தன்மை விடைபெற்றுச் சென்றுவிட்டது. அவர்கள் என்னை அந்நியர்களாகவும் விரோதிகளாகவும் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். நான் அப்படியேதான் இருக்கிறேன். என் நாடு மாறிப்போய்விட்டது.


முகமது மட்டுமல்ல எல்லா ரோஹிங்கியா முஸ்லிம்களும் கடும் அதிர்ச்சியிலும் குழப்பத்திலும் தள்ளப்பட்டிருந்தனர். நீ ஒரு வந்தேறி, உன்னுடைய நாடான பங்களாதேஷுக்குத் திரும்பிப் போ என்னும் கூக்குரலை அவர்கள் அவ்வப்போது கேட்க நேர்ந்தது. அவர்களுடைய சொத்துகள் சூறையாடப்பட்டன. குடியிருப்புகள் கொளுத்தப்பட்டன. முதல்முறையாக கலவரங்கள் வெடிக்க ஆரம்பித்தன. ஒவ்வொன்றும் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதாக இருந்தது. பர்மியர்களோடு ராணுவம் கூட்டு சேர்ந்துவிட்டதா அல்லது சிவில் சமூகமே ராணுவமயமாகிவிட்டதா என்று தெரியவில்லை. ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு இரண்டு வாய்ப்புகளே இருந்தன. பர்மாவில் தங்கி, சிறிது சிறிதாக வதைபடுவது அல்லது ஒரேயடியாக நாட்டைவிட்டு வெளியேறிவிடுவது.

முகமது இதற்குமேல் வதைபட விரும்பவில்லை. தன் மனைவியையும் 23 வயது மகளையும் அழைத்துக்கொண்டு பர்மாவிலிருந்து வெளியேறினார். எல்லையைக் கடந்து பங்களாதேஷ் வந்துசேர்ந்தார்கள். அங்கே அவர்களைப் போலவே பல ரோஹிங்கியா முஸ்லிம்கள் பெரிய முகாம்களில் தங்கியிருப்பதைக் கண்டனர். அதற்குப் பிறகு நடந்ததை முகமதுவால் விவரிக்கமுடியவில்லை. இவ்வளவு தூரம் பேசிய அவரால் அதற்குப் பிறகு ஒரு சொல்கூடப் பேசமுடியவில்லை. அவருடைய உதடுகள் ஒட்டிக்கொண்டுவிட்டன. அவர் பரிதாபமாக விழித்தார். அதுவரை அமைதியாக இருந்த தாலா பானு மிச்ச கதையைச் சொல்லிமுடித்தார். 'முகாமில் இருந்தபோது என் மகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டாள். எங்கள் வாழ்க்கை அத்தோடு முடிவுக்கு வந்துவிட்டது.'

பர்மாவை மட்டுமல்ல, உலகம் முழுவதையுமே தாக்கி அழித்துக் கொண்டிருக்கிறது அந்தக் கிருமி. பர்மா இனியும் முகமதுவுக்கு ஒரு கனவு தேசமாக இருக்கப்போவதில்லை. உறக்கம் கலைந்து அவர் விழித்துக்கொண்டுவிட்டார். பகோடாக்களையும் புன்னகைக்கும் பௌத்தர்களையும் இனி அவரால் நினைவுகூர முடியாது. பர்மா என்றதும் அவர் இனி, தன் மகளைத்தான் நினைத்துக்கொள்வார். பிறகு களையிழந்த தன் பண்ணையை, சீரழிந்த தன் வாழ்க்கையை, அமைதியாக முடங்கிக்கிடக்கும் தன் மனைவியை. பர்மா என்னும் கனவு முற்றாகக் கலைத்துப்போய்விட்டது.

சிரியாவும் பலருக்கு சுகமான கனவாகத்தான் இருந்தது. வரலாறு எழுதப்படுவதற்கு முன்பே வரலாறு படைத்துவிட்ட நாடு என்பதில் அளவில்லாத பெருமிதத்துடன் இருந்தார்கள் சிரியர்கள். ஆம், ஆட்சிமுறை அவர்களுக்கு ஏற்புடையதாக இல்லைதான். ஊழலும்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...





ஒடுக்குமுறையும் மலிந்திருந்தது உண்மை தான். வேலை வாய்ப்பு, கல்வி, மருத்துவம் என்று பல துறைகளில் போதாமைகள் இருக்கத்தான் செய்தன. ஆனாலும் சிரியாவை விட்டுத் தந்ததில்லை அவர்கள். ஆட்சியாளர்களின் ஒழுங்கீனங்களுக்காக என் தாய் நாட்டை நான் ஏன் பழிக்கவேண்டும்?

சிரியாவைப் போலவே பழைமையான நிலம், இராக். சிரியாவைப் போலவே அங்கும் அரசியல் தலைமை மக்களின் எதிர் பார்ப்புகளைப் பொய்த்தது நிஜம். ஜனநாயகத்தின் இடத்தை அடிப்படை வாதம் பிடித்துக்கொண்டதால் அநேகம் பேர் அங்கே ரத்தம் சிந்த வேண்டியிருந்ததும் உண்மை. 'நான் சன்னி', 'நீ ஷியா' என்று சண்டையிட்டுக் கொண்டாலும் நெருக்கடி ஒன்று நேரும்போது நான் இராக்கியன் என்று நெஞ்சு நிமிர்த்திச் சொன்னவர்கள் அங்கே அநேகம் பேர்.

அமைதியாகத்தான் இருந்தது இலங்கை யும். சின்னஞ்சிறிய அழகிய தீவு. பர்மாவைப் போலவே பௌத்தர்கள் புன்னகைத்தபடி வளைய வந்துகொண்டிருந்த நிலம் அது. அமைதிக்கு மட்டுமல்ல அழகுக்கும் குறைவில்லாத பிரதேசமாகவே இருந்தது. ஆனால், இப்போது எல்லாமே மாறி விட்டன.

சிரியா ஓர் அகண்ட சுடுகாடாக மாறி விட்டது. பர்மாவிலிருந்து ரோஹிங்கி யாக்கள் இந்த நிமிடம்வரை வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இராக்கின் இதயம் வெறுமனே துடித்துக்கொண்டிருக்கிறது. பல லட்சக் கணக்கான இராக்கியர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். இலங்கை இன்று ஜீவனில்லாமல் பிளவுண்டு கிடக்கிறது.

**அகதிகளின் கதை வலியும் ரணமும் மிக்கது. அதே சமயம் அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சிக்கும் நட்புக்கும் காதலுக்கும் வேட்கைக்கும் இடமிருக்கத்தான் செய்கிறது. என் வாழ்க்கை முற்றுபெற்றுவிட்டது என்று சொல்லும் அகதிகளைப் போலவே, என் வாழ்வை மீட்டெடுக்கப்போகிறேன்...**

ஆப்கானிஸ்தான், துருக்கி, ஏமன், லிபியா, சோமாலியா, சூடான், வடகிழக்கு நைஜீரியா என்று இன்னும் இன்னும் அடுக்கிக்கொண்டே போகலாம். முடிவில்லாமல் இந்நாடுகளிலிருந்து எறும்புக் கூட்டங்களைப்போல் மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். படித்தவர்கள், படிக்காதவர்கள், நடுத்தர மக்கள், ஏழைகள், செல்வத்தைத் தொலைத்த வர்கள் அனைவரும் இந்த வரிசையில் இடம்பெற்றிருக்கிறார்கள். நடக்க முடியாத முதியோர்கள், இதய நோயாளிகள், பார்வையிழந்தவர்கள், மாற்றுத்திறனா ளிகள் அனைவரும் ஒன்றுபோல் வெளியேற வேண்டியிருந்தது. பெண்கள் தங்களையும் பாதுகாத்துக்கொண்டு குடும்பத்தையும் கவனித்துக்கொள்ளவேண்டியிருந்தது. குழந்தைகளின் அழுகுரலோடு போட்டி யிடுகின்றன வளர்ந்தவர்களின் ஓலம்.

இவர்கள் இழந்தவை அநேகம். பெற்றதோ ஒன்றுதான். அகதி என்னும் பெயர். பாலின வேறுபாடின்றி, வர்க்க வேறுபாடின்றி அனைவருக்கும் ஒரே பெயர். தங்கள் நாட்டின் எல்லையைக் கடந்து இன்னொன்றில் முதல் காலடியை எடுத்து வைத்த அந்தத் தருணத்தில் எங்கிருந்தோ ஓடிவந்து ஒட்டிக்கொள்கிறது. பலருக்கும் இனி இதுவே ஒரே அடையாளமாக இருக்கப்போகிறது.

உண்மையில் அகதி என்பவர் யார்? அவர் எப்படி உருவாகிறார்? அவர் உருவாவதற்கு யார் காரணம்? எந்தச் சூழலில் இந்த மாற்றம் நிகழ்கிறது? இந்தக் கேள்விகளுக்கு எளிமையான பதில்கள் இல்லை. மாறாக, மேலதிகக் கேள்விகளையே எழுப்பவேண்டியிருக்கிறது. அமைதியிழந்த நாடுகளே அகதிகளை உருவாக்குகின்றன என்பதைப் பொதுவிதியாகக் கொண்டால் ஒரு நாடு ஏன் அமைதியிழக்கிறது? அகதிகளில் கணிசமானவர்கள் ஏன் இஸ்லாமியர்களாகவே இருக்கிறார்கள்?

அகதிகளுக்கு மட்டுமல்ல, அவர் களுடைய கதைகளுக்கும் எல்லைகள் கிடையாது. எனவே இந்தத் தொடரில் உலகம் முழுக்க நாம் வலம் வரப்போகி றோம். அகதிகளின் கதை என்பது ஆசியா வின் கதையாகவும் மத்திய கிழக்கின் கதையாகவும் ஆபிரிக்காவின் கதையாகவும் இருக்கப்போகிறது. நிச்சயம் இது அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் கதையும்தான். நிகழ்காலமும் கடந்த காலமும்; அரசியலும் வரலாறும்; வாழ்வும் மரணமும் இத்தொடரில் கைகோர்க்கப்போகின்றன. அகதிகளை உலகம் எப்படிக் காண்கிறது என்பதை நாம் பார்க்கப்போகிறோம். அகதிகளின் கண்களைக் கொண்டு பார்த்தால் உலகம் எப்படி இருக்கும் என்பதையும் பார்க்கப்போகிறோம்.

அகதிகளின் கதை வலியும் ரணமும் மிக்கது. அதே சமயம் அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சிக்கும் நட்புக்கும் காதலுக்கும் வேட்கைக்கும் இடமிருக்கத்தான் செய்கிறது. என் வாழ்க்கை முற்றுபெற்றுவிட்டது என்று சொல்லும் அகதிகளைப் போலவே, என் வாழ்வை மீட்டெடுக்கப்போகிறேன் என்று சொல்லும் அகதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். இருவரையுமே நாம் இங்கே சந்திக்கப் போகிறோம்.

அகதிகளின் கதை என்பது நம் காலத்து மனிதர்களின் கதை. சுருக்கமாகச் சொன்னால், நம் கதை. அகதிகளுக்கு ஒரு முகம் கொடுத்துப் பார்க்கவேண்டுமானால் நம்முடையதைக் கொடுக்கலாம். இன்று அகதிகளாக மாறியிருக்கும் அனைவருமே நேற்றுவரை இயல்பானவர்களாக இருந்தவர்கள்தாம். இதன் பொருள், இன்று இயல்பாக இருக்கும் யார் வேண்டு மானாலும் நாளை அகதிகளாக உரு மாறலாம் என்பதுதான். இது அச்சுறுத்தல் அல்ல, அக்கறையுடன்கூடிய ஓர் எச்சரிக்கை மட்டுமே.

சொந்தங்கள் வருவார்கள்



நெடுங்கேணி கிறிஸ்து அரசர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிட தொகுதி கடந்த 15ம் திகதி திறந்து வைக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டதுடன், திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.






நெடுங்கேணி கிறிஸ்து அரசர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிட தொகுதி கடந்த 15ம் திகதி திறந்து வைக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டதுடன், திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.







நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் கல்வி கண்காட்சி அண்மையில் நடந்தது. வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா வடக்கு பிரதி கல்வி. பணிப்பாளர் மாலினி முகுந்தன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

# வருடத்தின் 320 நாட்கள் சூரிய வெளிச்சம் உத்தரவாதம்!

## உலகம் சுற்றி பார்ப்போம் 2

சாள்ஸ் ஜே போர்மன்

சரித்திர ஏடுகளில் ரோடோஸ் கி.மு 1600 அளவில் முதன்முதலாகக் குறிப்பிடப்படுதாகச் சொல்லப்படுகிறது. அச்சமயத்திலேயே இத்தீவில் குடியிருந்த அடையாளங்கள் இருக்கின்றன.

அக்காலத்தில் கடற்கொள்ளைக்குப் பெயர்பெற்ற கிறீஸைச் சேர்ந்த காரிஸ் பிராந்தியத்து மக்கள்தான் முதல்முதலாக ரோடோஸுக்கு வந்து குடியேறியவர்கள் என்று கருதப்படுகிறது. அவர்களைத் தவிர எகிப்தைச் சேர்ந்த கடலோடிகளும் இப்பிரதேசத்தைக் கிட்டத்தட்ட அதேகாலத்தில் வந்தடைந்ததார்கள்.

கிரேக்ககடவுள்கள், உலகம் எப்படி ஆரம்பித்தது பற்றிய எத்தனையோ பூர்வீக கதைகள் இருக்கும்போது அந்த நாட்டின் ஒரு பாகமான ரோடோஸ் எப்படி படைக்கப்பட்டது என்பது பற்றிக்கதையொன்றும் இல்லாமலிருக்குமா?

அப்படியொரு கதையைப் பிறகு சொல்கிறேன்.

முதல் நாளன்று காலையில் ஆறுதலாக எழும்பி பிற்பகல்தான் வெளியே போவது என்று திட்டம். வழக்கமாக விடியற்காலையிலேயே எழுந்துவிடும் பழக்கமிருந்ததாலும், ரோடோஸின் சூரியத்தேவன் ஒளிக்கதிர்களை வீச ஆரம்பித்து விட்டதாலும் நாலைந்து மணித்தியாலங்களுக்கும் அதிகமாக என்னால் தூங்க முடியவில்லை.





மகன் கதிர் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். எட்டு வயதுப் பிள்ளைக்கு நிறையத் தூக்கம் அவசியம். அவன் எழும்புவதற்குள் நாங்கள் வசிக்கும் இடத்தைச் சுற்றிவர என்னவெல்லாம் இருக்கிறதென்று தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டேன்.

என்னைத் தயார் செய்துகொண்டு மகனை அணைத்துக் காதுக்குள் நான் வெளியே போவது பற்றிச் சொல்ல, அவனும் கண்ணை மூடியபடியே தலையை ஆட்டினான். கதவைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டேன்.

மூன்றாம் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தேன்.விடுதிவரவேற்பறையில்இப்போது ஒரு பெண் இருந்தார். அவரிடம் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். அவர் அங்கிருக்கும் வசதிகள் பற்றிச் சொன்னார். அவசியமான நாளாந்தப் பொருட்களை வாங்கிக்கொள்ள விடுதியின் முதல் மாடியிலேயே ஒரு கடை இருப்பதாகவும் அங்கே முடியும் என்றார். நகரம் சுமார் ஒன்றரை கி.மீதூரத்தில் இருப்பதாகவும் அங்கு போக வசதிகள் செய்து தரலாம் என்றும் தெரிவித்தார்.

ரோடோஸின் அனேகமான ஹோட்டல் களிலும் இதேபோன்று சகல வசதிகளும் கிடைக்கும். அங்கு வருபவர்களின் சௌகரியத்துக்காக தீவின் முக்கியமான இடங்களுக்கெல்லாம் போக விடுதி களிலேயே ஒழுங்கு செய்து கொடுக்கி றார்கள்.தவிர,இங்கேவரும்இளசுகள் பலரும் தங்களிஷ்டப்படி சுற்ற ஸ்கூட்டர்கள், சிறிய நான்கு சக்கர வண்டிகளும் வாடகைக்குக் கிடைக்கும். அதனால் தீவின் பிரபல கடற்கரை வீதிகளிலெல்லாம் கூட்டம் கூட்டமாக இப்படியான வண்டிகளில் போகிறவர்களைக் காணலாம்.

அது ஒரு திங்கள் கிழமை. வெயில் சூடாக இருந்தாலும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரிந்த கடல் காற்று சுகமாக வீசியது. விடுதி வாசலில் நின்று முன்னால் தெரிந்த வீதிகளில் எதைத் தேர்ந்தெடுத்து நடக்கலாம் என்று ஒரு நிமிடம் யோசித்து நேராக முன்னாலிருந்த வீதியைத் தெரிந்தெடுத்து நடக்க ஆரம்பித்தேன். காரணம் அவ்வீதியில் அருகிலேயே ஒரு சிறிய கடை இருந்தது.

அப்போதுதான் திறக்கபட்டுக் கொண்டிருந்த கடையில் அத்தனை கூட்டமில்லை. காலை விற்பனைக்காக ரொட்டிகளை ஏற்றிக் கொண்டு வந்திருந்த ஒரு வான் முன்னால் நிற்க அதிலிருந்து விதம்விதமான ரொட்டிகளை உள்ளே இறக்கிக் கொண்டிருந்தார் ஒருவர்.

அதே வீதியில் சற்று நடந்து வலது பக்கமாகத் தெரிந்த இன்னொரு வீதியில் இறங்கி நடந்து விட்டு சுமார் அரை மணி நேரமானதும் மீண்டும் இன்னொரு வழியிலே திரும்பி தங்கியிருந்த விடுதியை நோக்கித் திரும்பி வந்தேன். இப்படியாக சில சாலைகளை அறிமுகப்படுத்திக் கொள்வது மூலம் புதியதாகத் தங்கியிருக்கும் இடத்தை ஓரளவு பரிச்சயம் செய்து கொள்வது என் பழக்கம்.

திரும்பி வரும்போது மீண்டும் அதேகடை வழியாக வந்து உள்ளே நுழைந்தேன். சில சிற்றுண்டிகளும் காலையில் சாப்பிடுவதற்கான உள்ளே சீஸ், மரக்கறி போன்றவகள் உள்ளடக்கிய பணிசும் வாங்கிக் கொண்டேன். எவ்ரோ நாணயம்தான் அங்கே பாவிக்கப்படுகிறது. பழக்கமில்லாத நாணயம் என்பதால் கையிலிருந்த நோட்டைக் கொடுத்து மிச்சமாகக் கிடைத்த சில்லறையை வாங்கி அவை என்னென்ன என்று கவனித்துக் கொண்டேன்.



திரும்ப விடுதி அறைக்கு வந்தபோதும் கதிர் நித்திரையாகவே இருந்தான். கீழே இருக்கும் உணவு விடுதிக்குப் போய்க் கோப்பியை எனக்காக எடுத்துக் கொண்டு வந்து அறை பல்கனியில் இருந்து ரோடோஸ் பற்றிய ஒரு சுற்றுலாப் புத்தகத்தை வாசித்தபடி காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டேன்.

திடீரென்று குதித்துக் கொண்டு ஓடிவந்தான் கதிர். "எப்போது நீச்சல்குளத்துக்குப் போவோம்?" என்பது அவனது முதலாவது கேள்வி. நாங்கள் தங்கும் விடுதியிலே நீச்சல்குளம் இருக்கிறது என்பதை முன்பே சொல்லியிருந்ததால் ஒவ்வொரு நாளும் அதில் குளிக்க வேண்டும் என்ற திட்டத்துடன் வந்திருந்தான் அவன்.

"முதலில் காலைக் கடன்களையெல்லாம் முடித்துக் கொண்டு, வந்து சாப்பிடு. அதன் பின்பு போய்க் குளிப்போம். வெயில் ஏறி நீச்சல்குளம் முழுவதும் வெயிலாக முதல் போவோம் வா!" என்றேன். சந்தோசக் குதியலுடன் ஓடிப் போனான் அவன்.

அன்றைய திட்டத்தின்படி நீச்சல்குளத் தில் ஆசைக்கு நீச்சலடித்து விட்டு பிற்பகல் வரை ஓய்வெடுத்துவிட்டு வெயில் வெம்மை குறையும் நேரமாக நகருக்குப் போகப் புறப்பட்டோம். அப்போது சுமார் நான்கு மணியாகி விட்டது.

முதல்தரம் நகருக்குப் போகும்போது வழியிலிருப்பவைகளையும் பார்த் துக்கொண்டு போவோம் என்ற எண்ணத் துடன் நடந்தே போனோம். வழியிலே அழகான பூந்தோட்டங்களுடன் கூடிய வீடுகள், ஓரிரு சிறுவர் விளையாட்டிடங்கள், கடைகள் இருந்தன. வீதிகள் விசால

# குலைக்காது... கடிக்கும்!

## ஓங்கிக் கடித்தால் ஒன்றரை கிலோ காலியாக்கும் நாய்கள்



'குரைக்கிற நாய் கடிக்காது'னு பழமொழி சொன்னாலும், நாயென்றாலே பயப்படுற கோஷ்டி இங்கே அதிகம். குரைக்கிறதை விடுங்க, இதோ... இந்த நாய்கळெல்லாம் முறைச்சாலே நமக்கு ஏதேதோ எல்லாம் நடந்து விடும். அந்தளவுக்குப் பயமுறுத்தும் நாய்களில் சில...

**American Bulldog:** பார்க்கவே படுபயங்கரமாக இருக்கும் தெற்கு அமெரிக்காவைச் சேர்ந்த நாய் இனங்களுள் ஒன்றுதான் 'அமெரிக்கன் புல்டோக்'. டென்மார்க், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இந்த வகை நாய்களை வளர்ப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஃபேமஸ்



கார்ட்டூனான 'டாம் அண்ட் ஜெர்ரியில்' இடம்பெற்றிருக்கும் 'ஸ்பைக்' மற்றும் 'டைக்' இந்த இன நாய்களை மையமாக வைத்து சித்திரிக்கப்பட்ட கதாபாத்திரங்கள்தாம். ஆனால், அதில் காட்டுவதுபோல் காமெடி டாக் இல்லை இது. இந்த வகை நாய்களிடம் கொஞ்சம் உஷாராகத் தான் இருக்க வேண்டும்.

**Bandog:** இந்த நாய்க்குச் சொந்த ஊர் இங்கிலாந்து. பழைமையான இனத்தைச் சேர்ந்த நாய்களுள் ஒன்று தான் 'பான்டோக்'.



பல்வேறு இடங்களில் இந்த இன நாய்களை வளர்க்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நாய் வளர்க்கும் சொந்தக்காரரைத் தவிர யாருக்கும் அடங்காது. இரவு நேரத்தில் ஏதேனும் இடத்தைப் பாதுகாப்பதற்காக இந்த இன நாய்கள் வளர்க்கப்பட்டு வந்தன. வாலை ஆட்டுகிறது என்பதற்காக அருகே சென்றால், ஆயுசு முடிந்துவிடும். ஓங்கிக் கடித்தால் ஒன்றரை கிலோ காலியாம்.

**Neapolitan Mastiff:** கன்றுக்குட்டி







போல் தோற்றம் கொண்டிருக்கும் இன வகை நாய்தான் 'நீயோபோலிடன் மாஸ்டிஃப்'. முகம் சாதுவாக உள்ளதால், இதைச் சாதாரணமாக எடைபோட்டு விடக் கூடாது. வளர்ந்து பருவத்தை எட்டினால் இதனுடைய எடை 60 முதல் 70 கிலோ வரை இருக்கும். தனியாக வீட்டைப் பாதுகாப்பதற்காக வளர்க்கப்பட்டு வந்த நாயிடம் தனியாக சிக்கினால் சின்னாபின்னம் தான். '

**Wolfdog:** சாம்பல் நிறத்தில், பார்க்க ஓநாய் போல் தோற்றம் கொண்டிருக்கும் வுல்ஃப்டோகின் சொந்த ஊர் அமெரிக்கா. இதில் 'ஜெர்மன் ஷெப்பர்ட்', 'சைபீரியன் ஹஸ்கி', 'அலாஸ்கன் மல்ம்யூட்ஸ்' எனப் பலவகைகள் உள்ளன. ஓநாய் எப்படி ஊளையிடுமோ அதே போல் ஊளையிடுவது இதனுடைய தனித்துவ குணங்களில் ஒன்று. இதன் வகைகளுள் ஒன்றான சைபீரியன் ஹஸ்கி பனிப்பிர தேசங்களில் வண்டியிழுக்கப் பயன்படும். பார்க்க அழகாக இருக்கிறது என்று அருகே சென்று கொஞ்சினால், உயிர்ப் பிச்சை கேட்டுக் கெஞ்சும்படி ஆகிவிடும் மக்களே!

**Boerboel:** திடமான உடற்கட்டைக் கொண்டுள்ள இந்தப் பயலின் சொந்த ஊர் 'தென் ஆபிரிக்கா'. பார்க்க அப்பாவி போல் முகம் இருந்தாலும் ஆபத்துமிகுந்த நாய் வகைகளுள் ஒன்றுதான் 'போயர்போயல்'. பிரான்ஸ், மலேசியா, மொரீஷியஸ், பெர்முடா போன்ற நாடுகளில் இதை வளர்க்கத் தடை விதித்துள்ளனர். இதற்கு முறையாகப் பயிற்சியளித்தால் ஊரோடு ஒத்துப்போகும் தன்மையுடையது. இதற்குப் பிடிக்காத முறையில் சீண்ட நினைத்தால், வேரோடு செத்துதான் போக வேண்டும்.

**Dogo Argentino:** பார்த்தால் வெகுளியாக, அப்பாவி போல் முகத்தை வைத்துக் கொண்டிருக்கும் நாய் வகைதான் 'டோகோ அர்ஜென்டினோ'. பால் வடியும் முகத்தை நம்பி ஏமாந்துவிடக் கூடாது. இந்த வகை நாய்களை வேட்டையாடுவதற்காகப் பயன்படுத்திவந்தனர். இதன் வம்சாவளியாக கிரேட் டேன், பொக்ஸர், பொயின்டர் என்ற பல நாய் வகைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம். 'பாட்ஷா' படத்தில் சூப்பர் ஸ்டார் அருகில் ஒரு காட்சியில் இடம்பெற்றிருக்கும் நாய்தான் 'கிரேட் டேன்'.

**PitBull:** இதன் உருவம் மிக மிகச் சிறியது ஆனால், பாய்ந்தால் தொண்டையைக் கவ்வும் அளவுக்கு மிகவும் வலிமை வாய்ந்த நாய். இதன் சொந்த ஊர் அமெரிக்கா. இந்த 'பிட்புல்' வகை நாய்களை காவல்துறை, ராணுவம் போன்ற இடங்களில் பயன்படுத்திவந்தனர். இதனிடம் நட்பாகப் பழகினால் உயிரைக்கூடக் கொடுக்கும் அளவுக்கு மிகவும் பாசமான நாய். இருந்தாலும் சில நாடுகளில் இந்த வகை நாய்களுக்குத் தடை விதித்துள்ளனர். ●

---

மானவையாக இல்லை. நாங்கள் நடந்த வழியாலேயே பேருந்துகளும் போனதைக் கவனித்தோம். அவைகள் எங்கிருந்து எவ்வழியாகப் போகின்றன, எங்கள் விடுதிக்கருகில் ஏதாவது பேருந்து நிறுத்தம் இருக்கிறதா என்றெல்லாம் தெரிந்து கொண்டால் ரோடோஸைச் சுற்ற இலகுவாக இருக்கும் என்று எங்களுக்குள் யோசித்துக் கொண்டோம்.

நகரத்தை நெருங்கும்போது பாரிய விருட்சங்கள் இரண்டு பக்கங்களிலும் அடர்ந்திருந்தன. அவற்றினூடாக அகலமில்லாத ஒரு சாலையினூடாகவே நகருக்குள் நுழைந்தோம். உயரமான மூன்று வில் வளைவுகள் எங்களை வரவேற்றன.

வலது பக்கமாகத் தெரிந்தது புராதன ரோடோஸ் என்றழைக்கப்படும் கோட்டை நகரம். இடது பக்கமாக நகரின் நவீனகாலக் கட்டடங்கள் இருந்தன. இன்னொரு வீதி கடற்கரைக்குப் போகும் வழியென்று அடையாளமிடப்பட்டிருந்தது.

இத்தீவின் தலைநகரமான இந்த நகரம் கடற்கரைக் குளியல், பொழுதுபோக்கு, கொள்வனவுச் சந்தை, சரித்திரம் போன்ற எல்லாவற்றையும் கொண்ட கலவை. சுமார் 80 000 பேர் வாழும் இந்த நகரில் நிச்சயமாக




ஓரிரு பத்தாயிரம் சர்வதேசச் சுற்றுலாப் பயணிகளை எப்போதும் காணலாம்.

சுற்றுலாக்களின் போது நாங்கள் காலைச் சாப்பாட்டின் பின்பு மாலையில்தான் எங்கள் இரண்டாவதும் கடைசியானதுமான உணவு நேரம். இடையில் பசித்தால் ஏதாவது சிற்றுண்டியை மட்டும் சாப்பிடுவோம். அவ் வழக்கம் எங்களை நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க உதவுகிறது.

நகருக்குள் சுற்ற முன் பசியைத் தீர்த்துக்கொள்ள ஒரு உணவகத்தைத் தேடித் தெரிந்தெடுத்துக் கொண்டோம். எங்கள் பசியை ஆற்றிக்கொள்ள முன்பு ரோடோஸின் கதையின் மிச்சம்ஞ்ஞ்ஞ்

கிரேக்க பூர்வீக நம்பிக்கைகளில் பனிரெண்டு முக்கிய கடவுள்கள். அவர்களில் ஒருவர் ஸியஸ், சொர்க்கத்தின் தலைவன், மற்றக் கடவுள்களெல்லாவருக்கும் அதிபர்.

எல்லாரும் சேர்ந்து தாங்கள் படைத்த உலகத்தைப் பங்குபோட்டுக் கொண்டார்கள் கடவுள்கள். ஆனால், இறுதியில்தான் தெரியவந்தது அவர்கள் ஹீலியோஸுக்காக ஒரு பாகத்தைப் பிரித்துக் கொடுக்க மறந்துவிட்ட விடயம்.


எனவே அவர்களெல்லாரும் சேர்ந்து நீருக்குள்ளிருந்து முதலில் வெளியே வருகின்ற நிலப்பகுதியை ஹீலியோஸுக்குக் கொடுப்பதென்று முடிவு செய்தார்கள். அதன்படியே நீருக்குள்ளிருந்து தலை காட்டிய தீவான ரோடோஸ், சூரியத்தேவன் ஹீலியோஸுக்குக் கொடுக்கப்பட்டது.

அதனால்தான் ரோடோஸ் வருடத்தின் பெரும்பகுதி சுமார் 320 நாட்கள் சூரிய வெளிச்சத்துடன் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது. -தொடரும்

ஷூட்டிங் ஸ்பொட்


அறம்


ஒரு நல்லநாள் பார்த்து சொல்றேன்





## சினி கிசுகிசு

- கொழுகொழு நடிகை சில காலமாக பல படங்களில் நடித்து பிசியாக இருந்தாராம். தற்போது நடிகைக்கு புது வாய்ப்பு எதுவும் இல்லையாம். ஏற்கனவே நடித்து முடித்துள்ள ஓரிரு படங்களை மட்டுமே நம்பி இருக்கிறாராம். கடை திறப்பு, விளம்பரம் என எந்த வாய்ப்பாக வந்தாலும் சம்பளம் அட்ஜெஸ்ட் செய்து கொண்டு ஒப்புக்கொள்கிறாராம். தனது ஆஸ்தான டைரக்டரின் மெகா பட்ஜெட் படத்தில் வாய்ப்பு கிடைக்கும் என காத்திருந்தாராம். அது முடியாமல் போனதாம். இதனால் மிகவும் வருத்தத்தில் இருக்கிறாராம் நடிகை.
- கஷ்டப்பட்டு, துன்பப்பட்டு, துயரப்பட்டு சினிமாவில் முன்னுக்கு வந்தவர் சுமார் மூஞ்சி நடிகர். அதனால், யார் நடிக்கக் கூப்பிட்டாலும், 'இதோ வர்றேன்ஞ்' என பக்கத்து வீட்டுக்குப் போவது போல நடித்துக் கொடுத்துவிட்டு வந்துவிடுவாராம். அதுமட்டுமல்ல, வித்தியாசமான பல கதைகளை, கேரக்டர்களை முயற்சித்துப் பார்க்க இவரை விட்டால் ஆள் கிடையாதாம். இவர் கஷ்டத்துக்குப் பலனாக, சமீபத்தில் இவர் நடித்து வெளியான 4 படங்களும் சூப்பர் ஹிட்.

  எனவே, இதுவரை தான் வாங்கிவந்த சம்பளத்தை அப்படியே டபுளாக உயர்த்தி விட்டாராம். இதனால், அவரை வைத்துப் படமெடுக்க நினைத்த தயாரிப்பாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனராம்.
- தமிழ் சினிமாவில் ஒருசில படங்களில் மட்டுமே நடித்திருக்கும் அந்த நடிகையின் படங்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய படங்களே வெற்றி பெற்றிருக்கிறது. தமிழ், தெலுங்கு சினிமாவில் முன்னணி நாயகியாக வரமுடியாததால் தற்போது பாலிவுட் பக்கம் கவனம் செலுத்தி இருக்கும் அந்த நாயகியின் நடிப்பில் தமிழ் பிக்பாஸில் பலரால் கலாய்க்கப்பட்ட ஒருவரது பெயரைக் கொண்ட படம் ஒன்று தயாராகி இருக்கிறது. நாயகி தமிழில் நடிக்கும் போதே ஓரளவு தாராளமாய் கவர்ச்சியைக் காட்டி வந்த நிலையில், பாலிவுட்டில் தனது உச்ச கவர்ச்சியால் அனைவரையும் தற்போது வாய்ப் பிளக்க வைத்துள்ளாராம்.

  முன்னதாக கிரிக்கெட்டின் கூல் கப்டனுடன் டேட்டிங் சென்றதாக நாயகி கிசுக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது பாலிவுட் மொடலும் நடிகருமான ஒருவருடன் அடிக்கடி டேட்டிங் செல்வதாக கூறப்படுகிறது.



## வில்லிக்கு பார்ட்னர் உண்டாம்!

அழகிய தமிழ்மகள் தொடரில் வில்லியாக அனைவரையும் மிரள வைத்தவர் சுபலட்சுமி. கொடூர வில்லியாக மிரள வைத்த அனுபவத்தை பேசியுள்ளார். டைரக்டர் முதலில் கதை சொன்னபோது, இவ்வளவு ரெரர் வில்லியாக இருக்க வேண்டுமென நினைக்கவில்லையாம். ஆரம்பத்தில் தயக்கம் இருந்தாலும், பின்னர் பாத்திரத்துடன் ஒன்றி விட்டாராம். இவரது நடிப்பிற்கு மக்கள் மத்தியில் பயங்கர எதிர்ப்பு உள்ளதாம். சமீபத்தில் இவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனபோது, ரசிகர்களின் திட்டல்தான் காரணமென நினைத்தாராம். முன்னர் மொடலிங் செய்யும்போது ஒருவரை பார்த்து மனதை பறிகொடுத்து விட்டேன் என்பதையும் வெளிப்படையாக சொல்லியுள்ளார். விரைவில் அவருடன் கல்யாணமாம்.

## கணேஷ் செய்த ஒரே தவறு

பிக்பாஸ் வீட்டில் 100 நாள் இருந்த மூவரில் ஒருவர் கணேஷ் வெங்கட்ராம். உள்ளேயிருந்தபோது எந்த களங்கத்திற்கும் உள்ளாகாதவர். பிக்பாஸ் நிகழ்ச்சிக்காக விஜய் டிவி ஆரம்பத்தில் இவரை தொடர்பு கொண்டபோது மறுத்துவிட்டாராம். அந்த ஷோ பற்றி இவரிடம் நல்ல அபிப்பிராயம் இல்லையாம். கமல்ஹாசன்தான் ஷோவை நடத்துகிறார் என்று தெரிந்த பின்னர்தான் ஓகே சொல்லியுள்ளார். பிக்பாஸ் வீட்டிலிருந்த போது பரணி சுவரேறி குதித்து வெளியேறியதை தடுத்திருக்க வேண்டுமென இப்போது நினைக்கிறாராம்.



## மனைவியை விட மறுக்கும் பாலாஜி

விஜய் டிவியின் கலக்கப் போவது யாரு நிகழ்ச்சியின் நடுவரும், நடிகருமான பாலாஜிக்கும், அவர் மனைவிக்கும் இடையிலான பிரச்சனைதான் சின்னத்திரையில் சூடான விடயம். மனைவி, பிள்ளையை அறைக்குள் அடைத்துவைத்து பாலாஜி தீ வைக்க முயலும் வீடியோ சமீபத்தில் வெளியானது. இப்போது விவாகரத்து கோரி பாலாஜியின் மனைவி மனு செய்துள்ளார். இதுவரை 20 இற்கும் மேற்பட்ட ஆண்களுடன் என்னை இணைத்து அவதூறு செய்துவிட்டார், எப்படித்தான் இப்படியெல்லாம் யோசிக்க முடிகிறதோ என நொந்து போயிருக்கிறார் பாலாஜியின் மனைவி. பாலாஜியின் கொடுமைகள் பற்றி அண்மையில் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுவிட்டு வர, பொலிஸ் இன்ஸ்பெக்டரோடு தொடர்புபடுத்தி கதை கட்டிவிட்டாராம். இதேவேளை, மகனை தன்னிடம் ஒப்படைத்தால் மாத்திரமே விவாகரத்து தரலாமென பாலாஜி சொல்லியுள்ளார்.



## தமிழ் கடவுள் முருகன் ஆணா?

விஜய் டிவியில் ஒளிபரப்பாகி வரும் தமிழ் கடவுள் முருகன் தொடரில் முருகனாக நடிப்பது பெண் குழந்தையா, ஆண் குழந்தையா என பலரும் குழப்பமடைகிறார்கள். அது ஆண் குழந்தைதான். பெயர் அனிருத். ஒன்பது வயதாகிறது. ஸ்ரீரங்கத்தில் பிறந்ததால் அனிருத் என்ற பெருமாள் பெயரை வைத்தார்களாம். பெருமாள் இப்பொழுது முருகன் ஆகிவிட்டான் என பூரித்து போயுள்ளனர் பெற்றோர். படப்பிடிப்பு தளத்திலேயே, குழந்தை ஆணா பெண்ணா என கேட்பார்கள் என்கிறார் தாயார். இதேபோல, இந்த தொடரில் சிவனாக நடிப்பவர் சசிந்தர். வம்சம், தென்பாண்டி சிங்கம் தொடர்களில் வில்லனாக நடித்தவர். வில்லனாக நடித்த காலங்களில் எல்லா வீடுகளிலும் தன்னை திட்டினார்களாம். நெருங்கிய நண்பர்கள் வீடுகளிலும் அதுதான் நடந்ததாம். இப்பொழுது சிவனாக நடிக்கும்போது, எல்லோரும் பக்தியாக பார்க்கிறார்களாம். இனி யாருடைய வீட்டுக்கு போனாலும் அடிக்க வராமல், கையெடுத்து கும்பிடுவார்கள் என்கிறார் மகிழ்ச்சியுடன்.



ஸ்ரீ திவ்யா

# வண்ணத் திரை

## சந்தானத்தின் கோட் பாதர் சிம்புவாம்!

சந்தானம் ஹீரோவாக நடித்துள்ள சக்க போடு போடு ராஜா படத்தை தயாரித்துள்ளவர் நகைச்சுவை நடிகர் வி.டி.வி.கணேஷ். இதன் இசை வெளியீடு கடந்த வாரம் நடந்தது. இதில் பேசிய சந்தானம், தனது கோட்பாதர் சிம்புதான் என கூறியுள்ளார். இதில் பேசும்போது "நானும் ஆர்யாவும் நல்ல நண்பர்கள். சினிமாவில் நடிப்பது அவருக்கு டைம்பாஸ் மாதிரி. ஜிம்,சைக்கிளிங் மூலம் உடம்பை கட்டுக்கோப்பாக வைத்திருப்பதில்தான் நேரத்தை செலவிடுகிறார். இதற்கு செலவிடும் நேரத்தை நடிக்க செலவிட்டால் பாலிவுட் வரை போயிருப்பார். நான் கேட்டதால்தான் இந்த படத்திற்கு சிம்பு இசையமைத்தார். யாரும் அவரைப்பற்றி எதுவும் சொல்லட்டும். அவர்தான் எனக்கு கோட்பாதர்" என்றார்.

## ஓவர் நைட் நாயகிக்கு லவ்வர் இருக்கிறாராம்!

கன்னடத்தில் ஊரசியா (தமிழில் எனக்குள் ஒருவன்) மூலம் ஓவர்நைட்டில் தென்னிந்தியாவின் முன்னணி ஹீரோயின் பட்டியலுக்கு வந்தவர் ஸ்ருதி ஹரிஹரன். நிறைய கன்னடப்படங்களில் நடித்தபின், லட்சுமி ராமகிருஷ்ணன் இயக்கிய நெருங்கி வா முத்தமிடாதே படத்தின் மூலம் கவனத்தை ஈர்த்து, அண்மையில் வெளியான சோலோ மூலம் நன்கு பேசப்படுகிறார். எந்த வேடமாக இருந்தாலும், அதை ஏற்க தயாராக இருப்பதாக கூறியுள்ளார். "நிபுணன் படத்தில் அர்ஜுன் மனைவியாக ஏன் நடித்தேன் என கேட்கிறார்கள். கன்னடத்தில் இப்படி யாரும் கேட்கமாட்டார்கள். எந்த பாத்திரமாக இருந்தாலும் நடிக்க வேண்டும். நல்ல கதையிருந்தால் குறும்படத்தில் கூட நடிக்க தயாராக இருக்கிறேன். நடன இயக்குனரை காதலிக்கிறீர்களா என புதிதாக கேட்கிறார்கள். நான் சினிமாவிற்கு வருவதற்கு முன்பிருந்தே அவரை காதலிக்கிறேன்" என கூறியுள்ளார்.

## மேக்கப் இல்லாத ஸ்ருதியை கண்டால் பயம்!

பிரபல கன்னட நடிகர் துருவா சார்ஜாவுடன் ஸ்ருதி ஹாசன் நடிப்பதாக ஒரு தகவல் வெளியானது. ஆனால் அதை ஸ்ருதி மறுத்து டுவிட்டரில் பதிவிட்டார். இதனால் மற்றொரு கன்னட நடிகர் ஜக்கேஷ் ஆத்திரமடைந்து ஸ்ருதியை தாறுமாறாக விமர்சித்துள்ளார். "கர்நாடகாவில் நிறைய அழகான இளம்பெண்கள் உள்ளனர். பிறகு ஏன் கன்னட தயாரிப்பாளர்கள் ஸ்ருதி வீட்டுவாசலில் நின்று பிச்சை எடுக்கிறார்கள். இந்த தயாரிப்பாளர்கள் திருந்தமாட்டார்கள். ஸ்ருதியை விட அழகானவர்கள் கர்நாடகா கல்லூரி மாணவிகள். ஸ்ருதியை மேக்அப் இல்லாமல் பார்த்து அனைவரும் தெறித்து ஓடுவார்கள்" என கொட்டி தீர்த்துள்ளார். கன்னடப்படத்தில் நடிக்கவில்லையென விளக்கம் கொடுத்தது ஒரு தப்பா என ஸ்ருதி நொந்து போயிருக்கிறாராம்.

## நான் தமன்னா இல்லை

தெலுங்கில் ஹிட்டடித்த படம் அர்ஜுன் ரெட்டி. இதில் நாயகி ஷாலினி பாண்டே. தற்போது தமிழ், தெலுங்கில் தயாராகும் மகாநதி உள்ளிட்ட மூன்று தெலுங்கு படங்களில் நடிக்கிறார். அதுதவிர 100% லவ் படத்தின் தமிழ் ரீமேக்கான 100% காதல் படத்தில் ஜி.வி.பிரகாசுக்கு ஜோடியாக நடிக்கிறார். 100% லவ் தெலுங்கு படத்தில் நாகசைதன்யா தமன்னா நடித்திருந்தனர். தமன்னா நடித்த வேடத்தில் நடித்தாலும், தமன்னாவை போல நடிக்க மாட்டேன். எனக்கென தனி பாணியில் நடிப்பேன் என கூறியுள்ளார் ஷாலினி. பாண்டே. தமிழ், தெலுங்கில் விரைவாக வளர்ந்து வரும் ஷாலினி விரைவில் இன்னொரு தமன்னாவாகுவார் என்கிறார்கள்.

## சல்மானிற்கு கதையில்லையாம்

பாலிவுட்டின் பிரபல இயக்குனர் ரோகித் ஷெட்டியின் இயக்கத்தில் சல்மான் கான் நடிக்கப்போகிறார் என்ற செய்தி வெளியாகியிருந்தது. அதை ரோகித் ஷெட்டி மறுத்துள்ளார். "தற்போதுதான் கோல்மால் அகைன் படப்பிடிப்பை முடித்துவிட்டு, புரமோஷன் வேலைகளில் பிஸியாக உள்ளேன். சல்மானை இயக்கப் போவதாக வெளியான செய்திகளை பார்த்தேன்! ஷாருக்கானை வைத்து சென்னை எக்ஸ்பிரஸ் இயக்கியதை போல, சல்மானையும் வைத்து ஒரு படம் இயக்க ஆசைதான்.. தற்போதைய நிலையில் சல்மானை இயக்க என்னிடம் கதையில்லை என்பதே உண்மை" என வெளிப்படையாக பேசியுள்ளார்.



ஹன்சிகா

## எல்லோருடனும் மோதும் விஷால்

தயாரிப்பாளர் சங்க தலைவராக உள்ள விஷால், தியேட்டர் உரிமையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென சில விதிமுறைகளை அண்மையில் அறிவித்தார். பார்க்கிங் கட்டணம் வசூலிக்க கூடாது, அம்மா தண்ணீர் விற்க வேண்டும், உணவு விலை என அவர் அறிவித்த திட்டங்களிற்கு தியேட்டர் உரிமையாளர்கள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். தியேட்டர் உரிமையாளர்களின் ஆலோசனை கூட்டத்தின் பின் பேசிய அபிராமி ராமநாதன் "விஷால் எங்களிற்கு கட்டளையிட முடியாது. தயாரிப்பாளர்களிற்கு என்று ஒரு சங்கம் உள்ளது. எமக்கென்றும் சங்கம் உள்ளது. அவர்கள் இன்றி நாங்கள் இல்லை, நாங்கள் இன்றி அவர்கள் இல்லை. இருவரும் பேசி தீர்க்க வேண்டிய விடயத்தை, விஷால் அறிக்கையாக விட்டுள்ளார். எங்கள் சங்கத்துடன் பேசி, சங்க முடிவின்படியே செயற்படுவோம்" என அறிவித்துள்ளார்.

## ஒன்றாக இணையும் சினேகனும், ஓவியாவும்

பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் பிரபலமானவர்கள் சினேகன், ஓவியா. இந்த நிகழ்ச்சி மூலம் ஓவியாவிற்கு பெருமளவான ரசிகர்கள் கிடைத்தார்கள். அடுத்தடுத்து திரைவாய்ப்புக்களும், விளம்பரங்களும் கிடைத்து வருகின்றன. ராகவா லாரன்சுடன் காஞ்சனா 3 இல் தற்போது நடித்து வருகிறார். தற்போது இசையமைப்பாளர் எஸ்.சத்யா படமொன்றை தயாரிக்க முடிவுசெய்துள்ளார். இதில் சினேகனையும், ஓவியாவையும் நடிக்க வைக்க போகிறாராம். இந்த படத்தை இயக்குவது யார், படத்தின் பெயர், மற்றைய நடிகர்கள் பற்றிய விபரம் விரைவில் வெளியாகுமாம்.

## இருட்டு அறையில் முரட்டு குத்து இல்லையாம்!

ஹரஹர மகாதேவி என்ற அடல்ட் காமெடி படத்தின் மூலம் ரசிகர்களை தன்பக்கம் திரும்ப வைத்திருக்கிறார் அறிமுக இயக்குனர் சன்தோஷ். ஹரஹரமகாதேவி கதையை ஏராளம் ஹீரோக்களிற்கு சொன்னபோதும், யாரும் நடிக்க துணியவில்லையாம். இறுதியில் கவுதம் கார்த்திக் துணிந்து களமிறங்கினாராம். படத்திற்கு நல்ல ரெஸ்பொன்ஸ் கிடைத்த மகிழ்ச்சியில், சன்தோஷ் அடுத்து களமிறங்கியுள்ளது இருட்டு அறையில் முரட்டு குத்து படத்தில். படத்தின் தலைப்பை பார்த்து மிரள்பவர்களை சமாதானமாகுமாறு கேட்கிறார். இது வில்லங்க படம் இல்லையாம். பேய் படமாம். மூன்றாவதாக இயக்கப் போவது வில்லங்க படம் இல்லையாம். கல்லூரி, காதல் கதையாம்.

## வடக்கில் புறக்கணிக்கப்படுகிறதா சமூகவியல் துறை?

# பட்டதாரி ஆட்சேர்ப்பு குழப்பங்கள் எப்பொழுது தீரும்?

ரமணன்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பாறிட்சை (தமிழ்மொழி மூலம்) 2017 (111) க்கு 2017.07.08 ஆம் திகதி விண்ணப்பங்களை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு கோரியிருந்தது.

இவ் விண்ணப்பம் கோரலில் வடக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களிலும் தமிழ், வரலாறு, குடியியல், தகவல் தொழில்நுட்பம், விவசாயம், இரண்டாம்மொழி சிங்களம், வழிகாட்டலும் ஆலோசனையும் பாடங்களுக்கு என மொத்தமாக 349 ஆசிரிய வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டது.

இதில் பாட இலக்கம் 7 வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத்திற்காக கோரப்பட்ட கல்வித் தகுதியில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளது.

வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் உளவியல், சமூகவியல், சமூகப்பணி பாடங்களில் ஏதாவது ஒன்றை பிரதான பாடங்களில் ஒன்றாக கொண்ட பட்டதாரியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது.

விண்ணப்ப முடிவுத்திகதி 04.08.2017 முடிவடைந்த நிலையில் போட்டிப் பாறிட்சையை 30.09.2017 அன்று நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதற்குள் யாழ் பல்கலைகழக உளவியல் மாணவர்கள் வடமாகாண கல்வியமைச்சில் செய்த முறைப்பாட்டையடுத்து, கல்வி அமைச்சின் செயலாளர் தலையிட்டதையடுத்து போட்டிப்பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

உளவியல் மாணவர்களின் அறிக்கையில் குறித்த வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத்திற்கு கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தில் தமது பாடம் மாத்திரமே கோரப்பட்டுள்ளது. இதுவரை தமது பாடம் மாத்திரமே கோரப்பட்டு வந்தது என்ற கருத்தையும் தெரிவித்துள்ளனர்.

### பாட வகுதிகளும் அவற்றிற்கான அடிப்படைக் கல்வித் தகைமைகளும்

| பாட இலக்கம் | பாட வகுதி | தேவையான கல்வித் தகைமைகள் |
|---|---|---|
| I | தமிழ் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ் பாடத்தை பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட கலைப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| II | வரலாறு | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில வரலாறு பாடத்தை பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட கலைப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில தொல்லியல் பாடத்தை பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட கலைப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| III | குடியியல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில அரசியல் விஞ்ஞான பாடத்தைப் பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட கலைப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| IV | தகவல் தொழில்நுட்பம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம் என்பவற்றுள் ஏதாவது ஒன்றை பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| V | விவசாயம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாய பாடத்தை பிரதான பாடம் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட விஞ்ஞானமாணி பட்டதாரியாக இருந்தல் வேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானமாணி (சூழலியல் விஞ்ஞானம்) பட்டத்தினை நிறைவு செய்த பட்டதாரியாக இருந்தல் வேண்டும். |
| VI | இரண்டாம் மொழி சிங்களம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிங்களப் பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டதாரியாக இருத்தல் வேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மொழியியல் (Linguistics) பாடத்தை கற்ற கலைமாணி (மொழியியல் சிறப்பு) பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| VII | வழிகாட்டலும் ஆலோசனையும் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உளவியல் பாடத்தினை பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட பட்டதாரியாக இருத்தல் வேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் உளவியல் பாடத்தினை ஒரு பாடமாகக் கொண்ட சமூகப் பணி (Social Work) பட்டதாரியாக இருத்தல் வேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சமூகவியல் பாடத்தினை பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட கலைப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 10 | சிங்களம் | உடற்கல்வி | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட உடற்கல்வி பாடத்தினை கொண்ட விசேட பட்டம் அல்லது உடற்கல்வி பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் |
| 11 | தமிழ் | வரலாறும் குடியுரிமைக் கல்வியும் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட வரலாறு / அரசியல் விஞ்ஞானம் / புவியியல் / சமூகவியல் பாடங்களில் ஒன்றைக்கொண்ட விசேட பட்டம் அல்லது மேற்குறிப்பிட்ட பாடங்களில் ஒன்றை பிரதான பாடமாக கொண்ட பட்டம் |
| 12 | தமிழ் | இரண்டாம் மொழி (சிங்களம்) | முன்னுரிமை பின்வருமாறு அமைந்திருக்கும் i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சிங்கள மொழியை பிரதான பாடமாக கொண்ட பட்டம் (தமிழ் மொழி மூலமான பட்டதாரியாக இருத்தல் வேண்டும்) அல்லது ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சிங்கள மொழி மூலமாக பெற்றுக்கொண்ட பட்டம் (தமிழ் மொழி மூலமான பட்டதாரியாக இருத்தல் வேண்டும்) அல்லது iii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட கலைமாணிப் பட்டத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்தில் திறமைச் சித்தியை அல்லது அதற்கு மேலான சித்தியை பெற்றிருத்தல் (தமிழ் மொழி மூலமான பட்டதாரியாக இருத்தல் வேண்டும்) |
| 13 | தமிழ் | தமிழ்மொழி | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட தமிழ்மொழி பாடத்தினை கொண்ட விசேட பட்டம் அல்லது |

2016 ஆம் ஆண்டு ஆசிரியர்சேவை விண்ணப்பத்தில் வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத்திற்கு உளவியல் பாடமும் மாத்திரமே கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு 2017 விண்ணப்பம் கோரலில் வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத்திற்கு உளவியல் பாடத்துடன் சமூகவியல், சமூகப்பணி பாடங்களையும் கோரியுள்ளது. இதன் பின்னணியில் யாழ் பல்கலைக்கழக சமூகவியல் துறை செயற்பட்டிருப்பது தெரியவருகின்றது.

சமூகவியல்துறையின் அறிக்கையில் வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத்திற்கும் சமூகவியல் பாடத்திற்கும் இடையிலான நெருக்கமான தொடர்புகள் விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் கிழக்கு மாகாணசபையில் வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத்திற்கு சமூகவியலும் ஒரு பாடமாக கோரப்பட்டமையை தமக்கு ஆதாரமாக காட்டியுள்ளனர். பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனையும் சேவைப் பிராமணக் குறிப்பில் சிரேஷ்ட மாணவ ஆலோசனை பதவிக்கு மாத்திரமே உளவியல் பாடம் கேட்கப்பட்டுள்ளது. ஆரம்ப மற்றும் இடைநிலை ஆலோசனை வகுப்புகளுக்கு உளவியல் குறிப்பிடப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி உள்ளனர்.

இதன் அடிப்படையில் 2017 விண்ணப்பம் கோரலில் சமூகவியல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உளவியல் மாணவர்களின் முறைப்பாட்டை தொடர்ந்து வடக்கு மாகாகண கல்வி அமைச்சு குழம்பி போயுள்ளது. பாறிட்சையை ஒத்தி வைத்துள்ளது. வழிகாட்டலும் ஆலோசனையும் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய உளவியல் பாடத்தை மாத்திரம் உள்ளடக்கி விண்ணப்பம் கோரலில் மாற்றங்கள் கொண்டுவரப்பட உள்ளதாக நம்பகமான தரப்பில் இருந்து அறிய முடிகின்றது.

இந்த நிலையில் சமூகவியல பட்டதாரி மாணவர்கள், பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்குவதற்கு தாம் மிகவும் பொருத்தமான பட்டதாரிகள் எனவும் குடும்பம், வறுமை, வருமானம், பெற்றோரின் தொழில் போன்ற சமூகக் காரணிகளே மாணவர்களின் உளப்பாங்கையும் கல்வியையும் தீர்மானிக்கின்றன. இங்கு மாணவர்களின் ஆளுமைக் குறைவிற்கும் கல்விப்பின்னடைவிற்குமான காரணிகளை சமூகவியல் பட்டதாரிகளால் சிறப்பாக பகுப்பாய்வு செய்ய முடியும் எனவும் ஆதலால் வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத்திற்கு சமூகவியல் பட்டதாரிகள் மிகவும் பொருத்தமானவர்கள் என தெரிவிக்கின்றனர்.

பல சமூகவியல் மற்றும் பொருளியல் பட்டதாரிகள், வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியல் சேவையில் தற்போது பணியாற்றி வருகின்றனர் என்றும் இது எவ்வாறு சாத்தியமாகியது என்றும் கேள்வி எழுப்புகின்றனர்.

அத்துடன் சென்ற தடவை 74 வழிகாட்டலும் ஆலோசனை ஆசிரியர் வெற்றிடங்களுக்கு உளவியல் பட்ட

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

### சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன்

நிபுணத்துவ ஆலோசகர்

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி

இன்று வழிகாட்டலும் ஆலோசனையும் தனித்துறையாக வளர்ச்சி பெற்றுள்ளது. வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் கட்டாயம் உளவியலும் அதனுடன் சமூகவியலும் தேவையாகின்றது. பல்கலைக்கழகங்களில் தனித்தனித் துறைகளாக கற்பிக்கப்படும் உளவளத்துணை, உளவியல், சமூகவியல் ஆகிய கற்கைத்துறைகள் இணைந்த வகையிலேயே பாடசலைகளில் கற்பிக்கப்படும் வழிகாட்டலும் ஆலோசனையும் கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனால் சமூகவியல் மற்றும் உளவியல், உளவளத்துணை பட்டதாரிகள் அனைவருக்கும் சந்தர்ப்பங்களை கொடுப்பது பொருத்தமானது. கிழக்கு மாகாணத்தில் கலைப்பட்டதாரிகள் அனைவருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்ட சித்திபெற்ற பட்டதாரிகளுக்கு பயிற்சியின் பின்னர் நியமனம் வழங்கப்பட்டமையை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். எமது படித்த இளைஞர் யுவதிகள் அனைவருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கும் வகையில் மாகாணசபையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.



ரமணன் llb



# வங்கியினால் நிறைவேற்றப்படும் பராட்டே

வங்கியினால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்காக வங்கிகள் ஈடாகப் பெற்றுக்கொள்ளும் பிணைகளை குறித்த கடன்கள் மீளச் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் வங்கிகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்து அதன் மூலம் தமது பணத்தினை அறவிட்டுக் கொள்கின்றன. அவ்வாறு வங்கிகளால் மேற்;கொள்ளப்படும் செயற்பாடு பராட்டே நிறைவேற்றம் எனப்படும். அதாவது பராட்டே என்பது நீதிமன்றக் கட்டளை இன்றிப் பிணையாக வைக்கப்பட்ட ஒரு சொத்தினை ஏல விற்பனை செய்யும் அதிகாரத்தினை வங்கிகளுக்கு வழங்குதல் ஆகும். ஆரம்பத்தில் பராட்டே நிறைவேற்றம் உரோமன் டச்சுச் சட்டத்தில் அங்கீகரிக்கப்படவில்லை என Hongkong & Shanghai Bank Vs Krishnapillai என்ற வழக்கில் நீதிமன்றம் கூறியது.

பின்னர் ஒரு சில வங்கிகளுக்கே இந்த அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. தற்போது இலங்கையில் வங்கிகளால் கடன் அறவிடல் (சிறப்பு ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டம் இலக்கம் 4, 1990ம் ஆண்டு இலக்கம் 24, 1995 இனால் திருத்தப்பட்டவாறு இன் கீழ் இந்த அதிகாரம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அனைவற்றுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இங்கு ஈடுவைக்கப்பட்ட சொத்தினைப் பொறுப்பேற்றல், நிர்வகித்தல், விற்பனை நடைமுறையாவையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் வங்கிகள் பிணைகளுக்கு எதிராக வழங்கப்பட்ட கடன்களினை அறவிட முடியாமல் போகும் பொழுது பராட்டே நிறைவேற்றத்தினை மேற்கொண்டன. இருப்பினும் கடன் அறவிடல் (சிறப்பு ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டம் இலக்கம் 4, 1990ல் 2011ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 1ம் மற்றும் 19ம் திருத்தத்தினைத் தொடர்ந்து ரூபா கடனுக்கான வட்டி மற்றும் கடன் நிலுவையின் தொகை ஐந்து மில்லியனுக்கு குறைவாக உள்ள கடன்களுக்கு பராட்டே நிறைவேற்றம் என்பது இல்லாது செய்யப்பட்டது.

வங்கியானது பராட்டே நிறைவேற்றம் ஒன்றினை மேற்;கொள்வதற்கு பின்வரும் படிமுறையினைப் பின்பற்றல் வேண்டும். குறித்த சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதனை அதிகாரமளித்து இயக்குனர் சபையில் தீர்மானம் (Resolution) மேற்கொள்ள வேண்டும். குறித்த தீர்மானம் (Notice of resolution) அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவதுடன் தமிழ் சிங்கள ஆங்கில மொழிகளிலாலான பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படல் வேண்டும். அது மட்டுமல்லாமல் குறித்த Notice of resolution அனுப்பப்படும் போது கடன்பட்டவரிற்கு அனுப்பபட்டதாகக் கொள்ளப்படும். அவ்வாறு கடன் பட்டவர் ஒரு முகவரியைப் பதிவு செய்திருக்காதபோது அரச வர்த்தமானியிலும் தமிழ் சிங்கள ஆங்கில மொழிகளிலாலான பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதினம் கடன்பட்டவரிற்கு அறிவித்தல் அனுப்பப்பட்ட தினமாகக் கொள்ளப்படும். குறித்த அறிவித்தலில் பகிரங்க ஏலம் நடைபெறுகின்ற இடம், காலம் என்பனவும் தெரியப்படுத்தப்படல் வேண்டும்.

இதன் பின்னர் வங்கி குறித்த ஏலத்திற்குரிய Upset price ஐ தீர்மானிக்கும். Upset price என்பது மொத்தமாகச் செலுத்த வேண்டிய கடனின் பெறுமதி மொத்தமாகச் செலுத்த வேண்டிய வட்டியின் பெறுமதி மற்றும் வங்கிக்கு ஏற்பட்ட செலவுகள் என்பனவற்றை உள்ளடக்கும். வங்கி எந்த சந்தர்ப்பத்திலும் Upset price குறைவாக குறித்த ஆதனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய முடியாது. அதாவது வங்கி ஆகக் குறைந்த பட்சம் Upset price தான் விற்பனை செய்ய முடியும் மாறாக Upset price கூடுதலாக விற்பனை செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் வங்கி தனக்குத் தானே விற்பனைச் சான்றிதழை (Certificate of Sale) வழங்கும்.

Upset price கூடுதலான தொகைக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யும் போது கொள்வனவு செய்பவரிற்கு குறித்த விற்பனைச் சான்றிதழை (Certificate of Sale) வங்கி வழங்கும். இச் சான்றிதழே குறித்த விற்பனை தொடர்பான முழுமையான ஆதாரமாகக் காணப்படும். மேலும் பகிரங்க ஏலத்தில் Upset price கு கூடுதலான தொகைக்கு குறித்த ஆதனம் வங்கியால் விற்;கப்படும் போது மிகுதிப்பணம் கடன்பட்டவரிற்கு அல்லது அவர் இல்லாதபோது அவரின் வாரிசுகளுக்கு வழங்கப்படுதல் வேண்டும். வங்கி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய முடியாமல் தனக்குத்தானே விற்பனைச் சான்றிதழை (Certificate of Sale) வழங்கியிருக்கும் பட்சத்தில் வங்கி எச் சந்தர்ப்பத்திலும் குறித்த ஆதனத்தை மீள் விற்பனை செய்ய முடியும். இவ்வாறு வங்கி மீள விற்பனை செய்வதற்கு முன்னர் கடன்பட்டவர் அல்லது அவரின் வாரிசு உரித்தாளர் முழுத் தொகையினையும் செலுத்துவதன் மூலம் ஆதனத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியும். இது கடன்பட்டவரின் உரிமையாகும்.

இவ் பராட்டே தொடர்பில் மூன்றாம் நபருக்குச் சொந்தமான சொத்துக்களை ஈடுவைத்து கடன்களைப் பெற்றுக் கொள்ளும் போது அக் கடன்கள் செலுத்தப்படாத போது பிணையாக வைக்கப்பட்ட சொத்துக்களை பராட்டே நிறைவேற்றல் மூலம் ஏலத்தில் விற்பனை செய்ய முடியுமா என்ற பிரச்சனை எழுந்தது. Chellaiah Rammachandran Vs Hatton National Bank என்ற வழக்கில் மூன்றாம் நபருக்குச் சொந்தமான சொத்துக்களை ஈடுவைத்து கடன்களைப் பெற்றுக்கொள்ளும் போது அக் கடன்கள் செலுத்தப்படாத போது பிணையாக வைக்கப்பட்ட சொத்துக்களை பராட்டே நிறைவேற்றல் மூலம் ஏலத்தில் விற்பனை செய்ய முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இருப்பினும் இத்தீர்ப்பினைத் தொடர்ந்து மூன்றாம் நபருக்குச் சொந்தமான சொத்துக்களை ஈடுவைத்து கடன்களைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்கள் வேண்டுமென்றே கடனை மீளச் செலுத்ததாது போகத் தொடங்கினர். திரைமறைவில் இடம்பெறும் இவ் மோசடியை அவதானித்த நீதிமன்றம் Samanthapala Jeyawardena & two brothers Vs Hatton National Bank என்ற வழக்கில் மூன்றாம் நபருக்குச் சொந்தமான சொத்துக்களை ஈடுவைத்து கடன்களைப் பெற்றுக்கொள்ளும்போது அக் கடன்கள் செலுத்தப்படாதபோது பிணையாக வைக்கப்பட்ட சொத்துக்களை பராட்டே நிறைவேற்றல் மூலம் ஏலத்தில் விற்பனை செய்ய முடியும் எனத் தீர்ப்பளித்தது. ●

---

தாரிகளை மாத்திரம் வடக்கு மாகாணசபை கோரியிருந்தது. இந்த தடவை வழிகாட்டலும் ஆலோலீசனைக்கு 47 வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது. இதன்படி பார்க்கும்போது 27 வெற்றிடங்களே சென்ற தடவை நிரப்பப்பட்டுள்ளது. ஏனைய வெற்றிடங்களுக்கு சென்ற தடவை என்ன நடந்தது? 27 உளவியல் பட்டதாரிகள் மாத்திரம்தான் சித்தி பெற்றனரா? 27 வெற்றிடத்திற்கு மாத்திரமா நிதி ஒதுக்கிடப்பட்டது? அல்லது உளவியல் பட்டதாரிகள் வெளி மாவட்டங்களுக்கு பணியாற்ற செயல்லவில்லையா? இத்தகைய நிலைமைகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். குறித்த வெற்றிடத்திற்கு மேலும் பொருத்தமான பட்டதாரி பாடங்களை கோரும் போது இந்த நிலைமையை தவிர்க்க கூடியதாக இருக்கும்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆசிரியர் சேவைக்கான விண்ணப்பம் கோரலில் வெற்றிட பாடங்களுக்கான பொருத்தமான பாட பட்டதாரிகள் தெரிவில் குறித்த வழிகாட்டலும் ஆலோசனையும் தவிர ஏனைய பாடங்களிலும் இத்தகைய பிரச்சினைகள் உள்ளது.

குறிப்பாக வடமேல் மாகாணத்தில் 2017 இல் ஆசிரியர் சேவைக்கு குடியியல் பாடத்திற்கு சமூகவியல், அரசியல் விஞ்ஞானம், புவியியல், தொடர்பாடல் கற்கை, வரலாறு, பொருளியல் ஆகிய பட்டதாரிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு மாகாணத்தில் அரசியல் விஞ்ஞானம் மாத்திரமே கோரப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இந்த வருடம் கோரப்பட்ட ஆசிரியர் விண்ணப்பத்தில் வழிகாட்டலும் ஆலோசனையும் பாடத்திற்கு சமூகவியல், தத்துவம், உளவியல் போன்ற பாடங்கள் கோரப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு மாகாணத்தில் உளவியலா சமூகவியலா பிரச்சினை போய் கொண்டிருக்கின்றது.

அத்துடன் இது ஒரு போட்டிப்பாறிட்சை. வழிகாட்டலும் ஆலோசனை பாடத்துடன் சம்பந்தப்பட்ட பட்டதாரிகள் அனைவருக்கும் போட்டிப்பாறிட்சையை எதிர்கொள்வதில் சந்தர்ப்பம் கொடுப்பது என்பது எந்தவித பாரபட்சங்களையும் ஏற்படுத்தாது. சமத்துவத்தையே ஏற்படுத்துகின்றது.

போட்டி பாறிட்சைக்கு விண்ணப்பித்த அனைத்து பட்டதாரிகளும் பாறிட்சையை எதிர்பார்த்து காத்திருக்கும் நிலையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு குறித்த விடயம் தொடர்பாக குழம்பியிருப்பது ஆரோக்கியமானதல்ல. காலம் தாழ்த்துவதும் பொருத்தமானதல்ல. குறித்த பிரீட்சைக்கு கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதிக்கு மாத்திரமே காத்திருப்பதாக பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது வடக்கு மாகாணசபை அனுபவம் குறைந்த இளைய சபை. இந்த நிலையில் இத்தகைய சில குழப்பான நிலைமைகளில் வயதில் மூத்த ஏனைய மாகாணசபைகளின் நடைமுறைகளை கவனத்தில் கொள்ளலாம். துறைசார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகளை பெற்று செயற்பட வேண்டும். இதன் மூலம் வீண் கால தாமதத்தையும் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு விரைவான தீர்வுகளையும் பெற்றுக் கொடுக்க முடியும். ●

குரு.நக்கீரன்
உளவள ஆலோசகர்






# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



**ஆன் துஷ்யந்தி (வயது 26)**
**பண்டத்தரிப்பு**

***கேள்வி:*** *ஒரு மாதத்தின் முன் எனக்கு நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது. வரும் தை மாதம் திருமணம். அண்மையில்தான் எனது நெருங்கிய நண்பியொருவர் ஒரு விடயத்தை அவரது நண்பியொருவர் சொன்னதாக சொன்னார். எனது கணவரும் அவரும் ஒரு சில மாதங்கள் நெருக்கமாக பழகினார்களாம். இருவரும் காதலிக்கவில்லையாம். ஆனால் ஒன்றாக கடைகளிற்கெல்லாம் சென்றுள்ளனர். நான் இந்த விடயத்தை அவருடன் பேசவில்லை. இந்த திருமணத்தை செய்வதா? எனக்கு அவர் பொருத்தமானவரா? பின்னாளில் பிரச்சினைகள் வராதா?*

**பதில்:** அன்புச் சகோதரியே! ஒரு மாதத்தின் முன் நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது. தை மாதம் திருமணம் என்று நாள் குறித்தாயிற்று. இப்போது புதுப் பிரச்சினை! எனக்கு கணவனாகப் போகிறவர் இன்னொருத்தியுடன் நெருக்கமாகப் பழகியவர். இவரைக் கலியாணம் செய்வதா? விடுவதா? பின்னாளில் பிரச்சினைகள் வருமா? உமது வாழ்க்கைக்கான சுயவிழிப்பணர்வுகண்டு மகிழ்ச்சியடைகிறேன். உண்மையில் வாழ்க்கைத் திறனில் இதை ஆராய்ந்தறிதல் என்பார்கள். நல்லது, ஆறதலாக சிந்தித்து ஆக்கபூர்வமாக முடிவெடுக்க வேண்டிய நேரம் இது.

உங்களுக்கு கணவனாகப் போகிறவர் முன்னர் எப்படி இருந்தார் என்பதைவிட, இனி எப்படி இருக்கப் போகிறார் என்பதுதான் முக்கியமானது. உங்கள் திருமண வாழ்வில் இவ்வளவு விழிப்புணர்வாக உள்ள நீங்கள், நிச்சயதார்த்தத்திற்கு முன்னர் உங்களுக்கு கணவனாகவரப்போகிறவரைப்பற்றி விசாரித்து அறியவில்லையா? அப்படி விசாரிக்கும்போது உங்களுக்கு இப்படியான தகவல்கள் ஏதாவது கிடைக்கவில்லையா? எமது யாழ்ப்பாண சமூக அமைப்பில் பொறாமைகளின் வெளிப்பாடாக இப்படியான திருமணங்களை இவ்வாறான கட்டுக்கதைகளை கூறி குழப்பிய வரலாறு அதிகமுண்டு.

இருந்தாலும் பரவாயில்லை, எதற்கும் உங்களுக்கு கிடைத்த தகவலின் உண்மைத்தன்மை பற்றி இன்னும் கொஞ்சம் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அப்படி உண்மையான தகவல்தானெனின் அதைப்பற்றி தெரிந்து கொண்டதுபோல் உங்கள் கணவனாக வரப்போகிறவருக்கு காட்டிக்கொள்ளாதீர்கள். அவரின் தொடர்பான பெண்ணின் தற்போதைய நிலைப்பாடு என்ன? இவர்கள் இடையிலான நிகழ்கால நிலைப்பாடுகள் பற்றி கூடியளவுஅறிந்து கொள்ளுங்கள். அந்தப் பெண்மணிக்கும் இவருக்கும் தற்போது எதுவித தொடர்பும் இல்லை என்பதை உறுதிப்படுத்தி கொள்ளுங்கள்.

இன்றைய காலகட்டத்தில் திருமணத்திற்கு முன்னர் இவ்வாறான சிலபல சம்பவங்கள் அநேகமான ஆண்பெண் இருவரின் வாழ்விலும் நடந்திருப்பது காலத்தின் நியதிகளில் ஒன்று. உங்களின் மாப்பிள்ளையும் அந்தப் பெண்ணும் சிலவேளைகளில் உண்மையாக அன்னியோன்னியமான நண்பர்களாகக் கூட இருந்திருக்கலாம். கடைத்தெருக்களில் ஒன்றாக திரிந்தார்கள் என்பதால் பிறழ்வான நடத்தைக்கோலம் எனக்கொள்ள முடியாது. சரி, அப்படி நடந்திருந்தால்கூட கடந்துபோன பஸ் என விட்டுவிடுங்கள்.

இப்போது இன்னும் 3 மாதமிருக்கிறது உங்களது திருமணத்திற்கு. உங்கள் வாழ்க்கைத் துணையின் எண்ணங்கள், சிந்தனைகள், ஆர்வங்கள், பலங்கள், பலவீனங்கள், பழக்கவழக்கங்கள் எல்லாவற்றையும் அசைபோடப்போதுமான காலம். மிகக்கவனமாகக் கையாளுங்கள். கணவனின் குடும்பத்தாருடன் அவருக்குள்ள பிணைப்புப்பற்றி ஆராயுங்கள். ஏனெனில் தாய், சகோதரங்களுடன் வாழும் முறையைக்கொண்டு அனேகமாக ஒருவனின் உளவியல், பண்பாட்டு நாடித்துடிப்பை அறியலாம். உங்களின் கண்காணிப்பில் மேற்படி விடயங்கள் ஓகே எனின் அநேகமாக உங்களின் மாப்பிள்ளையும் ஓகே.

ஏதாவது சிக்கல் நிலைமை எனின் தனிப்பட்ட விதமாக ஒரு உளநல ஆலோசகரை சந்தித்து கலந்துரையாடி நல்ல முடிவுக்கு வரலாம். எதற்கும் அதிகம் குழம்ப வேண்டாம். எல்லாம் நன்றாகவே நடக்கும். நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும்.

**எஸ். ஹம்சனன் (வயது 20)**
**கிளிநொச்சி**

**கேள்வி:** **நான் ஒரு பெண்ணை காதலிக்கிறேன். அவளுக்கும் என் மீது விருப்பம் இருப்பதாகவே தெரிகிறது. இப்பொழுது திடீரென ஒரு பிரச்சினை. இன்னுமொருவன் அவளை காதலிப்பதாக நண்பர்கள் கூறுகிறார்கள். நான் அவ்வளவு வசதியானவன் இல்லை. அவளை காதலிப்பவன் வசதியானவன். எனது ஏழ்மையால்தான் அவள் என்னை காதலிக்கவில்லையா? அவள் இல்லாத வாழ்வை என்னால் கற்பனை பண்ணவே முடியவில்லை. படிப்பிலும் கவனம் செலுத்த முடியவில்லை. நான் என்னசெய்வது?**


**பதில்:** அன்பு மகனே "இருபது வயது வரை என் பெற்றோரின் வசம் இருந்தேன். இருபது நிமிடத்திலே நான் உன் வசமாகிவிட்டேன்" இது ஹரிகரனின் ஒரு இனிமையானபாடல் வரிகள். உண்மையில் இருபதுவயதில் ஒரு பெண் மீது காதல் வருவது மிகவும் சாதாரணமானது. ஆனால் அந்தக்காதல் குருட்டுத்தனமாக இருக்ககூடாது. காதல் எனும் உணர்வு மனிதனுக்கே உரியது. அதேபோல அந்தக் காதலின் பல்வேறு பரிமாணங்களையும் அறிந்து, தெரிந்து அதன் வழி முன்னோக்கிச் செல்ல வேண்டியதும் மனிதனுக்கு உரிய பகுத்தறிவுப் பண்பின் வெளிப்பாடாகும். ஒரு தலைப்பட்சமான காதல் சினிமாவிற்குத்தான் பொருந்துமே ஒழிய நிஜமான வாழ்விற்கு அதிலும் இன்றைய காலத்திற்குப் பொருத்தமானதாக அமைவது மிகவும் கடினமானது.

நீர் காதலிக்கும் பெண் உம்மைக் காதலிப்பதாகத் தெரிகிறது என்று கூறியிருக்கிறீர். எதை வைத்து அப்படிக் கூறினீரோ எனக்குப் புரியவில்லை. நீர் விஜயின் திருமலை படம் பார்த்ததுண்டா? அதில் ஜோதிகா, "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று இக்கட்டான ஒரு சூழ்நிலையில் கூறுவார். அதற்கு விஜய் மிகக்கோபத்துடன் "உன் கண்ணில், உன் உடலின் வெளிப்பாடுகளில் எந்த விதமானகாதல் உணர்வும் தெரியவில்லை. காதலை வாயால் சொல்லத் தேவையில்லை கண்களே மிகத்தெளிவாகச் சொல்லும் என்பார். "நீயா பேசியது என் அன்பே"... என ஒரு அழகிய இனிய பாடல் கூட தொடர்ந்து வரும். அது போல உமது காதலி உம்மைக் காதலிக்கிறார் என்பதை எந்த விதமான மொழியை கொண்டு தெரிந்து கொண்டீர்? எத்தனை நண்பர்கள் என்ன கூறினாலும் உம்மீது அந்தப் பெண்ணுக்கு காதல் உள்ளதா? என்பதை அவளின் பார்வை மூலம் தெரியப்படுத்துவாள் என்பதை நீர் முதலில் தெரிந்துகொள்ளும். அப்படி அவளின் பார்வையில் ஓராயிரம் அர்த்தங்கள் தெரிந்தால், கவலையை விடும் காதல் உமக்கே.

ஆனால் சமூகவாழ்வில் மேன்மையாய், பந்தாவாக வாழத்திட்டமிடுபவள் தனக்கு வரப்போகும் கணவன் குணத்தில் உயர்வானவனா என்று பார்ப்பதிலும் பார்க்க பணத்தில் உயர்வானவனா என்றுதான் பார்ப்பாள். உண்மையில் ஒரு நல்ல காதலி கிடைத்தால் அவளுடனே இறுதிவரை வாழ்வதை பற்றித்தான் அநேக காதலர்கள் நினைக்கிறார்கள். ஆனால் ஒரு காதலன் இருக்கும்போதும் அவனைவிட வசதி வாய்ப்பானவன் ஒருவன் நெருங்கிவரும்போது இவனைக் கைவிட்டு அவனைப் பிடிக்கத் தயாராகவே பொதுவாக காதலிகள் இருக்கிறார்கள். மாணிக்க விநாயகம் அழகாகப்பாடுவார் "பொம்பளைங்க காதலைத்தான் நம்பிவிடாதே" என்று. உமது காதலியும் ஒரு சராசரிப் பெண்தானே, சிலவேளைகளில் உம்மீது ஒரு காதல்புயல் மையங் கொண்டிருக்கலாம். அந்தக் "காதல் தாழமுக்கம்" நீர் கூறிய பணக்காரப்பையன் பக்கமும் நிலைகொண்டிருக்கலாம். இது எமது பெண்களுக்குரிய சிறப்பியல்புதானே (விதிவிலக்காக ஆண்களும் இருக்கலாம்).

எது எப்படியாயினும் 'காதல்' என்பது ரஜனியின் பஞ்டயலொக் படி பார்த்தால் 'நான் காதலிக்கிறவளை விட என்னைக் காதலிக்கிறவளை கட்டிக்கிட்டால் வாழ்க்கை நல்லா இருக்கும்' என்பதுதான் உண்மை. உமது தற்போதைய காதலியை மறப்பது என்பது 'கொஞ்சம் கடிமையானதாகத்தான் இருக்கும். இதுவே இரண்டாவது, மூன்றாவது காதலில் நோர்மலாகிவிடும் (இதுதான் இன்றைய நிலை). எனவே காதலுக்கும், காதல் தோல்விக்கும் மருந்து உண்டு. அது தான் 'காலம்'. எல்லாவற்றையும் காலத்தின் கையில் விட்டுவிடும்.

நீர் செய்ய வேண்டியதெல்லாம் 'சரி பார்ப்பம், சரி யோசிப்பம்' என்று உமக்கே அடிக்கடி கூறிக்கொள்ளும். காலவோட்டத்தில் நீரே நினைத்துப் பார்த்து ஆச்சரியப்படுவீர். என்னடா! இவ்வளவு ஒரு அழகான, அன்பான காதலி (மனைவி) எனக்கு கிடைத்துள்ளாளே என்று காதல் தோல்வியில் 'தேவதாஸ்' ஆனது அந்தக்காலம். இது அறிவுயுகம் எதிலும் பிச்சை எடுப்பது அவமானம் காதலில் கூட பிச்சைக்காரனாய் இருக்ககூடாது. அற்ப காதலுக்காக அவளிடம் பிச்சைகேட்பதா? சீ... வள்ளலாக இருப்பதில்தான் பெருமை, உயர்வு. காதலில் கூட புதிய வாழ்வு உமக்கு உண்டு கவலை வேண்டாம். கல்வியில் கவனம் செலுத்தும். கஸ்ரமாக இருந்தால் உளநல ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும். எல்லாம் சரியாகிவிடும்.





எம்.ஜி.ஆர் 100 நெடுந்தொடர் 78

# எடுத்துக்கொண்ட கடமைக்கே முதலிடம்!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** அரசியலில் வெற்றிபெற்றதற்கு அவர் ஒரு சினிமா நடிகர் என்பது மட்டுமே காரணம் அல்ல. அதுதான் காரணம் என்றால் அரசியலில் ஈடுபட்ட நடிகர்கள் எல்லோருமே வெற்றி பெற்றிருக்க வேண்டுமே? அரசியலில் மற்ற நடிகர்களுக்கு கிடைக்காத வெற்றியும் புகழும் எம்.ஜி.ஆருக்கு மட்டுமே கிடைத்ததற்கு காரணம், அவரது அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பு. தாங்க முடியாத துக்கத்தைக்கூட மறைத்துக் கொண்டு அரசியலில் உழைத்தவர் அவர்.

1962ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல். அதற்கு முந்தைய தேர்தலில் முதல் முறையாகப் போட்டியிட்ட திமுக பதினைந்து தொகுதிகளில் வென்றது. எனவே, இந்தத் தேர்தலில் காங்கிரசின் வியூகம் பலமானதாக இருந்தது. காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணாவை எதிர்த்து பஸ் முதலாளி நடேச முதலியார் களமிறக்கப்பட்டார். 1957ம் ஆண்டு தேர்தலில் குளித்தலை தொகுதியில் போட்டியிட்ட கருணாநிதி, இம்முறை தஞ்சாவூர் தொகுதியில் போட்டியிட்டார்.

தமிழகம் முழுவதும் திமுகவை ஆதரித்து இரவு பகல் பார்க்காமல் எம்.ஜி.ஆர் தீவிர பிரசாரம் மேற்கொண்டார். இப்போது இருப்பதைப் போல இரவு பத்து மணிக்குள் பிரசாரத்தை முடிக்க வேண்டும் என்ற தேர்தல் கமிஷன் கட்டுப்பாடு எல்லாம் அப்போது கிடையாது. தேர்தல் நேரங்களில் ஒரு இடத்துக்கு மாலையில் எம்.ஜி.ஆர் பிரசாரத்துக்கு வருவதாக அறிவிக்கப்படும். வழிநெடுக மக்களின் வரவேற்பால் கூட்டத்துக்கு வர தாமதமாகி, அதிகாலையில் எம்.ஜி.ஆர் வந்த நிகழ்ச்சிகள் உண்டு. அதுவரையில் கூட்டம் கலையாமல் இருக்கும்.

> 1962ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் எம்.ஜி.ஆர் போட்டியிடவில்லை. தமிழகம் முழுவதும் திமுகவுக்காக பிரசாரம் செய்தார். அந்தத் தேர்தலில் திமுக 50 இடங்களில் வென்றது. எம்.ஜி.ஆரின் உழைப்பை பாராட்டி அவருக்கு எம்.எல்.சி. பதவி அளித்து மகிழ்ந்தார் பேரறிஞர் அண்ணா!

எம்.ஜி.ஆரின் இரண்டாவது மனைவி சதானந்தவதி காசநோயால் பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்டிருந்தார். அவரது உடல்நிலை மோசமாக இருந்தது. அந்தச் சூழலிலும், திமுகவுக்காக எம்.ஜி.ஆர் பிரசாரம் செய்து கொண்டிருந்தார். குறிப்பாக, தஞ்சாவூர் தொகுதியில் தனது நண்பரான கருணாநிதி அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கடுமையான பிரசாரம் மேற்கொண்டார். ஒரே நாளில் நாற்பதுக்கும் மேற்பட்ட தெரு முனைக் கூட்டங்களில் பேசினார்.

தஞ்சாவூரில் எம்.ஜி.ஆர் வேனில் பிரசாரம் மேற்கொண்ட போது, வயல்களில் வேலை செய்த விவசாயிகள், பெண்கள் அவரைப் பார்த்து ஓடி வந்தனர். அவர்களிடம் எம்.ஜி.ஆர் நலம் விசாரித்து விட்டு, "யாருக்கு ஓட்டுப் போடுவீங்க?" என்று கேட்டதற்கு, "ஐயாவுக்குத்தான் ஓட்டு போடுவோம்" என்று பதிலளித்தனர். எம்.ஜி.ஆர் மகிழ்ச்சியுடன் புறப்பட்டார். செல்லும் வழிகளில் எல்லாம் "ஐயாவுக்குத்தான் எங்கள் ஓட்டு" என்று மக்கள் கூறவே, அவருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

ஏனென்றால், எம்.ஜி.ஆரை கிராமப் புறங்களில் வயதில் சிறியவர்கள் 'தலைவரே' என்றும் 'அண்ணே' என்றும் அழைப்பார்கள். முதியவர்களும் பெண்களும் 'சாமி' எனவும் 'மகராசா' என்றும்தான் அழைப்பார்கள். 'இது என்ன புதிதாக ஐயா என்று அழைக்கிறார்களே?' என்று எம்.ஜி.ஆருக்கு சந்தேகம். மீண்டும் ஒரு இடத்தில் மக்களை சந்தித்தபோது, "ஐயாவுக்கு ஓட்டு" என்று சொன்னவர்களிடம் "யாரை சொல்கிறீர்கள்?" என்று கேட்ட எம்.ஜி.ஆருக்கு அதிர்ச்சி. மக்களால் குறிப்பிடப்பட்ட அந்த 'ஐயா'... பரிசுத்த நாடார்!



தஞ்சாவூர் ரயில் நிலையம் அருகே புதுஆற்றின் கரை ஓரத்திலிருந்து சிறிது தூரம் சென்றால் 'யாகப்பா டாக்கீஸ்' வரும். அந்த தியேட்டரில் எம்.ஜி.ஆர் நடித்த 'மதுரை வீரன்' உட்பட அவரது பல படங்கள் வெளியாகி நூறு நாட்கள் ஓடியுள்ளன. யாகப்ப நாடார் என்ற செல்வந்தரின் பெயரால் அமைந்திருந்தது அந்த திரையரங்கம். இப்போது அந்த தியேட்டர் மூடப்பட்டுவிட்டது. யாகப்ப நாடாரின் மகன்தான் பரிசுத்த நாடார். செல்வாக்கான குடும்பம். அவர்தான் கருணாநிதியை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர். அவரை 'ஐயா' என்று மக்கள் அழைப்பது வழக்கம். அவருக்கு ஆதரவாகத்தான் எம்.ஜி.ஆர் ஓட்டு கேட்க வந்துள்ளார் என்று கிராம மக்கள் நினைத்தனர்.

சுதாரித்துக் கொண்ட எம்.ஜி.ஆர், அதன்பிறகு வழியில் மக்களை சந்திக்கும் போது, "நான் திமுக வேட்பாளர் கருணாநிதிக்கு ஓட்டு கேட்டு வந்திருக்கிறேன். நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் ஓட்டு போட வேண்டும்" என்று வலியுறுத்திக் கூறினார். கடும் போட்டியில் அந்தத் தேர்தலில் கருணாநிதி வெற்றி பெற்றார். இந்த வெற்றிக்கு எம்.ஜி.ஆரின் தீவிர பிரசாரம் முக்கிய காரணமாக இருந்தது என்று சொன்னால் மிகையல்ல. ஏனெனில், அந்தக் காலகட்டத்தில் தஞ்சாவூரில் காங்கிரஸுக்கு, குறிப்பாக பரிசுத்த நாடாருக்கு இருந்த செல்வாக்கு அப்படிப்பட்டது.

தஞ்சாவூரில் தேர்தல் பிரசாரத்தின் போது வேனில் எம்.ஜி.ஆர் சென்று கொண்டிருந்தார். அவரது வேனைத் தொடர்ந்து பின்னாலேயே வேகமாக வந்து கொண்டிருந்தது ஒரு கார். அரசியல் விரோதிகள் தாக்க வருகிறார்களோ என்று எம்.ஜி.ஆருடன் இருந்தவர்களுக்கு சந்தேகம். இருந்தாலும் "என்னதான் நடக்கிறது பார்ப்போம். காரை நிறுத்து" என்று டிரைவரிடம் எம்.ஜி.ஆர் கூறினார்.

எந்த நிலைமை வந்தாலும் சந்திக்க எம்.ஜி.ஆரும் உடனிருந்தவர்களும் தயாரானபோது, பின்னால் வேகமாக வந்து நின்ற காரிலிருந்து இறங்கியவர் நடிகர் கே.கண்ணன்! பதற்றத்துடன் இறங்கிய அவர் இடி போன்ற செய்தியை சொன்னார். சென்னையில் எம்.ஜி.ஆரின் மனைவி சதானந்தவதி இறந்துவிட்டார் என்ற செய்திதான் அது. கண்கலங்கிய எம்.ஜி.ஆரிடம் இருந்து சில நிமிடங்கள் பேச்சேஇல்லை. அப்படியே உடைந்துபோய் உட்கார்ந்துவிட்டார்.

தயங்கியபடியே அவரிடம், "சென்னைக்கு திரும்பலாம்" என்று சொன்ன உதவியாளர்களிடம், "இல்லை. இன்று இரவு பிரசார பொதுக்கூட்டம் இருக்கிறது. நான் போகவில்லை என்றால் கட்சியினரும் மக்களும் ஏமாந்துவிடுவார்கள். பொதுக் கூட்டம் முடிந்தபின் அப்படியே கிளம்பிவிடலாம்" என்று எம்.ஜி.ஆர் கூறினார். அதன்படியே இரவில் கூட்டத்தில் பேசி விட்டு பதினொரு மணிக்கு மேல் சென்னை புறப்பட்டார். கூட்டத்தில் பேசி முடிக்கும்வரை தனது மனைவி இறந்த விஷயம் யாருக்கும் தெரியாமல் பார்த்துக் கொண்டார் எம்.ஜி.ஆர்!

பொது வாழ்க்கை என்று வந்து விட்ட பிறகு... குடும்பம், உறவு, பிரிவுகளைவிட, எடுத்துக் கொண்ட கடமைக்கே முதலிடம் என்பதை, இதைவிடத் தெளிவாக எப்படி ஒரு தலைவர் உலகத்துக்குக் காட்ட முடியும்?

தொடரும்...

## சிந்தனைதுளிகள்

மனம் விட்டு பேசுங்கள் அன்பு பெருகும்
- அன்னை தெரேசா

நச்சரிக்கும் வீட்டு வேலைகளிலிருந்து பெண்கள் விடுதலை பெறாமல் மனித குல விடுதலை இல்லை
- லெனின்

## அறிஞர்களின் வாழ்விலிருந்து...

ஒரு சமயம் 'மார்க் ட்னவன்" ஐந்தாயிரம் போர்கள் அடங்கிய கூட்டத்தில் மாலை ஏழு மணிக்கு பேசுவதாக இருந்தது. ஆனால் அவர் செல்லவில்லை. அன்றும் அந்தக் கூட்டத்தில் மறுநாள் மாலை ஏழு மணிக்கு பேசுவதாக அறிவித்தார்கள். மறுநாளே சரியாக ஏழு மணிக்கு அவர் மேடைக்கு வந்தார். ஆனால் அங்கு வெறும் ஐந்நூறு பேர் மாத்திரமே இருந்தனர். அவர்களும் மார்க் தம்மை இரு நாட்கள் ஏமாற்றிய கோபத்துடன் வந்திருந்தனர். ஆனால் மார்க் பேச ஆரம்பித்தார். அவர் மிக அமைதியாக நேற்றும் அதன் முன் தினமும் எனக்கு எந்த வேலையுமில்லை. ஆனாலும் நான் வரவில்லை. ஏனெனில் அந்த ஐயாயிரம் பேருள்ள கூட்டத்தில் எனக்கு பேச மனமில்லை. உங்கள் ஐந்நூறு பேரிடமே பேச வேண்டும் என வந்தேன் என்றார். அதைக்கேட்ட பிறகே அனைவரும் மகிழ்வடைந்தனர்.

## பொதுஅறிவு

கிரிகெட் மட்டை செய்ய பயன்படும் மரம்?
- வில்லோ மரம்

போக்குவரத்து காவலர்கள் Traffic Police இல்லாத நாடு?
- நியூசிலாந்து

காகம் இல்லாத நாடு?
- நியூசிலாந்து

உலகில் அதிக சினிமா தயாரிக்கும் நாடு?
- இந்தியா

உலகில் மிக நீண்டநதி?
-நைல்நதி

## இலங்கை பற்றிய பொது அறிவுகள்


1. இலங்கையின் மிக நீளமான ஆறு - மகாவலிகங்கை 335 கிலோமீட்டர்
2. இலங்கையின் மிக உயர்ந்த மலை - பீதுருதாலகால மலை கடல்மட்டத்திலிருந்து 2524 மீட்டர்.
3. இலங்கையின் பெரிய நீர்வீழ்ச்சி - பம்பரகந்த
4. இலங்கை எத்தனை மாகாணங்களாக பிரிக்கப் பட்டுள்ளது - 9 மாகாணங்கள்
5. இலங்கையில் எத்தனை தேர்தல் மாவட்டங்கள் உள்ளது - 22 தேர்தல் மாவட்டங்கள்.




# ஈர்ப்பு விசை அலைகள்

தற்போது சமூக வலைத் தளங்களிலும், இணையத்தளங்களிலும் ஈர்ப்பு விசை அலைகள், அதாவது Gravitational Waves பற்றிப் பேசப்படுகின்றது. "இது ஒரு மாபெரும் கண்டுபிடிப்பு" அல்லது "Scientific Sensation" என்று எல்லாம் தலைப்புகளை அவதானித்திருப்பீர்கள், சரி தானே? ஆனால் ஈர்ப்பு விசை அலைகள் என்றால் என்ன? அப்படி இந்தக் கண்டுபிடிப்பு ஏன் இவ்வாறு விசேஷமாகப் பேசப்படுகின்றது? என்பது தெரியுமா?

இதில் உள்ள ஆச்சரியம், இந்த ஈர்ப்பு விசை அலைகள் ஆல்பர்ட் ஐன்ஸ்டைனினால் அவருடைய பொதுச் சார்புக் கோட்பாடு (Theory of Relativity) மூலம் 100 வருடங்களுக்கு முன்னரே கணிக்கப்பட்டது. 11.02.2016 வரை இந்த ஈர்ப்பு விசை அலைகளை நேரடியாக அவதானிக்கப்படவில்லை. ஆனால் தற்போது அது அவதானிக்கப்பட்டுள்ளது.



உங்கள் எல்லோருக்குமே தெரியும், விண்வெளியில் நமது சூரியனைப் போல் என்ன, நமது சூரியனை விட எத்தனையோ மிகப் பெரிய நட்சத்திரங்கள் உள்ளன. அந்த நட்சத்திரங்களின் வாழ்நாளின் இறுதியில் கருந்துளைகளாக, அதாவது black holes ஆக மாறிவிடும். அப்படி இரு கருந்துளைகள் ஒன்றுடன் ஒன்று மோதி, பின்பு இரண்டும் ஒன்றாகச் சேரும் பொழுது spacetime என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் வெளிநேரத்தில் அதிர்வுகள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படும் அதிர்வுகளைத் தான் ஐன்ஸ்டைன் ஈர்ப்பு விசை அலைகள் என்று கூறினார். ஐன்ஸ்டைனின் அந்தக் கணிப்பு சரியானது என்பதை தற்போது விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.


1609ம் ஆண்டில் கலிலியோ கலிலீ கண்டுபிடித்த தொலைநோக்கி அதாவது Telescope தான், தொடர்ந்து விண்வெளி ஆராய்ச்சியையே தலை கீழாகப் புரட்டிப் போட்டது. அதே போல் தான் இந்த ஈர்ப்பு விசை அலைகளின் கண்டுபிடிப்பும் நமது எதிர்கால விண்வெளி ஆராய்ச்சியை முற்றிலும் மாற்றி, புதிய புதிய கண்டுபிடிப்புகளைத் தர அடிப்படையாக இருக்கப் போகின்றது என்று உறுதியாக நம்புகின்றார்கள். இன்று வரை ஒரு வித பதில்களுமே கிடைக்காத கேள்விகளுக்கு, உதாரணத்திற்குக் கருந்துளைகளின் கருவில் என்ன நடைபெறுகின்றது, அல்லது நமது பிரபஞ்சம் எவ்வாறு தோன்றியது போன்ற அடிப்படைக் கேள்விகளுக்கு, எதிர்காலத்தில் பதில்களைக் காண இந்தப் புது ஈர்ப்பு விசை அலை ஆராய்ச்சித் துறை உதவப் போகின்றது.

ஆக மொத்தத்தில் இயற்பியல் மற்றும் விண்வெளி ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு புதுக் கதவு திறந்து விட்டது என்பது மட்டும் அல்லாமல், இதைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளுக்கும் நோபல் பரிசு கிடைக்கப்போகின்றது என்பதில் ஒரு வித சந்தேகமும் இல்லை!

## புதிரோடு விளையாடு!


கடலில் இறங்கிட்டான் டிங்கு.. அவனுக்கு வேணுமாம் சங்கு.. சரியான பாதையைக் காட்டு கடலில் நீயும் முங்கு!

1



2

1 முதல் 54 வரை புள்ளிகளை இணைக்கலாமா! தாவிக் குதிப்பது யாருன்னு பார்க்கலாமா?



## விடுகதை

1. என்னைப் பார்க்க முடியும் ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார்?
2. நான்தான் சகலமும். என்னைப் பார்க்க முடியாது பிடிக்கவும் முடியாது. எனக்கு வாயில்லை. ஆனால் நான் ஓசை எழுப்புவேன். நான் யார்?
3. என்னுடைய நிறம் கருப்பு. மிகுந்த தேடலுக்குப் பின் நான் கிடைப்பேன். என்னை கண்டறிந்த பிறகு என்னுடைய கவசத்திடமிருந்து பிரித்தெடுப்பார்கள். நான் யார்?
4. நான் மயிலிறகைவிட மென்மையானவன். ஆனால் மனிதர்கள் அதிக நேரம் என்னை பிடித்து வைக்க முடியாது. நான் யார்?
5. எனக்கு உயிரில்லை. ஆனால் நான் வளர்வேன். எனக்கு நுரையீரல் கிடையாது. ஆனால் எனக்கு காற்று மிகவும் அவசியம். எனக்கு வாயில்லை ஆனால் பல கைகள் உண்டு. நான் யார்?
6. இருட்டறைக்குள் என்னை அழைத்துச் சென்று என்மேல் தீயை வைப்பார்கள். நான் அழுவேன். பிறகு என்னுடைய தலை துண்டிக்கப்படும். நான் யார்?
7. ஒரே இடத்தில் இருப்பேன். எனக்குத் தொண்டை கிடையாது. ஆனால் நான் ஓசை எழுப்புவேன். நான் யார்?
8. நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது. நான் யார்?
9. பேசாத வரை நான் இருப்பேன். பேசினால் நான் உடைந்துவிடுவேன். நான் யார்?
10. இது பேசினால் கேட்கமுடியும். ஏனென்றால்இ இதற்குப் பெரிய வாயுள்ளது. ஆனால் இதனால் சுவாசிக்க முடியாது. அது என்ன?

*விடைகள்*


*1. துவாரம் 2. காற்று 3. நிலக்கரி 4. சுவாசம் 5. தீ 6. மெழுகுவர்த்தி 7. நீர்வீழ்ச்சி 8. தென்றல் 9. அமைதி 10. கோவில் மணி*

✒ **இன்போர்மர் இசக்கி**


# காணி திணைக்களத்திற்கு போன கறுப்பாடு யார்?

# ஒரேயொரு கடிதம்... எம்.பி மீது பாய்ந்த அதிகாரி!

## மட்டக்களப்பில் நடந்த 'அடிபிடி' சம்பவம் இதுதான்



காணி விபரங்களை கோரி யோகேஸ்வரன் எம்.பி எழுதிய கடிதங்கள்



SEENITHAMBY YOHESWARAN (M.P)

PARLIAMENT

MEMBER OF PARLIAMENT - BATTICALOA DISTRICT

Date: 19.08.2017

Honorable Governor,
Eastern Province,
Trincomalee

Most Respect Sir

**Complain Against to Corruption and Misuse of Power on State Land Declaration to Public in Vaharai Divisional Secretariat Division Batticaloa District and Request to immediate inquiry on this Land Issue**

I would like to bring your kind concern regarding above subject details are as follows.

In Vaharai Divisional Secretariat Division Kayankerni G.N.Division Pullavi Area call as usan ththam there are 31 Acs, 3Ruts and 35 B.s. That is fully Sate Land. According to the Divisional Secretariat Record and Divisional Secretary also send by the Letter No: LAN/NOTDO/1/1 Dated on 10.12.2015 to District Land Registrar Batticaloa that land is State Land and I also conform it in Kachcheri Batticaloa on 15.08.2017. Mr Thiruvarul who is working as a District Land Registrar Batticaloa Conform that the land as a state land and the seen on the land Map


In addition of above Land Survey Plan Tracing No: BT/KPN/2013 Ltd.020 Conform that "North Boundary of The Land Part No: 643 and above is Pullavi Poomi Scrub Jungle State". In this Circumstances Mr Periyathampi Kumanathas Submitted to Two Deferent Unregistered Deeds written in between 31 years gap (No: 8629 on 1984 and 29254 in 11.09.2015) both Unregistered Deeds are a land that land for state Land. Even though He Submitted that land as his Property. At the same time He Submitted two unregistered same deeds for the Land Profs.

Mr Nesakuma Vimalraj Submitted that land as his Property ... (PLC) Office at Trincomalee on ... as supporting ... registered same deeds for the Land Profs.

Mr Nesakuma Vimalraj Visited to Eastern Provincial Land Commission (PLC) Office at Trincomalee 07.08.2017 Wednesday at about 10.00am to 03.45pm Related to the State land Problems as supporting Officer to his Friend Named called as Mr Periyathampi.Kumanathas without any Authority.

The Problems is, the above land is state, and But Mr. Nesakumar Vimalraj Director Land Reform Commission Batticaloa, trying to declare the land as Private with support of Provincial Land Commissioner and PLC also accept his request and give the letter the above said land is private without considering the actual situation and Actual preliminary plan for the survey General Department.

ஆளுனருக்கு எழுதிய கடிதம்



தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு எம்.பி சீ.யோகேஸ்வரன் மீது தாக்குதல் முயற்சி என அண்மையில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. மட்டக்களப்பு மாவட்ட காணி ஆணையாளர் நே.விமல்ராஜ், அவரது மனைவி மற்றும் இரண்டு பொலிசார் சகிதம் சீ.யோகேஸ்வரனின் அலுவலகத்திற்கு சென்ற சமயத்தில் இந்த அசம்பாவிதம் நடந்துள்ளது. விமல்ராஜ் தன்மீது தாக்குதல் நடத்த முயன்றபோது, தனது பாதுகாப்பு பொலிசார் தடுக்க முற்பட்டு சமயத்தில் காயமடைந்தார் என்றும் யோகேஸ்வரன் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஏனிந்த திடீர் மோதல்?

ஒரு மாதத்திற்கு முன்னர் நடந்த செய்திகளிற்கு உங்களை அழைத்து செல்கிறோம். 17.09.2017 (இதழ் 110) தீபம் இதழை படித்தவர்களிற்கு ஒரு செய்தி நினைவிருக்கலாம்.

"போலி உறுதிமூலம் அரசகாணி மோசடி... அரச விடுதியில் சாராய வியாபாரி" என்ற செய்தி வெளியாகியிருந்தது. மட்டக்களப்பில் அண்மைக்காலமாக அதிகாரிகள் மத்தியில் அதிகரித்திருந்த ஊழல் மோசடிகளை துல்லியமான ஆதாரங்களுடன் தீபம் மாத்திரமே அம்பலப்படுத்தி வருகிறது. 17.09.2017 திகதி இதழிலும் எமது புலனாய்வு செய்தியாளர்கள் அனைத்து ஆதாரங்களையும் திரட்ட, காணி மோசடி தொடர்பான அந்த செய்தியை வெளியிட்டோம்.

அந்த செய்தியை படிக்காத வாசர்களிற்காக, அந்த செய்தியை மிகச்சுருக்கமான குறிப்பிடுவதுடன், மேலும் சில தகவல்களையும் குறிப்பிடுகிறோம். கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேசசெயலர் பிரிவில் காயான்கேணி கிராமசேவகர் பிரிவு உள்ளது. அங்குள்ள புல்லாவி என்ற இடத்தில் அமைந்துள்ள 31கி, 3 றூட், 35 பேர்ச் விஸ்தீரணமுடைய Pullavi Poomi Scrup juncle, State என குறிக்கப்பட்ட அரசகாணியே மோசடி செய்யப்பட்டுள்ளது. தற்போது வெளிநாடொன்றில் வசிக்கும் பெரியதம்பி குமணதாஸ் என்பவரால் இரண்டு ஆட்சி உறுதிகள் எழுதப்பட்டு காணி மோசடி நடத்தப்பட்டுள்ளது.

பதிவுகளின் படி கதிர்காமதம்பி நல்லதம்பி செல்வதுரை என்பவரிற்கு இந்தகாணி நீண்டகாலத்தின் முன் வழங்கப்பட்ட அரசகாணி. பின்னர் அந்த காணி பாவனையில்லாமல் இருக்கின்றபோது, காணி தொடர்பான அதிகாரியொருவர் இதில் தலையீடு செய்துள்ளார் என ஊகிக்க முடிகிறது. இதனால்தான் காணியில் முன்னைய உரிமையாளரின் பெயரை அடையாளம் கண்டு, அதே பெயருடைய மூதாதையர்களின் பெயரையுடைய குடும்பத்தை சேர்ந்த ஒருவரின் மூலம் காணி மோசடி முயற்சி நடந்துள்ளது.

**சீ.யோகேஸ்வரன்**
எம்.பி, மட்டக்களப்பு

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ்காரர் ஒருவர்தான் விமல்ராஜை மீண்டும் உள்ளே அழைத்து வந்தார். தன்னை மன்னிக்குமாறும், பொலிஸ் கேஸ் ஆனால் தனது வேலை பறிபோய்விடும் என்றும் தயவாக கேட்டார். அப்போது நான் காவி உடை, உருத்திராட்ச மாலை அணிந்திருந்தேன். அந்த நிலையில் என்னால் மன்னிப்பு வழங்குவதை விட வேறு என்ன செய்ய முடியும்? 'மன்னிக்கிறேன். இனிமேல் இப்படியான வேலைகள் செய்ய வேண்டாம்' என கூறினேன். இதன்போது பொலிசார் முறைப்பாடு பதிவுசெய்து, எனது மன்னிப்பையும் பதிவுசெய்திருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. பின்னர், அவரது நடவடிக்கைகளை பார்க்கும்போது எனக்கும் அச்சுறுத்தல் இருப்பதாக உணர்வதால் பொலிசில் முறையிட்டுள்ளேன். பொலிசார் அவரை மன்னித்து விடுமாறுதான் கேட்கிறார்களே தவிர, எந்த வித விசாரணையையும் ஆரம்பிக்கவில்லை"

குமணதாஸ் குடும்பத்தில் இராஜகிரி செல்லத்துரை கணேஷாநந்தம் (1950 பிறந்தவர் என குறிப்பிடப்பட்டுள்ளது) என்பவர் காணிக்கு சொந்தக்காரராக தற்போது குறிப்பிடப்பட்டுள்ளார். முன்னைய காணி உரிமையாளர் செல்வதுரையும், தற்போது உரிமைகோரும் குமணதாஸ் குடும்பத்தின் மூதாதையான செல்லத்துரையும் ஒருவரா?

இது தொடர்பாக பிரதேசசெயலகம் ஆராய்ந்தபோது, இருவரும் ஒருவர் என்ற முடிவிற்கு வரத்தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. முக்கியமாக செல்வதுரையின் தந்தை பெயர் இராஜகிரி. தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள செல்லத்துரையின் தந்தை பெயர் நல்லதம்பி. இதில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாள அட்டையொன்றின் இலக்கமும் பதிவில் இல்லாதது!

இப்படி தலைசுற்றவைக்கும் ஏராளம் சம்பவங்கள் இந்த விடயத்திற்குள் உள்ளன. அதனால் இதை அப்படியே நிறுத்திவிட்டு, விடயத்திற்கு வருகிறோம்.

இந்த காணியை சட்டவிரோதமாக அபகரிக்க முயன்றதில், மாவட்டத்தின் காணி தொடர்பான உயர்அதிகாரியொருவரின் பங்கு இருப்பதாக அப்பொழுது குறிப்பிட்டிருந்தோம். யார் அந்த கறுப்பாடு என்பதை நாம் சொல்லப் போவதில்லை. முறையான விசாரணையின் மூலமே அவர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். நமது புலனாய்வு பத்திரிகையாளர்கள் அந்த கறுப்பாடு தொடர்பான மேலும் பல தகவல்களை திரட்டியுள்ளனர். உரிய விசாரணை நடத்தப்பட்டால், அதை வெளியிட தீபம் தயாராக உள்ளது. மாவட்டத்தின் காணி தொடர்புடைய உயரதிகாரியொருவர், அந்த காணி தொடர்பான ஆவணங்களை பெற, திருகோணமலையிலுள்ள மாகாண காணி திணைக்களத்திற்கு சென்ற விபரங்களும் தீபத்திடம் உள்ளன!

இந்த காணி விவகாரம் தீபம் வார இதழில் வெளியானதையடுத்து, மட்டக்களப்பு அரச நிர்வாகத்தில் ஒரு புயலே வீசி ஓய்ந்தது. இப்படி ஆட்டையை போட்டுள்ளார்களே என ஒரு சாரர் அதிர்ச்சியில் இருக்க... எப்படி ஊடுருவி தகவல்களை கறந்தார்கள் என இன்னொரு தரப்பினர் கடுப்பானார்கள். இந்தசமயத்தில்தான் மாவட்டத்தின் எம்.பி சீ.யோகேஸ்வரன், மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தான காணிகள், அரச காணிகள் தொடர்பான விபரங்களை வழங்குமாறு காணி சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் மட்டக்களப்பு பிரதேச செயலகங்களிடம் கடிதம் மூலம் கோரினார். அத்துடன், ஆளுனருக்கும் கடிதம் எழுதினார்.

இதுதான் கவனிக்க வேண்டிய விடயம்.

அந்த கடிதத்தில் மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நேசகுமார் விமல்ராஜ் மீது கிட்டத்தட்ட வெளிப்படையாக குற்றம்சுமத்தியிருந்தார் எம்.பி. திருகோணமலையிலுள்ள காணி திணைக்களத்தில் இருந்து குமணதாஸின் காணிக்குரிய ஆவணங்களை மோசடியாக பெற்றுக்கொள்ள, விமல்ராஜ் தனது

தொடர்ச்சி 22-ம் பக்கம்...

# உங்களைப் பணக்காரர் ஆக்கும் 12 கோல்டன் ரூல்ஸ்!



பணத்தை அடைவதற்கு தனிநபர்கள் பின்பற்ற வேண்டிய கோல்டன் ரூல்கள் சில உள்ளன. இவற்றைப் பின்பற்றுபவர், பணக்காரராகும் இலக்கை நோக்கி நகர்கிறார் என்று சொல்லலாம். இதை நாங்கள் சொல்லவில்லை உலக பிரபல வர்த்தக ஆலோசகர்கள் சொல்கிறார்கள்.

பண ஈர்ப்பு விசை என்ற பயிற்சி வகுப்பைச் உலகளவில் நடத்தி வருபவர் எரிக் சிமன்ஸ். அவர் சமீபத்தில் ஒரு வகுப்பில் சொன்னார், "சாதாரணமாக மனிதர்கள், ஒரு புதிய பொருளை வாங்கும்போது மற்றவர்களுடன் தங்களை ஒப்பிட்டுப் பார்த்து அதற்கான தேவையை உருவாக்குகின்றனர். ஒரு டூவீலர் வாங்கும்போது பலரை நீங்கள் கவனித்திருக்கலாம். அவரது நண்பர் வாங்கிய பிராண்டைவிட நல்லதாக வாங்க வேண்டும் என்ற தேடல் அவருக்குள்ளிருந்து தொடங்கும். சில நேரங்களில் ஆசைப்பட்டாலும் அவர்களுக்குள் மிடில்கிளாஸ் மனநிலை விழித்துக்கொண்டு, இதெல்லாம் உன் தகுதிக்கு எட்டாத விஷயங்கள் என்று தலையில் குட்டும். பணத்தை ஈர்க்க முதலில் நம்மை தகுதிப்படுத்த வேண்டும்" என்றவர், அதற்கான கோல்டன் ரூல்களைச் சொல்லி நம்பிக்கையூட்டினார். அவர் சொன்ன ரூல்கள்...

1. முதலில் எதைப் பார்த்தும் ஏக்கம் கொள்ள வேண்டாம். இதெல்லாம் நமக்குக் கிடைக்குமா, நானென்ன டாடா பிர்லாவா என நம்பிக்கையைச் சிதைக்கும் விஷயங்களை மனதுக்குள் பதிய வைக்காதீர்கள். மனதளவில் உங்களை ஒரு கோடீஸ்வரர்போல கற்பனை செய்யுங்கள். இப்படியான ஒரு மனநிலை உங்கள் எண்ணங்களை மாற்றும்.

2. ஒரு விஷயம் நமக்குப் பிடித்தால் அதை விரும்பத் தொடங்குங்கள். நம்மால் அடைய முடியாதது எதுவுமில்லையென்று நம்புங்கள். டாடா பிர்லா என்ன... அதற்கு மேலும் என்னால் ஆக முடியும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

3. உலகம் நம்மைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறது என்று கவலைப்படுவதை நிறுத்துவது அவசியம். திறமை, பணம் என எல்லாம் நிறைந்த மனிதராக உங்களை நம்புங்கள். அந்த நம்பிக்கையானது உங்கள் பேச்சு, முகம், செயல் எல்லாவற்றிலும் வெளிப்படும். உங்களிடம் உருவாகும் நம்பிக்கை ஒளி உங்களைச் சுற்றி இருப்பவர்களையும் உணரச் செய்யும். அதுவே உங்களுக்கான பொசிட்டிவ் வாய்ப்புகளை உருவாக்கும்.

4.என்னென்ன செலவுசெய்தீர்கள் என்று கணக்கு எழுதுங்கள். எவ்வளவு மிச்சம் உள்ளது என்பதிலும் தெளிவாக இருங்கள். எழுதும்போது வேண்டாத செலவுகளைக் குறைப்பதற்கான திட்டமிடலுக்கு மனம் தயாராகும். நீங்கள் நேசிக்கும் பணம் உங்களை நேசிக்கத் துவங்கும்.

5. பணத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். உங்களுக்கான வழி எது என்று தேடுங்கள். சம்பாதிப்பதோடு சம்பாதிக்கும் பணத்தைப் பலமடங்காக பெருக்குவதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டும். நீங்கள் ஏற்கெனவே செய்துவரும் பிசினஸ் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதும், மதிப்புக் கூட்டுவதும் அவசியம்.

6. ஓரளவுக்கு ரொக்கப் பணத்தை பர்ஸில் வைத்திருங்கள். எப்போதும் எதுவுமில்லை என்ற நிலைக்கு நீங்கள் வரவே கூடாது. காரணம், எந்தச் சூழலிலும் நீங்கள் தன்னம்பிக்கை யோடு இருக்க அந்தப் பணம் உதவும்.

7. நேரம்தான் பணம் என்று உணர்ந்து கொள்ளுங்கள். எனவே, நேரத்தை மிச்சப்படுத்தவும், நேரத்தின் மதிப்பைக் கூட்டவும் திட்டமிடுங்கள். குறிப்பிட்ட பணத்தை மிச்சப்படுத்துவதற்காக யார் வேண்டுமானாலும் செய்யக்கூடிய வேலையை நீங்கள் செய்து உங்கள் நேரத்தையும், நேரத்தின் மதிப்பையும் வீணடிப்பதை நிறுத்துங்கள். ஒரு மணி நேரம் நீங்கள் உழைத்தால் ஒரு லட்சம் வர வாய்ப்பிருப்பின் அதுபோன்ற வேலையை விரும்பிச் செய்யுங்கள். உங்கள் நேரத்தின் மதிப்புக் கூடும்.

8. உங்களை நீங்கள் எப்படி வெளிப்படுத்துகிறீர்களோ, அப்படித்தான் இந்த உலகம் உங்களைப் பார்க்கும். உங்களின் மதிப்பை நீங்கள் உயர்த்தும்போதுதான், உங்களின் பொருளாதார நிலையும் உயரும். உங்களின் தோற்றம் மற்றும் உடையின் ஸ்டைலையும் நீங்கள் மாற்ற வேண்டும்.

9. நீங்கள் உங்களை எங்கு வெளிப்படுத்துகிறீர்கள் என்பதும் முக்கியம். பணம் அதிகம் வைத்திருப்பவர்கள் சந்திக்கும் அமைப்புகளில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். அங்கு உங்களின் திறனையும், பிசினஸ் மதிப்பையும் உயர்த்திக் கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குங்கள், பணம் நிச்சயம் உங்களைத் தேடி வரும்.

10. பணம் உங்களைத் தேடி வர, பணத்திற்கு பின்னால் இருக்கும் அறிவைத் தேடிப் போக வேண்டும். உங்கள் துறையின் உச்சகட்ட அறிவு வரை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் சார்ந்திருக்கும் துறையில் உங்கள் திறமையை வளர்த்துக்கொள்ள பணத்தையும் நேரத்தையும் செலவு செய்வதன் மூலம் உங்களின் தகுதியை மேம்படுத்திக்கொண்டால் பணம் தேடி வரும்.

11. நீங்கள் வளர்ந்து வளம்பெறத் தொடங்கும் காலத்தில், செல்வ மனநிலையில் இருங்கள். தேவைப்படுபவர்களுக்கு உதவும் மனநிலையில் இருக்க வேண்டும். உங்களைத் தேடி வரும் பணத்துக்கு நன்றி சொல்லுங்கள். சிறு சிறு உதவிகள் செய்வதால், பெரிய பண வாய்ப்புகள் உங்களைத் தேடி வருவதற்கான நம்பிக்கையை உருவாக்கும்.

12. சம்பாதித்த பணத்தை எதில் முதலீடு செய்வது, எப்படிப் பெருக்குவது என்பது உங்கள் ஒருவரால் மட்டுமே முடிவு செய்துவிட முடியாத விஷயம். நிதி ஆலோசகரின் உதவியுடன் சிறந்த சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யுங்கள்.

நீங்களும் பணக்காரர் ஆவதற்கு இந்த விதிகளைப் பின்பற்றிப் பார்க்கலாமே.

---

21-ம் பக்க தொடர்ச்சி...

செல்வாக்கை பயன்படுத்துகிறார் என அதில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து கிழக்கின் மூன்று மாவட்ட காணி ஆணையாளர்களையும் அழைத்து, அரசகாணி விபரங்களை கேட்டுள்ளார்.

இதன் பின்னர்தான் இந்த சச்சரவு நடந்துள்ளது.

எம்.பியின் மாவட்ட அலுவலகத்திற்கு விமல்ராஜ், மனைவி, இரண்டு பொலிசார் (விமல்ராஜ் மீது பல மாதங்களின் முன்னர் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு காலில் காயமடைந்திருந்தார். இதன் பின் இரண்டு பொலிசார் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்) சென்றுள்ளனர். அங்கு என்ன நடந்ததென்பது பற்றி அனேகமான செய்திகள் வெளியாகி விட்டன. வெளியான செய்திகளை பேசாமல், வெளிவராத செய்தியின் பின்னணிகள் பற்றியே நாம் பேசுவதால், நாம் வேறு தகவல்களை குறிப்பிடுகிறோம்.



யோகேஸ்வரன் வீட்டில் சச்சரவின் பின்

கடந்த 4ம் திகதி இந்த சம்பவம் நடந்தது. யோகேஸ்வரனின் அலுவலகத்திற்குள் நுழைந்தவிமல்ராஜ்தம்பதி முதலில்பேசியது துப்பாக்கிச்சூட்டு விடயம். விமல்ராஜ் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டை அவரே திட்டமிட்டு நடத்தினாரா என முன்னாள் மாவட்ட அரசஅதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸிடம், யோகேஸ்வரன் எம்.பி கேட்டாரா என்பதுதான் அவர்கள் கேட்ட முதல் கேள்வி. யோகேஸ்வரன் எம்.பி அதை ஏற்றுக்கொண்டு, அந்த கேள்வியை ஏன் கேட்டேன் என விளக்கமளித்துள்ளார். "துப்பாக்கிச்சூடு நடந்ததும் நாம் ஆர்ப்பாட்டப் போராட்டங்களும் செய்தோம். ஆனால் பலர் வேறுவிதமான அபிப்பிராயத்தை சொன்னதால், உங்களின் மேலதிகாரியென்ற முறையில் அரசஅதிபரிடம் அதை விசாரித்தேன்" என கூறியுள்ளார். முன்னாள் அரசஅதிபர் இருக்கும்போது கேட்ட விடயத்தை, அவர் இடமாற்றம் பெற்ற பின்னர் எதற்காக கேட்க வேண்டுமென்ற சந்தேகத்தையும் எழுப்பினார். இதன்பின்னர் காணி தொடர்பான சர்ச்சைகள் எழுந்து, உச்சக்கட்ட சர்ச்சைக்கு சென்றிருக்கிறது. ஆக்ரோசமாக பேசிக்கொண்டிருந்த சமயத்தில் இடையே, ஆளுனருக்கு கடிதம் எழுதிய விடயத்தையும் விமல்ராஜ் சுட்டிக் காட்டினார் என்கிறார் யோகேஸ்வரன் எம்.பி.

ஆக்ரோசமாக பேசிக்கொண்டு வந்த விமல்ராஜை, வெளியேறுமாறு தமிழிலும், ஆங்கிலத்திலும் கூறியிருக்கிறார் யோகேஸ்வரன். இந்த சத்தத்தைகேட்டு அங்கு வந்த அவரது பாதுகாப்பு பிரிவினர் இருவர், விமல்ராஜ் உடன் வந்த இரண்டு பொலிசார் என நால்வரும், விமல்ராஜ் உடன் மல்லுக்கட்டி வெளியேற்றினர். இந்த தள்ளுமுள்ளில் யோகேஸ்வரனின் பாதுகாப்பு அதிகாரியொருவரின் நெற்றியில் இருந்து சிறிது இரத்தம் வழிந்ததாக கூறப்படுகிறது.

இதன்பின்னர்தான் நீங்கள் 05ம் திகதி ஊடகங்களில் படித்த மோதல்.. தாக்குதல்... சர்ச்சை... பரபரப்பு எல்லாம்.

விமல்ராஜை பொலிசார் எம்.பியின் அலுவலகத்தை விட்டு வெளியேற்றி, முன்பக்கமாக வைத்திருந்தபடி, மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியுள்ளனர். மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் இருந்து சற்று தாமதமாக வந்த பொலிசார், சமரச முயற்சியில் இறங்கியுள்ளனர். விமல்ராஜை, யோகேஸ்வரனிடம் அழைத்து சென்று மன்னிப்பு கேட்கவைத்தனர்.

இதன்பின்னர் மீண்டும் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் யோகேஸ்வரன் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆனால் பொலிசார் இதுவரை முறையான விசாரணைகளை ஆரம்பிக்கவில்லை யென யோகேஸ்வரன் குற்றம்சாட்டுகிறார். விமல்ராஜை மன்னித்துவிடும்படியே கேட்கிறார்கள் என்கிறார்.

இந்த விவகாரம் இப்படியே அடங்கி விடுமா, பொலிசார் விசாரணை நடத்து வார்களா, ஏதும் சடுதியான மாற்றங்கள் நிகழுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# ஐஎஸ் பயங்கரவாதிகளால் அழிக்கப்படும் ஈராக்கின் 'இந்து' மதம் 2

கலையரசன்



சின்ஜார் மலையில் PKK/YPG போராளிகள்

அந்த வீடுகளில் இருந்த அரேபியப் பெண்களும் யேசிடி பெண்கள் மீது இரக்கப் படவில்லை. அவர்கள் உணவு கொடுக்காமல், தண்ணீர் கொடுக்காமல், இன்னும் அதிகமாக கொடுமைப் படுத்தி னார்கள். அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, தமது கணவன் பாலியல் அடிமையை வைத்திருப்பதால் ஏற்பட்ட பொறாமை. இரண்டு, யேசிடிகள் மனிதர்களே அல்ல என்ற மதம் சார்ந்த வெறுப்புணர்வு.

தற்போது யுத்தம் முடிந்து, ஐ.எஸ். வசம் இருந்த பிரதேசங்களை ஈராக்கிய இராணுவம் கைப்பற்றி விட்டது. அதனால், ஆயிரக் கணக்கான யேசிடி பெண்களுக்கு விடுதலை கிடைத்தது. இருப்பினும் இன்னும் சிலர், குறைந்தது ஆயிரம் பேராவது, சிரியாவில் சுருங்கி வரும் ஐ.எஸ். கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருக்கலாம். சிலர் அடிமைகளாக சவூதி அரேபியாவுக்கு கொண்டு செல்லப் பட்டிருக்கலாம்.

ஐ.எஸ். எதற்காக யேசிடிகளை அடிமைகளாக்கியது? அதற்கு அவர்கள் பின்பற்றிய கடும்போக்கு மதவாதம் முக்கியமான காரணம். ஒரு இஸ்லாமிய தேசத்தினுள், கிறிஸ்தவர்களும், யூதர்களும் மட்டுமே சிறுபான்மை மதத்தவராக அங்கீகரிக்கப் படலாம். அதற்காக அவர்கள் ஒரு வரியை கட்டி வந்தால் போதும் என்று குரான் சொல்கிறது. ஆனால், யேசிடி போன்ற "குரானுக்கு அப்பாற்பட்ட மதத்தவர்களை" என்ன செய்வது என்று சொல்லப் படவில்லை.

இது குறித்து ஐ.எஸ். தனது இஸ்லாமிய அறிஞர்களிடம் ஆலோசனை கேட்டது. அவர்கள், இஸ்லாமிய மதம் தோன்றிய காலத்தில், புராதன மதங்களை பின் பற்றிய மக்கள் எவ்வாறு நடத்தப் பட்ட னர் என்பதை சுட்டிக் காட்டி உள்ளனர். அதாவது, "அவர்கள் ஒன்றில் இஸ்லாமி யராக மதம் மாற வேண்டும், அல்லது கொல்லப் படலாம், அடிமைகளாக விற்கப் படலாம்." 1500 வருடங்களுக்கு முந்திய அரேபியாவில் நடந்த வரலாற்றுச் சம்பவங்களை, ஐ.எஸ். நவீன உலகத்தின் கண்களுக்கு முன்னால் நிகழ்த்திக் காட்டியது.

தற்போது ஐ.எஸ். பிடியில் இருந்து மீட்கப் பட்டுள்ள யேசிடி பெண்கள், ஈராக்கி குர்திஸ்தானில் உள்ள அகதி முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். பலர் கடுமையான மன உளைச்சலால் பாதிக்கப் பட்டுள்ளனர். கடந்த கால கசப்பான அனுபவங்கள் காரணமாக மறு திருமணம் செய்வதற்கு அஞ்சுகின்றனர். மிகவும் பழைமைவாத கட்டுப்பாடுகளை கொண்ட யேசிடி சமூகத்தில் இது ஒரு வரலாற்றுத் திருப்புமுனை.

ஏனெனில், சிறுவயது முதலே கற்பை வலியுறுத்தி வரும் சமூகம் அது. திருமணம் செய்யும் வரையில் ஒரு பெண் (ஆணும் தான்) கற்புடன் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. திருமணம் முடித்த தம்பதிகள் மணமுறிவு பெறுவதை நினைத்துப் பார்க்க முடியாது. அவ்வாறான பழைமைவாத சமுதாயத்தில், ஐ.எஸ். கொடூரர்களால் பாலியல் அடிமைகளாக வைத்திருந்து கொடுமைப் படுத்தப் பட்ட பெண்களை என்ன செய்வது?

இது தொடர்பாக உள்ளூரிலும், வெளிநாடுகளில் இருந்தும் கடுமையான அழுத்தம் கொடுக்கப் பட்டது. இறுதியில் தலைமை மதகுருவானவர் பாதிக்கப் பட்ட பெண்களை மீண்டும் மதத்தில் சேர்த்துக் கொள்ள இணங்கினார். அதற்காக புனித நீர் தெளித்து தூய்மைப் படுத்தும் சடங்கு நடைபெற்றது. இது அந்த மதத்தைப் பொறுத்தவரையில், ஒரு நவீன தோற்றப்பாடு எனலாம். ஏனெனில், வழமையாக வேறு மதத்திற்கு மாறியவர்களை கூட மீண்டும் சமூகத்தில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்.

ஒரு தடவை, 2007 ம் ஆண்டு, ஒரு பருவ வயது யேசிடி இளம்பெண், இஸ்லாமிய குர்திய இளைஞனுடன் காதல் வசப் பட்டு கூட்டிக் கொண்டு ஓடி விட்டாள். சில மாதங்களின் பின்னர், அவர்களுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக பிரிந்து வந்துள்ளாள். ஆனால், அவளை ஏற்றுக் கொள்ள குடும்பத்தினரே மறுத்து விட்டனர். அவளது மைத்துனர்களால், பட்டப் பகலில், பலர் கூடிப் பார்த்திருக்க, கல்லால் அடித்து கௌரவக் கொலை செய்யப் பட்டாள்.

ஐ.எஸ். பிரதேசத்தில், பாலியல் அடிமைகளாக சொல்லொணா கொடுமைகளை அனுபவித்த பெண்களில் சிலர், தாமாகவே முன்வந்து இஸ்லாமிய மதத்தை தழுவிக் கொண்ட சம்பவங்கள் நடந்துள்ளன. அதற்குக் காரணம், இஸ்லாமியராக மதம் மாறிய பின்னர் அவர்கள் அடிமைகளாக நடத்தப் படவில்லை. சாதாரண "இஸ்லாமிய தேசப் பிரஜையாக" வாழ முடிந்தது.

இருப்பினும், ஐ.எஸ். கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விட்டு, தப்பியோட முனையக் கூடாது என்றும், அவர்களுக்கு பொறுப்பான முல்லா சுட்டிக்காட்டும் ஒருவரைத் தான் திருமணம் முடிக்க வேண்டும் என்றும் கட்டுப்பாடு இருந்தது. இன்று இஸ்லாமியராக மதம் மாறிய யேசிடி பெண்கள், திரிசங்கு சொர்க்கத்தில் வாழ்கிறார்கள். சிலநேரம், அவர்களது பிள்ளைகளே "யேசிடிகள் பிசாசை வணங்குவோர்" என்று சொல்கின்றன.

யேசிடி சமூகத்தினரின் இன்னொரு பிரச்சினை, அது தற்போது விரைவாக அழிந்து கொண்டிருக்கும் மதமாக உள்ளது. கனடா உட்பட, பல மேற்கத்திய நாடுகள் ஆயிரக் கணக்கான யேசிடிகளுக்கு அகதி அந்தஸ்து கொடுத்து அழைத்துச் சென்றுள்ளன. ஏற்கனவே, ஜெர்மனியில் மிகப்பெரியதொரு புலம்பெயர்ந்த யேசிடிகள் சமூகம் உள்ளது. அவர்கள் பெரும்பாலும் பல வருடங்களுக்கு முன்னர் துருக்கியில் இருந்து சென்று குடியேறியவர்கள். அண்மைக் காலம் வரையில் ஈராக்கில் மட்டுமே குறிப்பிடத் தக்க யேசிடி சமூகம் பெரும்பான்மையாக இருந்து வந்துள்ளது. சிரியா, துருக்கி, ஆர்மேனியா, ஜோர்ஜியாவில், இன்னமும் யேசிடிகள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

யேசிடிகள் புலம்பெயர்வதற்கு முக்கிய காரணம், அந்தப் பிரதேசத்தில் யாரையும் நம்ப முடியாது என்பது தான். "ஒரே மொழி பேசும்", "சொந்த இனமான" (இஸ்லாமிய) குர்தியர்களைக் கூட நம்பத் தயாராக இல்லை. பெஷ்மேர்கா வீரர்கள் காட்டிக் கொடுத்த துரோகம் காரணமாகத் தான், அவர்களது பிரதேசத்தை ஐ.எஸ். ஆக்கிரமிக்க முடிந்தது. அதே காலத்தில், இன்னொரு அதிர்ச்சியையும் சந்தித்தனர்.

நேற்று வரையில் சகோதரர்கள் போன்று பழகிய அயலவர்களான அரேபியர்கள், ஐ.எஸ். வந்தவுடன் அவர்களுக்கு பின்னால் திரிந்தார்கள். ஒரு சில அரேபியர்கள் பாதுகாப்பு வழங்கியதை மறுக்க முடியாது. ஆனால், பெரும்பான்மையானோர் ஐ.எஸ்.க்கு காட்டிக் கொடுத்ததுடன், சொத்துக்களையும் சூறையாடினார்கள். அந்தப் பிரதேசத்தில், இனப் பிரச்சினை எந்தளவு ஆழமாக வேரூன்றி உள்ளது என்பதற்கு இது ஒரு உதாரணம். இதனால், எதிர்காலம் நிச்சயமற்றது என்பதை உணரும் யேசிடிகள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதே பாதுகாப்பு என்று நினைக்கிறார்கள்.

---

5-ம் பக்க தொடர்ச்சி...

விமானங்களும் விழுந்தன. அது எப்படி?

விமான பயணங்கள் திட்டமிடப்படுவது முழுக்க முழுக்க பிளைட் பிளான் (Flight Plan) அடிப்படையில். இதை இரண்டு வழியில் உருவாக்குகிறார்கள். ஒன்று manual flight plan. அதாவது மனிதர்களின் மூளையை வைத்து உருவாக்கப்படுவது. அடுத்தது கணினி மூலம் உருவாக்குகிறார்கள். இப்பொழுது வர்த்தக விமானங்கள் அனைத்தும் கணினி மென்பொருள் மூலம் உருவாக்கப்படும் பிளானைதான் பயன்படுத்துகின்றன.

புலிகள் உபயோகித்தது manual flight plan.

manual flight plan பாவிப்பதில் உள்ள சிக்கல் என்னவென்றால், இதில் அனுபவமுள்ள ஒருவரால் பயணப் பாதையை ஓரளவு ஊகிக்க முடியும். நல்ல தேர்ச்சியுள்ளவர்கள் என்றால் 98 சதவீதம் துல்லியமாக ஊகிப்பார்கள். இலங்கை விமானப்படையினரும் புலிகளின் பிளைட் பிளானை ஊகித்தார்கள்!

இந்த தாக்குதல்களிற்காக புலிகள் எப்படியான ரன்வேயை பயன்படுத்தி யிருப்பார்கள் என பலவித ஆய்வுகள் நடந்தன. கிழக்கு மேற்கு திசையை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்ட ரன்வேயாக இருக்காது. வடக்கு தெற்கை பேஸ் ஆக வைத்தோ, வடகிழக்கு தென்மேற்கு அல்லது வடமேற்கு தென்கிழக்கை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்ட ரன்வேயாக இருக்கும் என பலவித ஆய்வுகள் வந்தன.

ஆனால் உண்மையில் முதல் தாக்குதலிற்காக புலிகள் அமைத்த ரன்வே ஒன்றையும் பாவிக்கவில்லையென்பதே உண்மை. இறுதியாக 2009 இல் புறப்பட்ட விமானங்கள் இரண்டும் மாத்தளன் உப்பேரி கரையிலிருந்துதான் ரேக் ஓவ் ஆகின. முதல் தாக்குதலில் விடத்தல்தீவிற்கு அண்மையாக கிறவல் பாதையொன்றில் ரேக் ஓவ் ஆகின. அங்கிருந்து சிறிய பயணப்பாதையில் மேற்கு கரையால் கடலை கடந்து கட்டுநாயக்காவை கடந்து சென்று, கட்டுநாயக்கா விமானப்படை தளத்தை கடந்து சென்று, இடதுபுறமாக வட்டமடித்து, இன்னொரு இடது வட்டமடித்து மேலும் மூன்று நிமிட பயணதூரத்தில் விமானத்தளத்தின் தலையுச்சிக்கு வந்தன. கட்டுநாயக்காவில் தாக்குதல் நடத்திவிட்டு, நேராக பறந்தால், கடலோரமாக பாதுகாப்பாக மன்னாரிற்கு வந்து விடலாம். இடையில் உள்ள அநுராதபுரம், ஹிங்குராங்கொட, சிகிரியா விமானப்படை தளங்களை கடக்க வேண்டிய அபாயமில்லை.

ராடரின் கண்ணில் மண்ணைதூவ புலிகளின் விமானங்கள் உயரம்குறைவான பறத்தலை செய்திருந்தன. தரையில் விமானத்தின் சத்தம் தெளிவாக கேட்டதாக மக்கள் சொல்ல தொடங்க, அதை வைத்து பிளைட் பிளானை கணிக்க புலனாய்வு அமைப்புக்கள் முயன்றன. (தொடரும்)

# இந்தோனேசியாவில் சிக்கிய புலிகளின் முக்கியஸ்தர்... மறைத்து வைத்த சி.ஐ.ஏ!

## புலிகளின் ஆயுதக்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதற்கு இது மட்டுமா காரணம்?



## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 52

பீஷ்மர்

விடுதலைப்புலிகளின் ஆயுதக்கப்பல்கள் ஏன் தொடர்ச்சியாக மூழ்கடிக்கப் பட்டன? இலங்கை அரசாங்கம் அவற்றை எப்படி துல்லியமான குறிவைத்தன? அதுவரை இலங்கை கடற்படையால் குறிவைக்கவே முடியாமலிருந்த புலிகளின் கப்பல்களை, 2006 இல் இருந்து எப்படி தாக்கியழிக்க முடிந்தது? புலிகளின் ஆயுதக்கப்பல் ஒன்றுகூட 2006 இன் பின்னர் முல்லைத்தீவுக்கு வரவில்லையென கூறப்படுகிறதே, அது உண்மையா?

இவைதான் மில்லியன் டொலர் பெறுமதியான கேள்விகளாக இதுவரை ஈழத்தமிழர்களில் பெரும்பாலானவர் களிடம் உள்ளது. இதற்கு பதில் சொல்லப் போகிறேன்.

இந்த கேள்விகளிற்கு பதில் தெரிய வேண்டுமெனில் முதலில் புலிகளின் ஆயுதக்கடத்தல் கட்டமைப்பின் ஆரம்பத் திலிருந்து சில விடயங்களை சொல்ல வேண்டும்.

கே.பி என்கின்ற குமரன் பத்மநாதன் எப்படி புலிகளின் ஆயுதக்கடத்தல் வலை யமைப்பை உருவாக்கினார் என்பதை ஏற்கனவே விபரமாக குறிப்பிட்டிருக்கிறேன். இந்தியாவில் தங்கியிருந்த காலப்பகுதியில் வரதா பாய் என்கிற வரதராஜ முதலியார் ஊடான தொடர்புகளால் ஆப்கான் சென்றது. பின்னர் அங்கிருந்து தாய்லாந்து சென்றது, தென்னாசியாவை மையமாக வைத்து கே.பி புலிகளின் மெகா ஆயுதக்கடத்தல் வலையமைப்பை உருவாக்கியது பற்றியெல்லாம் குறிப் பிட்டிருந்தேன்.

தாய்லாந்து, மியன்மார் (முன்னைய பர்மா), கம்போடியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா ஆகிய நாடுகளைதான் கே.பி தளமாக வைத்திருந்தார். அதிலும் மியன்மாரும், தாய்லாந்தும் அவரது பிறந்த வீட்டைப்போல. இரண்டு நாடுகளின் அரசுமட்டத்தில் புலிளிற்கு நல்ல தொடர்பிருந்தது. குறிப்பாக மியன்மார் இராணுவ ஆட்சியாளர்கள் புலிகளுடன் நல்ல தொடர்பில் இருந்தனர். மியன்மாரின் பெயரில் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களும் புலிகளிற்கு கிடைத்துள்ளன என்றால் பார்த்து கொள்ளுங்கள்.

மியன்மாரும் புலிகளும் எவ்வளவு நெருக்கமாக இருந்தார்கள் என்பதை புரிய வைக்க ஒரு சம்பவம் சொல்கிறேன்.

2005 காலப்பகுதியில் மியன்மாரில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அங்கு தமிழர்கள் அதிகம் வாழும் பிரதேசம் தான் இதனால் அதிகம் பாதிக்கப்பட்டது. மியன்மாரில் நடக்கும் பிரச்சனைகளை வெளியுலகத்திற்கு தெரியாமல் மறைப் பதில் இராணுவ ஆட்சியாளர்கள் கில்லாடிகள். ஆனால், தமிழர்கள் அதிகம் பாதிக்கப்பட்டதால் இந்திய தமிழ் ஊடகங்களின் வழியாக தமிழர்கள் மத்தியில் இந்த செய்தி பரவலடைய தொடங்கியது. அது அப்படியே இலங்கைத்ததமிழ் ஊடகங்களிலும் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டது.

இந்த விடயம் எப்படியோ மியன்மாரின் இராணுவ ஆட்சியாளர்களின் காதுகளிற்கு போய்விட்டது. இந்த செய்தியை வெளியா காமல் தடுக்க இராணுவ ஆட்சியாளர்கள் விரும்பினார்கள். உடனே புலிகளிற்கு ஒரு மெசேஜ் அனுப்பினார்கள். எப்படி யாவது இந்த செய்தியை இனிமேல் வெளியாகாமல் செய்துவிடுங்கள் என அதில் கேட்கப்பட்டிருந்தது. உடனே தமிழ் ஊடகங்களிற்கு புலிகளின் மெசேஜ் போகவேண்டிய விதத்தில் போனது. அவ்வளவுதான். மொத்த தமிழ் ஊடகங் களும் மியன்மார் வெள்ளத்தை மறந்து விட்டன.

தாய்லாந்து ஆட்சியாளர்களுடன் புலி களிற்கு இவ்வளவு தொடர்பு கிடையாது. அங்கு கே.பியின் தனிப்பட்ட தொடர்புகளே இருந்தன. அங்குள்ள முக்கியமான மூன்று புலனாய்வு அமைப்புக்களுடனும் கே.பி எப்படியான உறவை பேணி, ஆயுதங்களை வாங்கிக்கொண்டிருந்தார் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். முக்கிய புலனாய்வு அமைப்புக்களுடன் உறவிலி ருந்தால் பிகெதற்கு பயப்பிட வேண்டும்? அரச உயர்மட்டத்தில் என்ன திட்டம் தீட்டப்பட்டாலும், மறுநொடி கே.பியின் காதிற்கு விலாவாரியாக அனைத்து விபரங்களும் வந்துவிடும்.

இதைவிட, தாய்லாந்து இன்னொரு விதத்தில் கே.பிக்கு ஸ்பெஷல். அதுதான் அவரது மாமியார் நாடு. கே.பி திருமணம் செய்தது ஒரு தாய்லாந்து பெண்ணை. அது காதல் கல்யாணம். அவர்களிற்கு ஒரு மகள் இருக்கிறார். அங்குள்ள பல்கலைகழகத்தில் படித்து, இப்பொழுது வேலை செய்ய ஆரம்பித்து விட்டார்.

ஆயுதக்கடத்தல், தாய்லாந்தில் பழங்கள் பொதியிடும் தொழிற்சாலை, உக்ரேனில் ஆயுத தொழிற்சாலை, சர்வதேச அளவில் போதைப்பொருள் கடத்தல் என உலகத்தின் மிகப்பெரிய கடத்தல் வலையமைப்பை நிர்வகித்து கொண்டிருந்தவர் கே.பி. இந்தகாலப்பகுதியில் ஆபிரிக்காவின் மிகப்பெரிய கடத்தல்காரர்கள் சிலரை புலிகளின் ஆயுத தரகர்கள் சந்தித்து பேசியிருக்கிறார்கள். ஆபிரிக்காவில் சொந்தமாக துறைமுகம் வைத்துள்ள மெகா கடத்தல்காரரே இருக்கிறார். கடத்தல் உலகத்தில் நம்பர் 1 ஆட்கள் புலிகள்தான் என்று இவர்கள் எல்லோரும் ஒத்துகொண்டுள்ளனர்.

இந்த கடத்தல் உலகமென்பது வித்தியாச மான உலகம். எச்சரிக்கையுணர்வு, புத்திகூர்மை, எதிராளிகளின் நகர்வுகளை கணக்கிட்டு முன்னரே மாற்று உத்திகள் வைத்திருப்பது, சந்துபொந்துகளிற்குள்ளால் நுழைய தினம்தினம் புதிய மார்க்கங்களை உருவாக்கல், தட்டி பேசுவது தொடக்கம் “தட்டுவது” வரை கையாள வேண்டிய உத்தியை பாவித்து எதிராளிகளை மடக்குவதென ஒரு சகலகலா வல்லவனால்தான் இந்த வலையமைப்பை இயக்க முடியும். கே.பியால் அது முடிந்தது.

1998 ஆம் ஆண்டு வரை சர்வதேச கடலில் சஞ்சரிக்கும் ஆயுதகப்பல்களில் பொதுமக்களே பணியாற்றினார்கள். 1998 இல் இந்த பணிக்காக போராளிகளை அனுப்ப தொடங்கி, 2000 ஆம் ஆண்டில் புலிகளின் அனைத்து ஆயுதக்கப்பல் களையும் போராளிகளே இயக்கினார்கள்.

இது புலிகளின் வெளிநாட்டு வலைய மைப்பில் முதலாவது குழப்பத்தை ஏற்படுத்தியது. கப்பலும், திட்டங்களும் கே.பியுடையவை. போராளிகள் சூசையின் ஆட்கள்.

கப்பலிற்கு அனுப்பப்பட்டவர்கள் அனேகர் சூசையின் மிக நம்பிக்கைக் குரியவர். அவர்கள் கே.பிக்கு அவ்வளவாக விசுவாசம் காட்டவில்லை. சூசையின் கட்டளைக்குத்தான் கீழ்ப்படிவார்கள். இதனால் அடிக்கடி சில குழப்பங்கள் ஏற்படுவது, இருதரப்பும் பேசி தீர்ப்பதென காலம் ஓடிக்கொண்டிருந்தது. 2000 ஆம் ஆண்டில் கே.பி கடல்வழியாக முல்லைத் தீவிற்கு வந்து பிரபாகரனை சந்தித்து விட்டு சென்றார். இந்த சந்திப்பிலும் இரண்டு கட்டளை மையங்களால் ஏற்படும் குழப்பங்கள் பற்றி கே.பி முறையிட்டி ருந்தார். அப்பொழுது சூசையையும் அழைத்து பேசி, இணக்கமாக செயற் படும் ஆலோசனையை பிரபாகரன் வழங்கியிருந்தார்.

ஆனால், அதே பிரபாகரன் இரண்டு வருடங்களின் பின்னர் 2002 இல் கே.பியை வெளிநாட்டு பொறுப்பாளர் பதவியிலிருந்து நீக்கினார்?


ஏனிந்த நீக்கம் நடந்தது?

அப்பொழுது புலிகளின் நிதி விவகாரங்களிற்கு பொறுப்பாக தமிழேந்தி அப்பா இருந்தார். அவர் நிதி விடயத்தில் எவ்வளவு இறுக்கமானவர் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். ஒரு ரூபாய் கணக்கென்றாலும் நூறு முறை கணக்கு பார்ப்பவர். அவ்வளவு இறுக்கமாக இருந்ததால்தான் பொருளாதார தடைகளின் மத்தியிலும் புலிகளால் தாக்குபிடிக்க முடிந்தது.

கே.பியின் நிதி விவகாரங்கள் தனி யானவை. கே.பியால் மட்டுமே அது கையாளப்பட்டு வந்தது. இந்த தொடரில் ஆயுத கடத்தல் பற்றிய விடயங் களை பேசத்தொடங்கிய சமயத்தில், ஆயுதக் கடத்தல் உலகத்தில் உள்ள ஏமாற்றுக் காரர்களை பற்றி குறிப்பிட்டிருந்தேன். ஏமாற்றுக்காரர்களை பற்றி முதலில் ஏன் குறிப்பிட்டேன் என்றால் ஆயுதக்கடத்தல் உலகத்தில் இயங்குவதென்றால் எவ்வளவு பெருந்தொகை பணம் அவசியம் என்பதை புரியவைக்கவே. சிலருக்கு கொடுத்த பணம், கோயில் உண்டியலில் போட்டதாகவே முடியும். மொத்தத்தில் பெரும்தொகை பணம் கையாளப்படும் உலகம் அது.

கே.பி கையாள்வது அளவிற்கு அதிகமான பணம், இவ்வளவு பணம் அவரிற்கு தேவையில்லையென தமிழேந்தி நினைத்தார். கே.பி தனது தனிப்பட்ட வங்கிக்கணக்கிற்கு பெருமளவு பணத்தை மாற்றி, சொத்து சேர்க்கிறார் என்பது தமிழேந்தியின் குற்றச்சாட்டு. சூசை, கஸ்ரோ, பொட்டம்மான் போன்றவர்களும் இதே நிலைப்பாட்டில்தான் இருந் தனர். ஆயுதக்கடத்தல் உலகத்தின் நிச்சயமற்ற தன்மையை பயன்படுத்தி கே.பி அளவிற்கதிகமான பணத்தை

தொடர்ச்சி அடுத்தபக்கம்...


பிரபாகரன் திருமணத்தில் அருகே கே.பி

கையாண்டுமிருக்கலாம். ஆனால் கே.பியில் கைவைக்க முன்னர் அவருக்கு மாற்றான ஏற்பாடு இருக்கிறதா என்பதை புலிகள் சரியாக கவனிக்கவில்லை. அல்லது புலிகள் கணித்தும், உள்ளக போட்டி பொறாமைகளே அவர்களிற்கு அழிவை கொண்டு வந்துவிட்டது.

கே.பியின் தொடர்பு இல்லாமல் தமது ஆட்களாலேயே ஆயுதங்களை கொண்டு வரலாமென சூசையும் பிரபாகரனிடம் பலமுறை சொல்லியிருக்கிறார். தரகர்களிடம் பேசி ஆயுதபேரத்தை முடிப்பது மட்டும்தானே கே.பியின் வேலை, அதை யாராவது செய்தால் மிச்சத்தை தாமே பார்த்துக்கொள்வோம் என சூசை சொல்லியிருந்தார். அப்பொழுது கஸ்ரோ அனைத்துலகதொடர்பகபொறுப்பாளராக இருந்தார்.

*1991* ஆனையிறவு சமரில் இடுப்பின் கீழ் உணர்விழந்த நிலையில் இருந்தவர். எப்பொழுதும் படுக்கையில் இருப்பதாலோ என்னவோ அதிகமான கோபம் அவருக்கு வரும். வடமராட்சியை சேர்ந்த கஸ்ரோ ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவன்.

கஸ்ரோவின் கீழ் புலிகளின் வெளிநாட்டு வலையமைப்பு முழுதாக வந்தது. இப்பொழுது கே.பிக்கு பதிலாக கஸ்ரோ, சூசையின் கூட்டு செயற்பாட்டின் கீழ் புலிகளின் ஆயுத கடத்தல் விவகாரம் முழுமையாக கைமாறியது.


கே.பி பொறுப்புக்களில் இருந்து ஒதுங்கி, தாய்லாந்தில் இயங்கி பழம் பொதியிடும் நிறுவனத்தை மட்டும் மேற்பார்வை செய்துகொண்டு இருக்குமாறு பிரபாகரன் அறிவித்தார். இந்த அறிவிப்புடன் புலிகளின் நீண்டகால ஆயுதக்கடத்தல் வலையமைப்பு செயலிழக்க ஆரம்பிக்கிறது.

இந்த அறிவித்தலை தொடர்ந்து கே.பி, பிரபாகரனிற்கு ஒரு கடிதம் அனுப்பினார். விடுதலைப்புலிகளின் ஆரம்பகாலத்தில் எப்படி அர்ப்பணிப்பாக செயற்பட்டேன் என்பதை மிக உணர்வுபூர்வமாக எழுதியிருந்தார். அந்த கடிதத்தில் கே.பி ஒரு சம்பவத்தையும் குறிப்பிட்டிருந்தார். *1970*களின் இறுதியில் புலிகள் துப்பாக்கி வாங்க முயன்றபோது கடுமையான பணத்தட்டுப்பாடு நிலவியது. என்ன செய்வதென எல்லோரும் திண்டாடிக் கொண்டிருந்தபோது, வீட்டிலிருந்து மோதிரமொன்றை விற்று கே.பிதான் பணத்தேவையை ஈடுசெய்திருந்தார்.

இந்த சம்பவங்களையெல்லாம் குறிப்பிட்டு, தன்னை ஏன் சந்தேகித்தீர்கள் என உருக்கமாக அந்த கடிதத்தை அனுப்பியிருந்தார். அந்த கடிதத்தை படித்ததும் பிரபாகரன் நெகிழ்ந்து விட்டார். சமாதான உடன்படிக்கை காலத்தின் பின்னர் புதுக்குடியிருப்பில் கணினி பிரிவினர் ஒரு முகாம் அமைத்திருந்தனர். புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் சாலையில் இருந்தது. அங்குதான் ஒரு நீச்சல்குளமும் இருந்தது. பிரபாகரன், பாலசந்திரன் குளிக்கும் படங்கள் அங்குதான் எடுக்கப்பட்டவை. அந்த சமயத்தில் மாதத்தில் ஒரு சனிக்கிழமையும் தளபதிகளை அழைத்து, அங்கேயே சமைத்து சாப்பிட்டு, பகல் பொழுதை கழிப்பார் பிரபாகரன். அன்று விசேடமாக ஆடு வெட்டப்பட்டு சமைக்கப்படும். கே.பியின் கடிதம் வந்ததற்கு அடுத்தடுத்த நாளில் வந்த சனிக்கிழமையில், கே.பி பற்றியே பிரபாகரன் பேசிக்கொண்டிருந்தார். மிகச்சில சந்தர்ப்பங்களில் மட்டும்தான் பிரபாகரன் நெகிழ்ந்திருக்கிறார். இதில் ஒன்று இந்த சந்தர்ப்பமும். பிரபாகரனின் திருமணத்தில் மாப்பிளை தோழனாக இருந்தவராயிற்றே கே.பி!

இதன்பின், மாதாமாதம் கே.பிக்கு ஒரு தொகை பணம் வழங்க பிரபாகரன் உத்தரவிட்டிருந்தார். அந்த சமயத்தில் கே.பி, கப்பலொன்றை கட்டிக்கொண்டிருந்தார். அதற்கான செலவையும் ஈடுகட்ட இந்த பணம்வழங்கப்பட்டது. யுத்தத்தின் முடிவில் கே.பியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக கூறி அரசாங்கம் கொழும்பிற்கு கொண்டு வந்த கப்பல்தான் அது.

கே.பி ஒதுங்கிய பின்னர் அரங்கத்திற்கு வந்தவர்கள் அனைவரும் புதியவர்கள் அவர்களிற்கு இந்த உலகத்தின் சூட்சுமம் புரியவில்லை. இந்த உலகத்தில் ஆரம்பத்திலிருந்து வளர்ந்து, அனைத்தையும் தீர்மானிப்பவராக வளர்ந்தால்தான் சிறப்பாக செயற்பட முடியும். சூசை, கஸ்ரோவின் ஆட்கள் அப்படியானவர்கள் அல்ல.



2016 - 17இல் கடற்படையால் அழிக்கப்பட்ட புலிகளின் ஆயுதக்கப்பல்கள்


கஸ்ரோ

கஸ்ரோ ஆயுதம் வாங்க உபயோகித்தவர்கள் பெரும்பாலும் அங்குள்ள பல்கலைகழகங்களில் படித்த மாணவர்கள், வைத்தியர்கள், நல்ல பொறுப்பில் இருந்தவர்கள்தான். வைத்தியர்களிற்கு ஊசி போட தெரியுமே தவிர, ஆயுதம் வாங்குவது சரிவராது.

இப்படியான சுவாரஸ்ய சம்பவமொன்றும் உள்ளது. லண்டனை சேர்ந்த மூர்த்தியென்பவர் வைத்தியர். வன்னிக்கு வந்து கஸ்ரோவை சந்தித்துவிட்டு, அமெரிக்காவிற்கு சென்று ஸ்கட் ஏவுகணை வாங்க முயன்றார். இன்றும் கம்பி எண்ணிக்கொண்டிருக்கிறார்.

இந்த அனுபவமின்னைகளுடன் இன்னொரு நெருக்கடியை புலிகள் எதிர்கொண்டனர். சூசை, கஸ்ரோவின் ஆட்கள் செயற்பட தொடங்கியதும், கே.பியின் ஆட்கள் பெரும்பாலும் ஒதுங்கிக்கொண்டு விட்டனர். புதியவர்களின் கீழ் செயற்பட அவர்கள் தயாராக இல்லை.

*2001* இரட்டை கோபுர தாக்குதலின் பின், உலகளாவிய ஆயுத இயக்கங்களிற்கு ஆயுதங்கள் செல்வதை தடுக்கும் நடவடிக்கையை அமெரிக்காவின் சி.ஐ.ஏ உளவுஅமைப்பு ஆரம்பித்தது. புலிகளின் ஆயுத கடத்தல் வலையமைப்புதான் உலகத்தில் பெரிய வலையமைப்பு என்பதை சி.ஐ.ஏ அறிந்ததும், அதை செயலிழக்க செய்யும் நடவடிக்கையில் இறங்கியது. இதன் முதற்கட்டமாக கே.பியிடன் செயற்பட்டுவிட்டு, தற்போது ஒதுங்கியுள்ளவர்களை குறிவைத்தனர். அவர்களை கண்காணிப்பு வலயத்திற்குள் கொண்டு வந்துவிட்டு, தம்முடன் ஒத்துழைக்கா விட்டால் கைது செய்து விடுவோம் என மிரட்டுவார்கள். ஏற்கனவே புதிய அணியிலுள்ள கோபம், புலனாய்வு அமைப்பின் மிரட்டல் எல்லாம் சேர, சி.ஐ.ஏ அமைப்புக்கு ஒத்துழைத்து செயற்பட ஆரம்பித்தனர்.

பிறகென்ன, ஆயுதக்கடத்தல் வலையமைப்பின் அத்தனை தகவல்களையும் விரல்நுனியில் வைத்திருக்க ஆரம்பித்தது சி.ஐ.ஏ!

கஸ்ரோவின் கீழ் ஆயுதக்கடத்தல் விவகாரங்களின் ஒரு பகுதியை கண்காணித்து வந்தவர் ஸ்ரீபன். கஸ்ரோ சம்பந்தமான பகுதிகளை ஸ்ரீபன் கவனித்து வந்தார்.

*2006* இல் ஸ்ரீபன் இந்தோனேசியாவில் தங்கியிருந்தார். அவரிடம் இரண்டு பாஸ்போர்ட்டுகள் இருந்தன. ஒன்று இந்தோனேசியா. மற்றையது இங்கிலாந்து. புலிகளின் தளங்களில் இந்தோனேசியாவும் ஒன்று என்பதால், இந்தோனேசிய புலனாய்வாளர்களுடன் சி.ஐ.ஏ அப்பொழுது நெருக்கமான உறவை பேண ஆரம்பித்து விட்டது.

ஒருமுறை இநதோனேசியாவிலிருந்து ஜேர்மனிக்கு செல்ல புறப்பட்டார் ஸ்ரீபன். ஜகார்த்தாவில் உள்ள கலீம் பேர்டனகுசும விமானநிலையத்திற்கு வந்த ஸ்ரீபனை சாதாரண சந்தேகத்தில் இந்தோனேசிய பொலிசார் ஏதோ விசாரித்தனர். இதை எதிர்பாராத ஸ்ரீபன் தடுமாற்றத்துடன் பதிலளிக்க, சந்தேகம் வலுத்த பொலிசார் அவரை சோதனையிட்டனர். பயணப்பைக்குள் இரண்டு பாஸ்போர்ட்கள் இருந்தன. இரண்டு பாஸ்போர்ட் இருந்ததால் சந்தேகம் வலுத்து, ஸ்ரீபனின் உடமைகளை சோதிக்க, ஒரு லப்ரொப் கணினி இருந்தது. அதை திறக்க, இந்தோனேசிய பொலிசார் மயக்கம் போட்டு விழாத குறையாக அதிர்ந்து விட்டனர்.

அவர்கள் பலநாள் தேடிய விபரங்கள் அதில் இருந்தன. கூரையை பிய்த்துக்கொண்டு கொட்டும் என்பார்களே... அப்படி. புலிகளின் ஆயுதக்கடத்தல் விபரங்கள் சில அதில் சேமிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது!

இந்த தகவல் சி.ஐ.ஏக்கு செல்ல, அவர்கள் இந்தோனேசியாவிற்கு வந்து ஸ்ரீபனை அள்ளிக்கொண்டு அமெரிக்காவிற்கு சென்றனர். கிட்டத்தட்ட இரண்டு மாதகாலம் சி.ஐ.ஏ யின் கட்டுப்பாட்டில் ஸ்ரீபன் இருந்தார். இந்த விடயத்தை மிக இரகசியமாக இந்தோனிய, அமெரிக்க புலனாய்வு அமைப்புக்கள் வைத்திருந்தன. ஸ்ரீபன் கைதானது, அமெரிக்காவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவது எதுவுமே புலிகளிற்கு தெரிந்திருக்கவில்லை. திடீரென அவருடைய தொடர்பு இல்லாமல் போய்விட்டது, என்ன நடந்திருக்கும் என்றுதான் யோசித்தார்களே தவிர, சி.ஐ.ஏ கைது செய்திருக்கும் என்று சந்தேகிக்கவில்லை. ஸ்ரீபனை கைது செய்து விசாரித்ததில் கிடைத்த தகவல்களை கொண்டு எடுத்தேன் கவிழ்த்தேன் பாணியில் எதையாவது செய்து புலிகளை எச்சரிக்கையடைய வைக்கும் நடவடிக்கையெதிலும் அமெரிக்க இறங்கவில்லை. இதனால் புலிகள் அந்த கோணத்தில் சிந்திக்கவுமில்லை.

ஸ்ரீபன் ஊடாக கிடைத்த தகவல்கள், கே.பியின் முன்னாள் செயற்பாட்டாளர்களிடமிருந்து கிடைத்த தகவல்களின் மூலம் புலிகளின் ஆயுதக் கடத்தல் செயற்பாட்டை அமெரிக்க முழுமையாக அறிந்தது. இரண்டு தரப்பிலிருந்தும் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் கப்பல்களை அடையாளம் கண்டனர். கப்பல்களின் நடமாட்டத்தை அறிய, ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்துடன் கூடிய சிறிய கருவிகளை கப்பலில் இரகசிய ஏஜெண்டுகளை வைத்து சி.ஐ.ஏ பொருத்தியதாகவும் ஒரு தகவல் உள்ளது. அதற்கான வாய்ப்பு உள்ளதென்ற அளவில் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அதற்கு ஆதாரம் கிடையாது.

கப்பல் நடமாட்டத்தை இரகசிய கருவிகள் பொருத்தித்தான் கண்காணிக்க வேண்டுமென்ற அவசியம் அமெரிக்காவிற்கு இருக்கவில்லை. ஒருமுறை கப்பலின் தரிப்பிடத்தை அடையாளம் கண்டுகொண்டால், பின்னர் செய்மதி வழியாக அதன் அத்தனை நகர்வையும் துல்லியமாக கண்காணித்து கொண்டிருக்கலாம்.

கே.பியின் ஆட்கள் மாறி, கஸ்ரோவின் ஆட்கள் வந்தாலும் ஆயுத பேரம், பணகொடுக்கல் வாங்கல், மற்றும் கப்பல்களின் பதிவு விடயங்கள் அனைத்தும் மாற்றப்படவில்லை. இவர்கள் மூலம் சர்வதேச செயற்பாடுகளில் என்ன நடக்கிறதென்ற அப்டேற்றை கே.பியின் ஆட்கள் பெற்றுக்கொண்டிருந்தார்கள். கே.பியின் ஆட்களில் சிலரை ஆரம்பத்தில் சி.ஐ.ஏ இரகசியமாக கடத்தியுமிருந்தது. அவர்களை கொல்வது அல்லது சிறைவைப்பது சி.ஐ.ஏயின் திட்டமல்ல. கே.பியிடமிருந்த பொறுப்புக்கள் கஸ்ரோவிற்கு மாற்றப்பட்டது, கே.பியின் ஆட்கள் பலருக்கு பிடிக்கவில்லை, அதிருப்தியுடன் இருக்கிறார்கள் என்ற விபரத்தை சி.ஐ.ஏ மோப்பம் பிடித்துவிட்டது. இரகசியமாக கடத்திச்செல்லப்பட்டவர்களை விசாரித்து தகவல்களை பெற்று, அவர்களை தமது ஆட்களாக வெளியில் உலாவவிடுவதே சி.ஐ.ஏயின் திட்டம்.

இப்படி சி.ஐ.ஏயின் ஆட்களாக உலாவிய கே.பியின் பழைய ஆட்களின் மூலமும் கப்பல்களை அடையாளம் கண்டிருக்கலாம். எப்படியோ புலிகளின் கப்பல்கள் வரிசையாக தாக்கப்பட்டு கொண்டேயிருந்தன.

எப்படியாவது ஆயுதங்கள் வன்னிக்கு வந்தால்தான் யுத்தத்தை வெல்லலாம். கடற்புலிகளால் ஒன்றும் செய்ய முடியாமலிருக்கிறதென்ற அதிருப்தி இயக்கத்தில் உருவாக தொடங்க, கடற்புலி தளபதி சிறீராமிற்கு ஒரு ஐடியா வந்தது. சிறீராம் யார் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன் கொல்லப்பட்ட இசைப்பிரியாவின் கணவன்.

நிக்கோபார் கடற்பரப்பிற்கு சிறிய படகுகளில் செல்ல திட்டமிட்டார்.

(தொடரும்)





மலேசிய காவல்துறையில் மன்மதர்கள் இருப்பார்களோ என்னவோ. இரண்டு வாரங்களின் முன்னர் மூவார் பகுதியிலுள்ள இரவுநேர கேளிக்கை விடுதியில் ஏழு காவல்துறை அதிகாரிகள் கெட்ட ஆட்டம் போட, அதை யாரோ ஒரு பேஸ்புக் போராளி வீடியோ எடுத்து வெளியிடஞ் ஏழு பேரும் கசையடி வாங்காத குறையாக விசாரணை வளையத்தில் இருக்கிறார்கள். இந்த பரபரப்பு அடங்குவதற்குள் இந்தவாரம் அடுத்த சர்ச்சை தோன்றியுள்ளது. இரவு ரோந்தில் ஈடுபட்ட காவல்த்துறை அதிகாரியொருவர், கவர்ச்சியாக உடையணிந்த யுவதியொருவருடன் கொஞ்சம் எல்லைமீறி 'நட்பு' பாராட்டும் புகைப்படம் ஒன்று சமூகவலைத்தளங்களில் பரவி வருகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரியை பதவியிலிருந்து இடைநிறுத்தி விட்டதாக மலேசிய காவல்துறை அறிவித்தாலும், உலகளவில் ட்ரெண்டியான இந்த புகைப்படத்தை வைத்து, மலேசியர்களை வறுத்தெடுக்கிறார்கள்.

**மொத்தத்தில் கையை பிடித்த அதிகாரியால், கையை பிசைந்து கொண்டிருக்கிறது மலேசியா!**

யாராவது கட்டும் வீட்டை பார்த்து அப்படியே நாமும் வீடு கட்டுவது, தெருவில் யாராவது ஒருவர் அடிக்கும் பெயிண்டை பார்த்து, நாமும் அப்படியே அடிப்பதென தமிழர்களிடம் விசித்திர குணம் ஒன்றிருக்கிறது. தெருவுக்குள் நுழைந்தால் எல்லா வீடும் ஒரே நிறத்தில் இருக்கும் இடங்களெல்லாம் உள்ளன. கனடாவில் நடந்த இந்த சம்பவத்தை படித்தால் இனி கொஞ்சம் யோசிப்பார்கள். ரொரண்டோவில் உள்ள ஒருவர் ஏழு வருடங்கள் திட்டமிட்டு ஒரு வீட்டை கட்டினார். ஒவ்வொரு அங்குலத்தையும் பார்த்து பார்த்து கட்டினார். அந்த பகுதியிலேயே தனித்துவமான வீடாக இருந்ததால் அதன் பெறுமதி கூடிக் கொண்டே போனது. அண்மையில் பக்கத்து தெருவிலுள்ள ஒருவர் அந்த வீட்டைப் போலவே தனது வீட்டையும் கட்டி விட்டார். இதனால் ஆத்திரமடைந்த ஒரிஜினல் வீட்டுக்காரர் நீதிமன்றத்திற்கு போய்விட்டார். தனது வீட்டைப்போல இன்னொரு வீடு கட்டப்பட்டதால் வீட்டின் மதிப்பு குறைந்து விட்டதென்பது அவரது வாதம். இந்த விசித்திர வழக்கை விசாரித்த நீதிமன்றம், ஒரு வீட்டை பார்த்து கொப்பி அடிக்ககூடாதென எச்சரித்துள்ளது.

**கொப்பியில் நம்மள மிஞ்சிடுவாங்கள் போல!**

நெதர்லாந்தைச் சேர்ந்த ரூபென் வானும் பொப் ஸ்பிக்மனும் இணைந்து தெருவில் உள்ள சிகரெட் துண்டுகளை சுத்தம் செய்ய காகங்களுக்கு பயிற்சியளிக்கிறார்கள். அவர்கள் ஒரு கருவி உருவாக்கியுள்ளனர். சில காகங்களுக்கு சிகரெட் துண்டுகளை எடுத்து வந்து, கருவியில் போடும்படி பயிற்சி அளித்தார்கள். சரியாக அந்தக் கருவியில் சிகரெட் துண்டுகளைப் போட்டால், கருவியிலிருந்து வேர்க்கடலைகள் வெளிவரும். அதைச் சாப்பிட்டுவிட்டு, அடுத்த சிகரெட் துண்டைத் தேடிப் பறக்க ஆரம்பித்துவிடுககின்றன. இப்படிக் கடலைகளைச் சாப்பிடுவதற்காக சிகரெட் துண்டுகளைத் தேடித் தேடி எடுத்து வருகின்றன. எதிர்பார்த்ததை விடச் காகங்கள் சிறப்பாக வேலை செய்கின்றன.



இதனால் பொது இடங்களில் சிகரெட் துண்டுகள் குறைந்து வருகின்றன. கொஞ்சம் உணவைக் கொடுத்துவிட்டு, அதிக வேலைகளை வாங்குவதாக இப்பொழுது உணர ஆரம்பித்துள்ளார்களாம் கருவியை உருவாக்கிய இருவரும். சிகரெட்டை எடுத்து வருவதால் காகங்களிற்கு உடல்நல கேடு ஏற்படுகிறதா என்பதை இப்பொழுது ஆராய்ந்து வருகிறார்களாம்.

**உழைத்து வாழும் காகங்கள்!**



நம்மூரில் தெருவுக்கு தெரு உள்ள கிளினிக்குகளில் பனடோல் வாங்குவதை போல தென்கொரியாவில் முகமாற்று அறுவை சிகிச்சை (பிளாஸ்டிக் சேர்ஜரி) செய்து கொள்ளலாம். இப்படியொரு வாய்ப்பிருக்க எதற்கு விட்டுவைக்க வேண்டுமென மூன்று சீன பெண்கள் அங்கு சென்றுள்ளனர். இப்படியிருந்த மூக்கை அப்படி.... அப்படியிருந்த உதட்டை இப்படியென முகத்தை ஒரு மார்க்கம் பண்ணிவிட்டு, சொந்த ஊருக்கு மூவரும் கிளம்பியிருக்கிறார்கள். விமானநிலையத்தில் இருந்த அதிகாரிகளிற்கு பெரும் குழப்பமாகி விட்டது. பாஸ்போர்ட்டில் உள்ள படமும், அறுவை சிகிச்சைக்குபின்னான முகமும் வேறுவேறாக இருக்க, அதிகாரிகள் மூவரையும் தடுத்து விட்டனர். "சத்தியமா நம்புங்கப்பாஞ் என்னுடைய பாஸ்போர்ட்தான் இது" என அவர்கள் கற்பூரம் கொளுத்தாத குறையாக சத்தியம் செய்தும் தென்கொரிய அதிகாரிகள் நம்பவில்லை. அவர்களை புகைப்படம் எடுத்து அதிகாரியொருவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

**பலருக்கு ஓவர் மேக்அப் செய்தாலே இதுதான் நிலைமை!**

நடிகர் ஜக்கிசானிற்கு அறிமுகம் தேவையில்லை. இவரது மகன் எட்டா நங், தன்னையொரு ஓரினச் சேர்க்கையாளர் என இன்ஸ்டகிராமில் பதிவிட்டுள்ளார். "ஒரு வேளை யாருக்கும்மெமோ (குறிப்பாணை) கிடைக்கவில்லையென்றால், நான் ஒரு ஓரினச்சேர்க்கையாளர்" என்று எட்டா குறிப்பிட்டிருக்கிறார். பின்னர் சிறிந்து நேரத்தில் அந்தக் கருத்தை அவர் நீக்கிவிட்டார். ஜாக்கி சானுக்கு முதல் மனைவி நடிகை லிங் ஃபெங் ஜியாவ் மூலமாக ஜெய்சி என்ற மகன் இருக்க, முன்னாள் ஹொங்ஹொங் அழகி எலைன் நங் மூலமாகப் பிறந்தவர்தான் எட்டா நங்.

**அவளும் பெண்தானே ஜக்கி விட்டுவிட வேண்டியதுதான்.**

அமெரிக்காவில் செய்யாத குற்றத்திற்காக 23 வருடம் சிறையில் இருந்த லாமோண்ட் மெக்கன்ரயர் கடந்த வாரம் விடுதலையாகியுள்ளார். தனது 17வது வயதில் இரட்டை கொலையொன்றுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தில் லாமோண்ட் கைதானார். பின்னர் பொய்யான குற்றச்சாட்டுக்களால் 23 வருடங்கள் சிறையில் கழித்தார். தனது மகனிற்காக தாயார் நடத்திய நீண்ட சட்டப்போராட்டத்தின் முடிவில் இவர் விடுதலையாகியுள்ளார். சிறைக்கு வெளியில் வந்ததும், தாயும் மகனும் கட்டியணைத்து அழுததை பார்த்து மொத்த உலகமும் அழுதது.

**அமெரிக்காவின் பார்வதி அம்மாள்!**



2018ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவிருக்கிற ரஷிய அதிபர் தேர்தலில் போட்டியிடுகிறார் பெண் தொலைக்காட்சி தொகுப்பாளர் க்சேனியா சோப்சாக் (35). சோப்சாக் போட்டியிடுவதை வரவேற்றுள்ள அதிபரின் கிரம்ளின் மாளிகை, அது அரசமைப்புச் சட்டப்படியான நடவடிக்கை என்று கூறியுள்ளது. அதே நேரம், சோப்சாக் போட்டியிடுவது எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்திவிடும் என்ற கருத்தும் சில விமர்சகர்களால் முன்வைக்கப்படுகிறது. "தாம் நவல்னியை ஆதரிப்பதாகவும், அவர் போட்டியிடுவதற்கு உள்ள தடை நீங்கினால் தாம் போட்டியில் இருந்து விலகிவிடுவதாகவும் சோப்சாக் கூறியுள்ளார். ஆனால், சோப்சாக் ஆளும் கட்சியின் கையாள் என்றும், முறைகேடாக நடத்தப்படும் இத் தேர்தலுக்கு ஒரு நியாயமான தோற்றத்தை அளிப்பதற்காக போட்டியில் இறக்கப்பட்டவர் என்றும் நவல்னி விமர்சனம் செய்துள்ளார். விளாதிமிர் புதினின் நீண்ட கால குடும்ப நண்பரான சோப்சாக் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் உள்ள யிபின் மக்கள் நீதிமன்றத்தில் விவாகரத்துக்காக ஒரு தேர்வு நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வில் பங்கேற்காதவர்களுக்கு விவாகரத்து விண்ணப்பம் வழங்கப்படுவதில்லை. நீதிபதி வாங் ஷியு இந்தத் தேர்வு முறையைக் கொண்டு வந்திருக்கிறார். தற்போது அதிக எண்ணிக்கையிலான ஜோடிகள் விவாகரத்து கேட்டு வருகிறார்கள். அவர்களுக்கு போதுமான அவகாசம் கொடுத்து, ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்க எண்ணினார் வாங் ஷியு. அதற்காகவே தேர்வு முறையை அறிமுகம் செய்துள்ளார். கணவனும் மனைவியும் தனித் தனியாகத் தேர்வு எழுத வேண்டும். 60 மதிப்பெண்களுக்கு மேல் வாங்கியிருந்தால், அவர்களுக்கு விவாகரத்து விண்ணப்பம் வழங்கப்படுகிறது. குறைவாக மதிப்பெண்கள் பெற்றால், அவர்கள் விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சேர்ந்து வாழ வேண்டியதுதான். இந்தத் தேர்வில் கோடிட்ட இடங்களை நிரப்புதல், குறு வினாக்கள், சிறிய கட்டுரை என்று 3 பகுதிகள் உள்ளன. குடும்ப உறுப்பினர்களின் பிறந்தநாள், பிடித்த உணவுகள், திருமண நாள், அவர்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள், இணையின் நல்ல விஷயங்கள், தீய விஷயங்கள், திருமணம், குடும்பம் என்பது குறித்து உங்களது கருத்துகள் போன்ற கேள்விகள் இடம்பெறுகின்றன. தேர்வு எழுதியவுடன் அந்தத் தாளை வாங்கி, இருவர் முன்பும் நீதிபதி படித்துக் காட்டுவார். சரியான விஷயத்தைக் கோடிட்டுக் காட்டி, அவர்கள் ஒருவர் மீது ஒருவர் எவ்வளவு அன்பாகவும் அக்கறையாகவும் இருக்கிறார்கள் என்பதைப் புரிய வைப்பார். இதன்மூலம் நிறைய தம்பதியர் மீண்டும் சேர்ந்து வாழ முயற்சி செய்வதாகச் சொல்லி விடுகிறார்கள். இதையும் மீறி விவாகரத்து வேண்டும் என்பவர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன.


HR
HOTEL PRINCESS ROSE
வவுனியாவில்
சகல வசதிகளுடன் கூடிய அறைகளை பெற்றிடவும் உங்கள்
சுபகாரியங்களை அனைத்து வசதிகளும் பொருந்திய மண்டபத்தில்
நடாத்திடவும் மற்றும் சைனிஸ் உணவுவகைகளை சுவைத்திடவும்
HOTEL PRINCESS ROSE
இல.15, 4வது ஒழுங்கை குருமன்காடு, வவுனியா
தொ.பே: 024 222 8000 / 0773955651


SRI LANKA RED CROSS SOCIETY
இலங்கை
செஞ்சிலுவை சங்கம்
வவுனியா கிளையின்
குறைந்த செலவில் 24மணி நேரசேவை
✓ சௌகரியமான பிரயாணத்திற்க்கு வாகன வசதி
✓ நோயாளர்களை ஏற்றி செல்வதற்கான வாகன வசதி
✓ இறந்த உடல்களை ஏற்றி செல்வதற்க்கான வாகன வசதி
தொடர்புகளுக்கு
பூங்கா வீதி, வவுனியா
Tel : 0242222447, 0242223304 Fax: 0242222447


அனைத்து பொருட்களையும்
தரமானதாகவும், நியாயமான
விலையிலும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்...
கண்ணன்
பல்பொருள் வாணிபம்
சிதம்பரம் வீதி, வவுனியா


இந்திய சுற்றுப்பயணத்திற்கான விசா ஒழுங்குகள் மற்றும்
இந்தியாவில் தங்குவதற்கும், சுற்றுப்பயணத்தினை மேற்கொள்வதற்குமான வாகன ஒழுங்குகள்,
அனைத்து நாடுகளுக்குமான விமான ரிக்கற்றுகளையும் ஒரே சேவையில் பெற்றிட...
R.P Travel
தொடர்புகளுக்கு: 076 592 1290







இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 22.10.2017 அன்று வெளியிடப்பட்டது.